25

ஸம்புடம் 3]　　வருஷச் சந்தா ரூ. 1 8 0.　　ஸஞ்சிகை [12

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



STATE OF TRAVANCORE … 3 JAN 1938 … MADRAS

பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
(ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
…சிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது
1937-ஹு டிஸம்பர்-மீ　　[மார்கழி-மீ

JL
இரண்டாம், 13385
1937·3·12
189914

விஷயம்.

1. ஸுபாஷிதநீவீ [தொடர்ச்சி] 177—221

கூந்தல் தைலம்

ஆயுர்வேத முறைப்படி வெகுநாள் உழைத்து கண்டுபிடித்தது.

தலை சுற்றல், மூளை மந்தம், கண் எரிச்சல், தலை நோய் முதலியவைகளை எளிதில் கண்டிக்கும்.

ஸ்திரீகளின் வரப்ரசாதினி. தலைமயிரை வளரச் செய்வதோடு பளபளப்பையும், மிருது தன்மையையும் கொடுக்கும்.

எஸ். விஸ்வநாதம் கம்பெனி, பந்தர்தெரு, மதருவ்ஸ்.

எல்லோருக்கும் ஆரோக்கியத்தைக் கொடுக்கக்கூடியது.

எங்களின் 'ஜே' மிக்ஸ் பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ஸுபாஷித நீவீ.

॥ ஸுஹாஷித நீவீ ॥

அன்பில். வெ. கோபாலாசார்ய ஸ்வாமியால்
அருளிச்செய்யப்பட்ட
எளிய தமிழ் வ்யாக்யானத்துடன் கூடியது.

கவர்ன்மெண்ட் அஸிஸ்டெண்ட் ஸிகரிடரி
ஸ்ரீ-உப-வே. கமலாபுரம்.
ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின்
பொருளுதவியைக்கொண்டு,

ஸ்ரீரங்கம்
ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷண ஸபையாரால்

கும்பகோணம்
ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈச்வர மார்கழி.
1937,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JAN 1938
MADRAS

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ.

(ஓர் மாதப்பத்திரிகை)

ஸம்புடம் 3	ஈச்வர-ஸூ மார்கழி-மீ	ஸஞ்சிகை 12

ஜீவனம் ஜகதாம் ஜீயாத் கவிதார்க்கிக ஸூக்திஷு ।
ஸூக்தீனாம் ஸம்ரக்ஷணே தேசிகஸ்ய வேங்கடேசார்யஸ்ய ஸதா ॥

184914

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம்ரக்ஷணஸபை, ஸ்ரீரங்கம்.

14—12—1937-ல் ஸ்ரீரங்கம் ஸ்ரீதசாவதாரஸந்நிதியில் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதியூயூ எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அழகியசிங்கர்கள் அக்ராஸனத்தில் நடந்த ஷை ஸபையின் ஐந்தாவது வார்ஷிகமஹாஸதஸ்ஸில் ஸ்வாமி அனுமதியுடன் ஏகமனதாகப் பின் கண்ட விஷயங்கள் தீர்மானம் செய்யப்பட்டன.

I. 1938-வருஷத்துக்கு ஷை ஸபையின் தலைமை ஸபைக்கு நிர்வாஹிகள்—

1. ஸ்ரீ-உ.வே. A. V· கோபாலாசார்யர் ஸ்வாமி,
M. A. BL. Advocate. அக்ராஸனாதிபதி.
2. „ Dewan Bahadur. S. ராகவய்யங்கார்ஸ்வாமி.
Retired judge. உபஅக்ராஸனாதிபதி
3. „ T. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி B. A. L T.
காரியதர்சி, & பொக்கிஷதார்.
4. „ அன்பில். ஸௌம்யநாராயணாசார்யன்.
பொதுக்காரியதர்சி.

சென்னை-600 ...

ஸ்ரீ-உவே

5. „ Rao Sahib R. நாராயண அய்யங்கார் ஸ்வாமி Rtd. Dy. Superintendent of police — நிர்வாஹ மெம்பர்.

6. „ Rao Sahib. K. R. ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி B. A. Rtd. Customs officer. — ஷை

7. „ N.R. ஸ்ரீநிவாஸய்யங்காரஸ்வாமி B.A. Rtd. Sub Magistrate — ஷை

8. „ A. கோபால அய்யங்கார் ஸ்வாமி — ஷை

9. „ V. கோபாலய்யங்கார் ஸ்வாமி M. A. Sanskrit Professor, St. Joseph's college Trichi. — ஷை

II. ஷை 1938- வருஷத்துக்கு சென்னை கிளை ஸபையின் நிர்வாஹிகள்:—

1. ஸ்ரீ-உ-வே, கமலாபுரம் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி — கிளை அத்யக்ஷர்.

2. „ பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி — உப அத்யக்ஷர்.

3. „ T. ராஜகோபாலாசார் ஸ்வாமி B. A. B. L. Rtd. SubJudge & Advocate — காரியதர்சி அண்டு பொக்கிஷதார்.

4. „ V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி B. A B. L. Advocate. — நிர்வாஹமெம்பர்.

5. „ S. ஆராவமுதய்யங்கார் ஸ்வாமி B. A. B. L. Advocate. — ஷை

6. „ R. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் ஸ்வாமி B. A. Revenue Secretariate. — ஷை

7. „ D. ராமஸ்வாமிஅய்யங்கார் ஸ்வாமி B. A. B. L. Advocate. — ஷை

பத்திரிகை.

1. "ஸம்ரக்ஷிணீ" யும் "தீபிகையும்" ஒரே பத்திரிகையாக "ஸ்ரீவேதாந்ததீபிகை" என்ற பெயருடன் 1938-வரு ஜனவரிமீ முதல் சென்னையிலிருந்து வெளிவரும்.

2. ஸ்ரீஸம்ரக்ஷிணீ பத்திராதிபர் ஷை தீபிகைக்கு அதிபராகச் சேர்ந்து நடத்தப்படும்.

3. பத்திரிகை வருஷச்சந்தா 2-ரூ; போஷகர் 5-ரூ; ஜீவிய சந்தா 50-ரூபா.

4. ஸ்ரீரங்கம் தலைமைக் கார்யாலயத்து நிர்வாஹிகளும், சென்னை கிளை காரியாலயத்து நிர்வாஹிகளும் "தீபிகை" யை நன்கு நடக்குமாறு செய்யவேணும். அடுத்த வருஷத்துக்கு இந்தக் காரியத்தையே பிரதானமாகப் பிரசாரம் செய்வார்கள்.

5. ஸ்ரீரங்கத்தில் கார்யதர்சிகளும், சென்னையில் பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியும் ஷை பத்திரிகையின் ஏஜண்டுகளாயிருந்து சந்தாதார் சேர்ப்பது, ரசீதுகொடுப்பது, பணம் வசூலித்து ஏற்பாடுகள் செய்வார்கள்,

6. மேலே கண்ட காரியங்களை ஸரிவரச்செய்ய சாதாரண மெம்பர்கள் வசூலில் ரூபாய்க்குக் கால் ரூபாய் வீதமும், போஷகருக்கு ரூபாய் ஒன்று வீதமும், ஜீவியசந்தா மெம்பர்கள் சேர்க்க ரூபாய் ஐந்தும் உசிதம்போல் சிலவு செய்து கொள்ளலாம்.

7. பிரதி மாதமும் வரவு சிலவு கணக்குகள் T. ராஜகோபாலாசார்யர் ஸ்வாமிக்கு அவர் ஏற்படுத்தும் நியமங்கள்படி செய்ய வேண்டும்.

8. சென்னை கிளை கமிட்டியார் ஸ்ரீரங்கம் தலைமை ஆபீஸ் கமிட்டியாரால் தீர்மானித்துச் செய்யும் விதிகள் ப்ரகாரம் காரியங்களை நன்கு நடத்துவார்கள்.

9. ஷை (தீர்மானங்கள்) நியமனங்கள் ஒரு வருஷத்துக்கு இருக்கும்.

10. "ஸம்ரக்ஷணஸபையின்" வரவு சிலவு ஆஸ்தி கடன் முதலியவைகளை பிரசாரஸபையாரிடம் இன்றுடன் ஒப்புவிக்கப்பட்டது. ஜனவரி (1938) 1-உ முதல் ஷை ஸபையாரால் கொடுக்கப்படும் ரசீதுகளை உபயோகப்படுத்தவேண்டும்.

11. "ஸம்ரக்ஷணஸபையின்" கொள்கைகளை முற்றிலும் அநுஸரித்து "தீபிகையில் வ்யாஸங்கள் வெளியிடப்படும்.

12. ஸபையின் புஸ்தகங்கள், மற்ற இருப்புகள், வஸூலாக வேண்டிய பாக்கிகள் பூராவும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபாவின்சார்பாக ஸ்ரீ-உப-வே. தோட்டாலம் ராஜகோபாலாசார் ஸ்வாமியினிடம் ஒப்புவிக்கவேண்டியது.

13. ஷை "தீபிகை" யின் வரவு செலவு ஆஸ்தி கடன் பொருப்புகள் ஒன்றிலும் ஸம்ரக்ஷண ஸபையோருக்கு ஸம்பந்தம் இல்லை.

14. ஸ்ரீதேசிகன் ஸம்ப்ரதாயத்தின் அபிவ்ருத்தியை உத்தேசித்து, சென்னை கிளை கமிட்டியார்கள் மேலே கண்ட தீர்மானங்களை க்ருபை கூர்ந்து அங்கீகரித்து நிறைவேற்றிவைக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

15. "ஸம்ரக்ஷிணீ" பத்திரிகையில் இதுவரையில் ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகளுக்குத் தமிழ் வ்யாக்யானங்கள் போட்டுவந்தபடிக்கு தீபிகையில் 16-பக்கங்களுக்குக் குறையாமல் ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தி வ்யாக்யானங்கள் போடப்பட்டு வரும்.

"ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்திஸம்ரக்ஷிணீ" யை ஆதரித்துவரும் சந்தாதார்கள் இனி 1938-ஞு ஜனவரி மாதத்தில் "வேதாந்த தீபிகை" என்னும் பெயருடனே வரும் பத்திரிகையைப் பெற்று நம் ஸம்ப்ரதாயத்துக்கு ஒரே பத்திரிகை பொதுவாய் நடத்த வேணுமென்ற யோஜனையில் திருவுள்ளம் பற்றும்படி பிரார்த்திக்கிறோம்.

மேலே கண்ட தீர்மானங்கள் திவான்பஹதூர் S. ராகவய்யங்கார் ஸ்வாமியும் ராவ்ஸாஹிப் R. நாராயண அய்யங்கார் ஸ்வாமியும் சேர்ந்துகொண்டுவந்து மஹாஸபையோருடையவும் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸ்வாமிகளுடையவும் பூர்ண ஆதரவுடன் ஏகமனதாய்த் தீர்மானித்து நிறைவேற்றினார்கள்.

அக்ராஸனுதிபதி.

𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 𑌕𑌦𑌰𑍍𑌯𑌶𑍍𑌚 𑌗𑍃𑌹𑍀𑌤𑌸𑍍𑌥𑌿𑌰𑌲𑍋𑌭𑌤𑌃 ।
𑌸𑍍𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 𑌸𑌞𑍍𑌚𑌿𑌨𑍋𑌤𑍍𑌯𑍇𑌵 𑌪𑌰𑌾𑌨𑌰𑍍𑌥𑍈𑌰𑌯𑍋𑌜𑌯𑌨𑍍 ॥

வதாங்யச்ச கதர்யச்ச க்ருஹீதஸ்திரலோபத: |
ஸ்வாநர்த்தாங் ஸஞ்சிநோத்யேவ பராநர்த்தைரயோஜயங் ||

(வ-ரை) 𑌕𑌦𑌰𑍍𑌯𑌃 [கதர்ய:] - க்ருபணனுயிருப்பவன், 𑌗𑍃𑌹𑍀𑌤𑌸𑍍𑌥𑌿𑌰𑌲𑍋𑌭𑌤𑌃 [க்ருஹீதஸ்திரலோபத:] - கைக்குவந்தது ஸ்திரமாகச் செலவழியாமல் இருக்கவேண்டும் என்று லோபத்தால், (பணத்தாசையால்,) 𑌪𑌰𑌾𑌨𑍍 [பராந்] - பிறரை, 𑌅𑌰𑍍𑌥𑍈𑌃 [அர்த்தை:] - த்ரவ்யங்களால், 𑌅𑌯𑍋𑌜𑌯𑌨𑍍 [அயோஜயந்] - ஸம்பன்னராக (கூடியவராக)ச் செய்யாமல், (பிறருக்கு ஒன்றும் கொடாமல்,) 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌅𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 [ஸ்வாந் அர்த்தான்] - தம் பொருள்களை, 𑌸𑌞𑍍𑌚𑌿𑌨𑍋𑌤𑍍𑌯𑍇𑌵 [ஸஞ்சிநோத்யேவ] - சேர்க்கவே சேர்க்கிறான். இது அவன் நினைப்பு. உண்மை என்னவென்றால், 𑌸𑍍𑌵𑌾𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑍇𑌵 [ஸ்வானர்த்தானேவ] - தனக்கு அனர்த்தங்களையே, 𑌸𑌞𑍍𑌚𑌿𑌨𑍋𑌤𑌿 [ஸஞ்சிநோதி] - தேடிச்சேர்க்கிறான். 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌶𑍍𑌚 [வதாந்யச்ச] - உதாரனும், 𑌗𑍃𑌹𑍀𑌤𑌸𑍍𑌥𑌿𑌰𑌲𑍋𑌭𑌤𑌃 [க்ருஹீதஸ்திரலோபத:] - கிடைத்த பொருள் சாச்வதமாக ரக்ஷிதமாயிருக்கவேணுமென்று, 𑌸𑍍𑌵𑌾𑌨𑍍 𑌅𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 [ஸ்வாந் அர்த்தான்] - தன் தனங்களை, 𑌪𑌰𑌾𑌨𑌰𑍍𑌥𑍈𑌃 𑌅𑌯𑍋𑌜𑌯𑌨𑍍 [பராநர்த்தை: அயோஜயந்] - பிறர் பிடையில்லாமல், 𑌸𑌞𑍍𑌚𑌿𑌨𑍋𑌤𑍍𑌯𑍇𑌵 [ஸஞ்சிநோத்யேவ] - சேர்க்கவே சேர்க்கிறான்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்- வதாந்யன் உதாரமாக வழங்கும் வள்ளலார். கதர்யர் ஈகையே யில்லாத க்ருபணர். இருவருக்கும் பொருந்தும்படி விசேஷணங்களை யமைத்து, இருவரையும் வேடிக்கையாகவே ஜோடி சேர்க்கிறார். தனத்தை நல்ல பாத்ரங்களில் தானம் செய்தால், பகவத்க்ருபையால் தனம் பெருகும், சாச்வதமாகும்; தானத்தால் சாச்வதச்ரேயஸ்ஸூ கிடைக்கும். தானம் பண்ணுகிறவரும் தனத்தின் பெருகுதலையும் சாச்வதச்ரேயஸ்ஸையும் தானத்தால் பெறுகிறார். அவருக்கும் ஸ்திரத்தில் ஆசை (லோபமும்) உளதென்று சொல்லலாம். க்ருபண

ரும் தனமழியக்கூடாது, ஸ்திரமாயிருக்கவேணுமென்று லோபத்தால் தனத்தைக் கொடாமலிருக்கிறார். "தானம், போகம், நாசம் ஆகிய மூன்று கதிகள் தனத்திற்கு உண்டு. எவன் தானம் செய்வதில்லையோ, தானும் அநுபவிப்பதில்லையோ, அவனுடைய தனத்திற்கு மூன்றாவது கதியான நாசம்தான் ஸித்திக்கும்" என்பது நீதிவசனம். தனம் நாசமடையாமல் ஸ்திரமாயிருக்க எண்ணி தானம் செய்யவேணும். க்ருபணர் தானம் போகம், இரண்டையும் தள்ளுகிறார்கள். பிறருக்குக் கொடுத்தாலும், தாம் அநுபவித்தாலும் அழிந்துவிடும் என்று அவர்கள் எண்ணம். கொடை, போகம் இரண்டையும் விலக்கினால், நாசம் நிச்சயம். குறைந்துபோய்விடுமேயென்று க்ருபணன் பிறருக்கு அர்த்தங்களைச் சேர்க்கிறதில்லை. அதனால் த்ரவ்யங்களைப் பெருக்கலாம், (ஸஞ்சயம்) செய்யலாமென்று எண்ணுகிறான். ஆனால் உண்மையில் அவன் அனர்த்தங்களையே தேடுகிறான், (ஸஞ்சயம் செய்கிறான்.) ஸ்வாஸர்த்தான் ஸ்வஸ்ய—தன்னுடைய அனர்த்தான்—கேடுகளைத்தேடுகிறான். பராந் — பிறரை, அர்த்தை: — த்ரவ்யங்களால், அயோஜயன்—சேர்ப்பிக்காமல் என்று க்ருபணர் விஷயத்தில் பதம் பிரிக்கவேண்டும். பரானர்த்தை: — பிறர் உபத்ரவங்களோடு, ஸ்வாந் அர்த்தான்—தங்கள் த்ரவ்யங்களை, அயோஜயந்—சேர்க்காமல்என்று உதாரர்விஷயத்தில் கொள்ளவேணும். பிறரை ஹிம்ஸிக்காமல் உதாரர் பொருள் சேர்ப்பர். (118)

𑌅𑌨𑌿𑌶𑍍𑌶𑍇𑌷𑌿𑌤𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌵𑌾𑌦𑌿𑌨𑌮𑍍 ।
𑌵𑌧𑍂𑌰𑍍𑌵𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑍁𑌲𑍇𑌵𑌾𑌰𑍍𑌥𑍀 𑌸𑌵𑍍𑌰𑍀𑌡𑍋 𑌨𑍋𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑌿 ॥

அநிஶ்ஶேஷிததாதவ்யம் வதாந்யமிதி வாதினம் I
வதூர் வ்ரீடாகுலேவார்த்தீ ஸவ்ரீடோ நோபஸர்ப்பதி II (119)

(ப-ரை) 𑌅𑌨𑌿𑌶𑍍𑌶𑍇𑌷𑌿𑌤𑌦𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 [அநிச்சேஷிததாதவ்யம்] - கொடுக்கவேணுமென்று யாசகர் வார்த்தை முடிவதற்குள்ளேயே, 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 [வதாந்யமிதி] - வேறொன்றை (மேலும் இன்னம் கேளும் என்று), 𑌵𑌾𑌦𑌿𑌨𑌂 [வாதினம்] - சொல்லுபவரை, 𑌵𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑍁𑌲𑌾 [வ்ரீடாகுலா] - வெட்கம் நிரம்பிய, 𑌵𑌧𑍂𑌰𑌿𑌵 [வதூரிவ] - நாட்டுப்பெண்ணைப்போல, 𑌅𑌰𑍍𑌥𑍀 [அர்த்தீ] - யாசகன், 𑌨 𑌉𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑌿 [ந உபஸர்ப்பதி] - நெருங்குகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— இங்கும் உதாரரையும், கொடாதவரையும் சேர்த்து ஒரே பாதங்களால் பேசுகிறார். வதான்யர்—என்பவர் மேலே கேளும், மேலே கேளும் என்று மேலே மேலே இஷ்டங்களைக் கேட்கும்படி சொல்லுவர். எவ்வளவு கொடுத்தாலும், கொடுக்கவேண்டியது முழுவதும் நாமின்னம் கொடுக்கவில்லை, இன்னும் கொடுக்கவேண்டுமென்று ஆசைப்படுவர். எத்தனை கொடுத்தாலும், கொடுப்பவருக்குப் பூர்ணமாகக் கொடுத்தோமென்ற த்ருப்தியில்லை. கொடுக்கவேண்டியதை நிஶ்ஶேஷமாக நாம் கொடுக்கவில்லை என்ற அத்ருப்திபுத்தியுடையவரை 'அநிஶ்ஶேஷிததாதவ்யம்' என்கிறார். யாசகர் கொடுத்தது போதாதென்று அத்ருப்தி படுவதுண்டு. கொடுத்தது போதாது என்று உதாரர் அத்ருப்தி படுகிறார்; வெட்கப்படுகிறார். அத்ருப்தியாலின்னும் வேண்டியதைக் கேளும், 'அந்யம் மனோரதம் வத' என்று இன்னும் கேட்கும்படி கேட்கிறார். 'அந்யம் வத' என்று சொல்லுவர் வதான்யர். க்ருபணர் யாசிப்பவன் 'கொடு' என்று பேசி முடிவதற்குள்ளேயே வேறே பேசு, தேஹி என்ற பேச்சை எடாதே வேறு பேச்சுப் பேசு என்பர். 'அந்யம் சப்தம் வத'. இருவரும் 'அந்யம் வத' (வேறு பேசு) என்றுதான் சொல்லுகிறார்களென்று வேடிக்கை. நாட்டுப்பெண்ணைப்போல யாசகன் வெட்கப்படுவன். வேண்டியதற்குமேல் மேலே கேள் மேலே கேள் என்று சொல்லும் உதாரரிடத்திலும் ஸாதுக்களான யாசகர் வெட்கப்படுவர். தங்களுக்கு அவச்யமானதிற்கு மேல் பெறுவதை அவர்கள் வெறுப்பர். (119)

𑌤𑍍𑌵𑌚𑌂 𑌮𑌾𑌂𑌸𑌂 𑌜𑍀𑌵𑌂 𑌯𑌦𑌪𑌿 𑌦𑌦𑍁𑌰𑌸𑍍𑌥𑍀𑌨𑌿 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂
𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌰𑌤𑍍𑌨𑌾𑌧𑍀𑌶𑌂 𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌤𑌰𑍁𑌮𑍈𑌰𑌾𑌵𑌤𑌮𑌪𑌿 ।
𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌮𑌿𑌲𑌿𑌤𑌮𑌪𑌿 𑌨𑌾𑌲𑌂 𑌤𑍁𑌲𑌯𑌿𑌤𑍁𑌂
𑌮𑌨𑌸𑍍𑌕𑌾𑌰𑍋𑌪𑍇𑌤𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌧𑍁𑌰𑌕𑌲𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌿𑌕𑌣𑌿𑌕𑌾𑌂 ॥
(𑌮𑌨𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌰𑍋𑌪𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌮𑌧𑍁𑌰𑌕𑌲𑍍𑌪𑍋𑌕𑍍𑌤𑌿𑌕𑌣𑌿𑌕𑌾𑌂 ।)

த்வசம் மாம்ஸம் ஜீவம் யதபி ததுரஸ்தீநி ப்ருதிவீம்
ஶ்ரியம் ரத்நாதீசம் த்ரிதசதருமைராவதமபி II
ததேதத் ப்ரத்யேகம் மிளிதமபி நாலம் துலயிதும்
மனஸ்காரோபேதாம் ஸ்திரமதுரகல்யோக்திகணிகாம் II
(மனஸ்காராரோபி ஸ்திரமதுரகல்போக்திகணிகாம்)

(ப-ரை) த்வசம் [த்வசம்] - தன் தோலை, மாம்ஸம் [மாம்ஸம்] - தன் மாம்ஸத்தை, ஜீவம் [ஜீவம்] - தன் உயிரை, அஸ்தி தன் இனும்புகளை, ப்ருதிவீம் [ப்ருதிவீம்] - பூமியை, ச்ரியம் [ச்ரியம்] - லக்ஷ்மியையும், ரத்னேசம் [ரத்னேசம்] - கௌஸ்துபரத்னத்தையும், த்ரிதசதரும் [த்ரிதசதரும்] - தேவவ்ருக்ஷத்தையும், (கல்பகவ்ருக்ஷத்தையும்;) ஐராவதமபி [ஐராவதமபி] - ஐராவதத்தையும், யதபி தது: [யதபி தது:] - சில பெரியோர்கள் தானம் பண்ணினர்களென்பதும், ததேதத் ப்ராத்யேகம் [ததேதத் ப்ராத்யேகம்] - அதெல்லாம் ஒன்றொன்றுமாவது, மிளிதமபி [மிளிதமபி] - எல்லாம் சேர்ந்தாலும், மனஸ்காரோபேதாம் [மனஸ்காரோபேதாம்] - பூர்ண மனதோடு, நினைக்க நினைக்க ஆனந்தத்தைத் தரும், ஸ்திரமதுரஸல்யோக்திகணிகாம் [ஸ்திரமதுரஸல்யோக்திகணிகாம்] - என்றும் ஒரே சீராயிருப்பதும், இனிப்பும், ஸமர்த்தமும், மங்களமும், உண்மையுமான இன்சொல்லின் திவிலேயோடு, துலயிதும் [துலயிதும்] - ஒப்பிட, நாலம் [நாலம்] - போதாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தானசீலரான மஹா தாதாக்களை இங்கே கீர்த்தனம் செய்கிறார். தானமென்பது இன்சொலோடு, முகமலர்ச்சியோடு கொடுக்கப்படவேணும். தானம் செய்யும் தாதா ஸௌம்யனாய் குளிர்ந்த முகத்தோடு தானம் செய்வனேல், பூர்ணசந்த்ரன் களங்கமற்றிருந்தாலெப்படியோ, அப்படிச் சொல்லலாமென்பர். அரும்பெரும் தாதாக்களையும், அவர்களால் தானம் செய்த அரும்பொருள்களையும் கூறி இதையெல்லாம் சேர்த்தாலும், கொடுக்கும் வேளையில் இன்சொல்லுக்கும் ஸௌம்யதைக்குமொப்பாகாதென்று கூறி அதன் ஆவச்யகதையை விளக்குகிறார். தோலோடொன்றாகப் பிறவியிலேயேயமைந்து தன் உயிருக்கு ரக்ஷையான கவசகுண்டலங்களை அறுத்துக்கொடுத்த கர்ணனை முதலில் குறிக்கிறார். தானவிஷயத்தில் கர்ணனை முதலில் பேசுவதழகு. மேலே தன் மாம்ஸத்தையே வெட்டி வெட்டி திராசில் போட்ட சிபியைக் கூறப்போவதற்குமுன் மேல் தோலைமட்டுமறுத்துக்கொடுத்த த்ருஷ்டாந்தத்தைப் பேசுவதுமழகு. உயர்த்தி தாழ்த்தி இரண்டிலும்

முதலில் வரும்படி கர்ணத்ருஷ்டாந்தத்தை வைப்பது மிகவழகு. தகப்பனர் ஸூர்யனெச்சரித்துந் தடுத்தும், கர்ணன் கவசகுண்டலங்களையறுத்து சத்ருவான அர்ஜுனன்தகப்பனை இந்த்ரனுக்குக் கொடுத்தார். தோலுக்குமேல் மாம்ஸதானத்ருஷ்டாந்தம். சிபி சக்ரவர்த்தி ஓர் கபோதத்தைக் காப்பாற்ற தன் மாம்ஸத்தை யறுத்தறுத்துக்கொடுத்தார். பல்கால் அறுத்தார். மாம்ஸத்திற்குமேல் ஜீவனையே கொடுத்த கபோதத்தையெடுத்தார். மேலே அஸ்தியை (இனும்பை)க் கொடுத்த ததீசியை எடுக்கப்போகிறார். மத்தியில் 'ஜீவனை' வைக்கலாமோவென்று ஆக்ஷேபிக்கலாம். மாம்ஸத்ருஷ்டாந்தத்தில் சரணமடைந்தது கபோதம். கபோதம் ரக்ஷிக்கப்பட்டது. கபோதப்ரஸ்தாவம் வந்துவிட்டது. அந்த ப்ரஸ்தாவத்தில் (ப்ரஸங்கத்தில்) உடனே புத்திஸ்தமான கபோதவிஷயமானதும் ஸர்வலோகசரண்யனால் விபீஷணசரணாகதிகட்டத்தில் தமக்கு மார்க்கதர்சியும் அநுஷ்டாபகமுமாகப் புகழப்பட்ட 'கபோத' உபாக்யானத்தைப் பேசாமல் மற்றொரு த்ருஷ்டாந்தத்திற்குச் செல்லுவது ரஸமாகாது. புத்தியில் வந்துவிட்ட கபோதவ்ருத்தாந்தத்தைத் தள்ளுவதும் விளம்பிப்பதும் ரஸமல்ல. அஸ்திகளை ததீசி இந்த்ரனுக்குக் கொடுத்தார். பூமியைக் காச்யபருக்குத் தானம் பண்ண பரசுராமத்ருஷ்டாந்தத்தில் எப்பொழுதும் க்ரூரராயிருந்தவரும், தனக்கு நிற்கக்கூடவிடம் வைத்துக்கொள்ளாமல் பூமி முழுவதையும் தானம் செய்தாரேயென்ற வேற்றம். இதெல்லாம் ஒரோர் பொருளை தானம் செய்த த்ருஷ்டாந்தம். பாற்கடல் லக்ஷ்மீ தேவியையும், கௌஸ்துபரத்னத்தையும், கல்பகவ்ருக்ஷத்தையும், ஐராவதத்தையும் கொடுத்தது. பால்போன்ற மனமென்பர். அத்யந்தம் விஸ்தீர்ணமான உடல் முழுவதும் பால். முன் த்ருஷ்டாந்தம் ப்ருதிவீ. பூமியைக் கறந்து உயர்ந்த ரத்னங்களையும் ஓஷதிகளையும் மற்ற வஸ்துக்களையும் பூமி கொடுத்த வ்ருத்தாந்தமும் 'ப்ருதிவீ' என்னும் சப்தத்தால் ஸூசிக்கப்பட்டது. அதற்கடுத்ததாக கடல் கடையப்பட்டு, ரத்நம் முதலியதைத் தந்த வ்ருத்தாந்தம். பாற்கடல் தந்தவை பல— மற்றவரைப்போல ஒன்றொன்றல்ல. லக்ஷ்மீகடாக்ஷத்தால் ஐச்வர்யம் கிடைக்கும். மற்ற தாதாக்கள் ஐச்வர்யத்தைக் கொடுக்கலாம்; பாற்கடல் 'உதாராம்' என்று சொல்லப்பட்டபடி ஸர்வைச்வர்யமூல

மான லக்ஷ்மியையே தந்தது. உதாரையைத் தந்த உதாரர். கல்பகவ்ருக்ஷம் வேண்டியதைத் தரும். கல்பகவ்ருக்ஷத்தையே பாற்கடல் தந்தது. பாற்கடல் பயந்த யானை வெள்ளையானையென்பது உசிதம். அங்கே பிறந்த யானைக்குக் கருமையிருக்குமோ? யானைக்கறுப்பு என்பதற்கு மாற்று. லக்ஷ்மி மறைந்துபோனதற்குக் காரணம் ஐராவதம். அந்த அபராதத்தைத் தீர்க்க எல்லா கஜேந்திரங்களும் பிராட்டிக்கு அபிஷேகம் செய்தன என்று ஸ்ரீஸ்துதியில் ஸாதித்தார். இந்த தாதாக்களை ஒவ்வொருவரும் உத்தமர்தானென்பதைக் காட்ட ஒன்றொன்றாகவும் ஒப்பாகாதென்கிறார். சேர்ந்தாலுமொப்பாகாது. இத்தனை தாதாக்களும் அத்யந்தம் ஸௌம்யரே. அவரவர்கள் ஸௌம்யகுணத்தையே அவர்களுக்கும் மேற்பட்டதாகக் காட்டுகிறாராகையால் அவர்களொருவர் பெருமையையும் குறைக்கவில்லையென்பதும் ரஸம். அவர்கள் குணத்தால் அவர்கள் தோல்வியடைவது அவர்களுயர்த்தியே. அவர்கள் தானத்திலும் அவர்கள் ஸௌம்யதை உயர்ந்ததென்று கருத்து. அவர்கள் தானம் செய்த பொருள் செலவழிந்தபிறகு மறந்துபோனாலும் அவர்கள் இன்சொல் மறக்கப்படுவதேயில்லை. நினைக்க நினைக்க மிகுந்த இன்பத்தைக் கொடுக்கும்; தானம் செய்யப்பட்ட பொருளழிந்தாலும், இன்சொல் அழியாமல் ஸ்திரமாயிருக்கும். 'மநஸ்காரம்' என்பது முன் இன்பானுபவம் நினைக்க நினைக்க நினைப்பினாலேயே ஸுகத்தைத் தருவதைக் காட்டும். கொடுப்பவனுடைய பூர்ணஸந்தோஷத்தையும் ஆதரத்தையும் காட்டும். 'மநஸ்காராரோபி' என்ற பாடத்தில் 'திரும்பவும் திரும்பவும் இன்பநினைப்பைத் தரும்' என்று பொருள். 'மநஸ்காரோபேத' என்ற பாடத்தில் 'பூர்ணமநஸ்துஷ்டியுடன்' என்று பொருள். 'மநாகல்ப' என்று பாடமானால் மாதுர்யத்தில் கொஞ்சம் குறைவு காட்டப்படலாம். 'கல்ய' என்பது சுபம், மங்களம். (120)

𑌅𑌨𑌿𑌰𑍍𑌘𑌾𑌤𑌂 𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑌮𑌶𑌮𑌨𑍀𑌯𑌂 𑌨𑌿𑌧𑌿𑌮𑌪𑌾𑌂
𑌅𑌕𑌾𑌠𑌿𑌨𑍍𑌯𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌮𑌜𑌡𑌭𑍂𑌤𑌂 𑌸𑍁𑌰𑌤𑌰𑍁𑌮𑍍 ।
𑌅𑌪𑌿𑌤𑍍𑌵𑍋𑌪𑌾𑌦𑌾𑌯 𑌪𑍍𑌰𑌭𑍁𑌰𑌪𑌶𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌸𑍁𑌰𑌭𑌿𑌂
𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌕𑍃𑌤 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑌾𑌦𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 ॥

அநிர்காதம் தாராதரம் அசமனீயம் நிதிமபாம்
அகாடிந்யம் சிந்தாமணிம் அஜடபூதம் ஸுரதரும் ।
அபித்வோபாதாய ப்ரபுரபசுவ்ருத்திம் ச ஸுரபிம்
பரார்த்தைக ஸ்வார்த்தாந் அக்ருத புருஷான் ஆதிபுருஷ: ॥

(பதவுரை) 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 [ப்ரபு:] - எல்லா ஸாமர்த்யமுமுடைய, 𑌆𑌦𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 [ஆதிபுருஷ:] - ஜகன்மூலமான புருஷன் (ஈச்வரன்), 𑌅𑌨𑌿𑌰𑍍𑌘𑌾𑌤𑌂 [அநிர்காதம்] - இடிக்கும் தோஷத்தை நீக்கி, 𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑌂 [தாராதரம்] - மேகத்தையும், 𑌅𑌶𑌮𑌨𑍀𑌯𑌂 [அசமநீயம்] - கொந்தளிப்பே ஸ்வபாவமாயும், அடங்கி சாந்தமாயிருப்பது அரிதாயுமிருக்கும் தோஷத்தை நீக்கி, 𑌅𑌪𑌾𑌂𑌨𑌿𑌧𑌿𑌂 [அபாம்நிதிம்] - ஸமுத்ரத்தையும், 𑌅𑌕𑌾𑌠𑌿𑌨𑍍𑌯𑌂 [அகாடிந்யம்] - கடினத்தன்மையெனும் தோஷத்தை நீக்கி, 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌣𑌿𑌂 [சிந்தாமணிம்] - சிந்தாமணியையும், 𑌅𑌜𑌡𑌭𑍂𑌤𑌂 [அஜடபூதம்] - ஜடத்தன்மையை நீக்கி, 𑌸𑍁𑌰𑌤𑌰𑍁𑌂 [ஸுரதரும்] - கற்பகத்தையும், 𑌅𑌪𑌶𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌂 [அபசுவ்ருத்திம்] - மிருகத்தன்மையை நீக்கி, 𑌸𑍁𑌰𑌭𑌿𑌂 [ஸுரபிம்] - காமதேனுவையும், 𑌅𑌪𑌿𑌤𑍍𑌵𑌾 [அபித்வா] - பிரிக்காமல் ஒன்றுகூட்டி உபாதாய [உபாதாய] - காரணத்ரவ்யமாகக் கொண்டு, 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑍈𑌕𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍 [பரார்த்தைகஸ்வார்த்தாந்] - பிறர் ப்ரயோஜனமொன்றே தங்கள் ப்ரயோஜனமாகக் கருதும், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌨𑍍 [புருஷாந்] - புருஷரை, 𑌅𑌕𑍃𑌤 [அக்ருத] - அமைத்தார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்—புருஷோத்தமனோடு இந்த பத்ததி தொடங்கிற்று; ஆதிபுருஷனோடு முடிகிறது. ஸ்வார்த்தம் (தன் ப்ரயோஜனம்), பரார்த்தம் (பிறர் ப்ரயோஜனம்) என்ற பிரிவு சொல்லுவர். இங்கே சொல்லும் தாதாக்களான உத்தமபுருஷருக்குப் பிறர் ப்ரயோஜனமே தம் ப்ரயோஜனமாகிறது. தங்கள் ஸொந்தப்ரயோஜனமென்பதே வேறு கிடையாது. கொடுக்கும் வள்ளல்களை ப்ரஸித்தமான பல வஸ்துக்களைச் சேர்த்து இந்த மஹாபுருஷர்களை ஆதிபுருஷன் ஸ்ருஷ்டித்தாரென்று வர்ணனம். மேகம் யதேஷ்டமாய் வழங்கும் வள்ளலே ஆயினும் கர்ணகடோரமாக இடித்துக்கொண்டே வர்

ஷத்தை வர்ஷிக்கும். அந்த தோஷத்தை அகற்றி மேகத்தை ஓர் த்ரவ்யமாக வைத்துக்கொண்டார். ஸமுத்ரம் ரத்நாகரம் ரத்நங்களுக்கு நிதி, ஜலநிதியாயிருப்பதோடு ரத்நங்களுக்கும் நிதி. 'நிதி' என்னும் பதம் இங்கே அழகு. கடல் கொந்தளித்துக் கொண்டேயிருக்கும்; சாந்தமாயிருப்பது அரிது. கொந்தளிப்பு தோஷத்தை அகற்றி, ஸமுத்ரத்தையும் சேர்த்துக்கொண்டார். அப்படியே கடினத்தன்மையை அகற்றி சிந்தாமணியையும் வைத்துக்கொண்டார். கற்பகவ்ருக்ஷம் ஜடம்; ஜடத்தன்மையை நீக்கி அதையுமெடுத்துக்கொண்டார். காமதேனு பசு 'திருஸுர பியானாலும் கோத்வம் கழியாதே'. கோத்வத்தைக் கழித்து, காமதேனுவைக் கொண்டார். இத்தனையும் சேர்த்துக் காரண த்ரவ்யங்களாகக்கொண்டு வதாந்யரான மஹாபுருஷரை ஸ்ருஷ்டித்தார். 'உபாதாய'. என்பதால் 'குடத்துக்கு மண்ணைப்போல உபாதானத்ரவ்யமாகக் கொண்டார்' என்று காட்டப்படுகிறது. அத்தைப் பிரிக்காமல் விள்ளாமல் அப்படியே சேர்த்து ஒருமிக்க கூட்டி இப்பெரியாரை அமைத்தார்போலும். இதெப்படிக்கூடும்? தம் ஸர்வசக்தியை அகடிதகடனாசக்தியைக்கொண்டு அமைத்தா ரென்பதைக்காட்ட 'ப்ரபு:' என்கிறார். மேகம் கர்ணகடோரமாக இடிப்பதுபோல் இவர்கள் கடுஞ்சொல்லைப் பேசவேமாட்டார். எப்பொழுதும் அடங்கி சாந்தராயிருப்பர்; ஸமுத்ரத்தைப் போல கொந்தளிக்கமாட்டார்; சிந்தாமணியைப்போல் கடினராக விரார்; கல்பகவிருக்ஷத்தைப்போல ஜடரல்ல; காமதேனுவைப் போல மிருகத்தன்மையில்லை; காமதேனுவும் சிந்தாமணியும் பாத்ராபாத்ரபேதத்தை அறியாது. (121)

பத்தாவதான வதான்யபத்ததி முற்றிற்று.

பதினோராவது ஸுகவிபத்ததி.

அபங்கிலதியஶ்ஶுத்தா: ஸாது மானஸவ்ருத்தய: ।
வமந்தி ஶ்ருதிஜீவாதும் த்வநிம் நவரஸாஸ்பதம் ॥ ௧௨௨॥

அபங்கிலதியஶ்ஶுத்தா: ஸாது மானஸவ்ருத்தய: ।
வமந்தி ஶ்ருதிஜீவாதும் த்வநிம் நவரஸாஸ்பதம் ॥ (122)

(ப-ரை) அபங்கிலதிய: [அபங்கிலதிய:] - (1) மாசற்ற நிர்மலமான புத்தியை உடையவரும், (2) சேற்று ஜலத்தில் ரமிக்காத புத்தியுடைய, ஶுத்தா: [சுத்தா:] - (1) சுத்தரான, (2) சுத்த வெண்மையான, ஸாதுமானஸவ்ருத்தய: [ஸாதுமா னஸவ்ருத்தய:] - (1) சிறந்த மனோவ்ருத்திகளை உடைய, சான்றோர் மனதில் கொண்டாடப்படும், (2) தெளிவான மானஸ தடாகத்தில் விஹரிப்பதுமான, (கவிகள், ஹம்ஸங்கள்), ஶ்ருதி ஜீவாதும் [ச்ருதிஜீவாதும்] - (1) ச்ரோத்ரமனோபிராமமான, காதை உயிர்ப்பிக்கும், வேதமூலமான, (2) காதுக்கு இனிப்பைத் தரும், நவரஸாஸ்பதம் [நவரஸாஸ்பதம்] - (1) ஒன்பது ரஸங்களுக்கும் இருப்பிடமான, (2) புதுஜலத்தைப் பானம் பண்ணினதால் கிளம்பும், த்வநிம் [த்வநிம்] - மேல் சொற்பொருளிலும் அதிசயித்த உட்பொருளையுடைய த்வநிகாவ்யத்தை, (2) த்வநியை, வமந்தி [வமந்தி] - வெளிப்படுத்துகின்றனர்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— வதாந்யரான வள்ளல்களைப் பேசி முடிந்ததும், செஞ்சொற்கவிகளைப் பேசுகிறார். வதாந்யர் பொருள்களை வழங்குவதுபோலக் கவிகளும் சாச்வதமாக உலகத்திற்கு அரும்பொருள்களை உதாரமாக வழங்குகிறார்கள். கவிகள் கொடுக்கும் பொருள்களுக்கு விலையில்லை. அந்தப் பொருள்கள் அளிக்கும் இன்பத்திற்கு எல்லையில்லை. காவ்யமளிக்கும் த்வநிரஸங்களும் ரஸத்வநிகளும் ப்ரஹ்மானந்தத்திற்கு ஸஜாதீயமாகும் என்றது காவ்யப்ரகாசம். ப்ரஹ்மத்தின் இன்பத்தை நமக்குக் காட்டுவதற்காக ஆனந்தவல்லியும் ப்ரஹ்மத்தை 'ரஸம்' என்றது. ப்ரஹ்மத்தை வேதம் 'புராணகவி' என்றது. ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதுபோல், ரஸதமகாவ்யங்களைத் தம் திருவாக்காலும், மஹாகவிகளைக் கடாக்ஷித்து, அவர்களுக்குக் கவிதா சக்தியை அளிப்பதால் அவர்கள் மூலமாயும், ஸ்ருஷ்டிசெய்கிறார். மஹாகவிகளின் கவிதையும் அவருடைய தேஜோம்சஸம்பவம், அவருடைய ஜாயமான கடாக்ஷலப்தம். சக்தி, லோகசாஸ்த்ர காவ்யாதிகளின் பழக்கத்தால் நைபுண்யம், காவ்யஜ்ஞர்சிக்ஷையோடு கவனப்யாஸம் - இவையெல்லாம் சேர்ந்து கவிதைக்குக் காரணம் என்பர், சக்தியென்பது ஈச்வராநுக்ரஹத்தால் கிடைக்கும் பிறவி

சக்தி. ரஸங்களில் சிறந்தது கடைசி (ஒன்பதாவது) ரஸமான சாந்திரஸம். 'அநவமகுணோ நவமோ ரஸ:' (அக் கடை ரஸம் தான் ச்ரேஷ்டரஸம்) என்றும், 'சமிதசித்தகேதோ ரஸ:' (மனதின் ஸர்வக்லேசங்களையும் சமனம் செய்யும் சம ரஸம்) என்றும் ஸூர்யோதயம் வர்ணித்தது. மற்ற எட்டு ரஸங்களும் சாந்திரஸத்திறகு அங்கமாகும் வழியை மிக அழகாக 'ஜுகுப்ஸாம் தேஹாதெள' என்னும் ஸூர்யோதயச்லோகம் காட்டிற்று. பீபத்ஸரஸத்திற்கு ஜுகுப்ஸை, (அருவருப்பு, பயம்) ஸ்தாயிபாவம். பார்க்கவே பிடிக்காது, கோரம், நடுங்கச்செய்யும். தேஹம், இந்த்ரியம், மனது முதலியதில் இப்படி ஜுகுப்ஸையிருந்தால் சாந்திரஸம் பெருகுமென்று, முதலில் பீபத்ஸரஸத்தை சமரஸத்திற்கு அங்கமாக்கும் வழியைக் காட்டினார். ஆலங்காரிகரும் சாந்திரஸத்தை ஒன்பதாவது ரஸமாக ஸமர்த்தித்தார்கள். 'த்வனி' என்பது சொற்பொருளிலும் அதிசயிதமான அரும் உட்பொருள் அமைந்த காவ்யம். அது உத்தமகாவ்யம். கண்டை (மணி) யின் ஓசை ஒன்றின் மேல் ஒன்றாக மேலே மேலே பரவுவதுபோல் காவ்யதவநியிலிருந்து இனிமையான த்வனிகள் மேல் மேல் பரவும். கவிகள், ஆசிரியர்கள், ஹம்ஸங்கள் ஆகிய மூன்றுக்கும் இந்த ச்லோகம் பொருந்துகிறது. பகவான் விஷயமாகவும், தநியர்விஷயமாகவும்தான் பகவான் கொடுக்கும் சக்தியை விநியோகிக்க வேண்டும். "வீட்டு முற்றத்தில் தேங்கியிருக்கும் கச்மலஜலத்தில் சோற்றுப்பருக்கை அலம்பின பருக்கைகளிருக்கும். அந்த ஜலத்தில் காக்கை உட்கார்ந்து பருக்கைகளைத் தின்னும். அது வாயஸதீர்த்தம். ஹம்ஸங்கள் அதில் ரஸிக்கமாட்டா. ஹம்ஸர்கள் பகவத்குணத்தில்தான் ரஸிப்பர்கள்" என்றார் சுகர். "என் நாவில் இன்கவி யாதொருவர்க்கும் கொடுக்கிலேன் தென்னாதெனாவென்று வண்டு முரல் திருவேங்கடத்தென்னானை என்னப்பன் எம்பெருமானுளனாகவே" என்றார் ஆழ்வார். வண்டுகளோடு வண்டாய் 'மதுவார் தண்ணந்துழாயான் முதுவேதமுதல்வன்' திருவடித் தாமரைத் தேனை ஆஸ்வாதித்துக்கொண்டே அவ்யக்த மதுரமாக 'ஹா வுஹா வுஹா' என்று ஸாமகானம் பண்ணுவதிலும் ரஸமுண்டோவென்பது திருவுள்ளம். இங்கே செஞ்சொற்கவிகள் கவிதாவர்ணனத்தை 'அ' என்று அகாரத்தோடு பரம மங்களமாகத் தொடங்குகிறார். முடிவில் "பங்குவான என் சிரஸ்ஸில்

பெருமாள் திருவடியிலிருந்து கங்கா ப்ரவாஹம் விழுந்து நிர்களமாய் ஸ்வச்சஸ்வாதுஸதாவதாதஸுபகமாய் வாக்குகளாக ப்ரவஹிக்கிறதே" என்று பகவான் கவிதாசக்தியை அளிப்பதைத் தாம் நேருக்கு நேராக அனுபவிப்பதைக் காட்டுகிறார் கடாக்ஷிக்கும் பெருமாளோடு தொடங்கி கங்காப்ரவாஹமான வாக்குகளோடு முடிவு. ஜலத்தில் சேறுபோல், சித்தவ்ருத்திப்ரவாஹத்தில் தோஷம் சேறு ஆகும். இந்த முதல் ச்லோகத்தில் ஸத்காவ்ய லக்ஷணங்களைக்காட்டும் வாமனரையும், ஆசார்யதண்டியையும் எடுக்கிறார். 'ந கதகம் பங்கப்ரஸாதனாய' என்றார் வாமனர். தேத்தாங்கொட்டை, முழுச்சேற்றைத் தெளியச்செய்யாது. கொஞ்சம் மண் கலந்த ஜலத்தைத் தெளிவிக்கும். அடியோடு ரஸமேயில்லாதவரைக் காவ்யமென்னும் தேத்தாங்கொட்டை தெளியச்செய்யாது. வாமனஸூத்ரங்களின் ஆரம்பத்தில் இந்த ஸூத்ரம் உளது. 'அபங்கில' என்று அதையும் ஸூசிக்கிறார். 'வமந்தி' என்பதற்குக் கக்குகிறான் என்று முக்கியமான சொற்பொருள். அந்தப் பொருளில் அந்த சப்தத்தை உபயோகித்தால் அது க்ராம்யம். தானாகப் பரவசமாக அநுக்ரஹத்தால் வாயினுள்ளிருந்து வெளிவரும் காவ்யம் முதலியதை 'வெளியே விடுவது' முதலிய லாக்ஷணிகப் பொருளில் உபயோகித்தால், அது 'அதிஸுந்தரம்' என்றார் ஆசார்யதண்டி. இங்கே 'வமந்தி' என்பதை அந்த வழியில் அதிஸுந்தரமாகப் பிரயோகிக்கிறார். அதிகாரணஸாராவளி என்னும் அம்ருதரஸம் தமக்கு ஆசிரியர் புகட்டிய ச்ருத ஸமுத்ரத்திலிருந்து அம்ருதம்போல் பொங்கி வெளியே வழிந்தது என்பதை 'அஸ்மத்ச்ருதாப்தே: அம்ருதமிவ ஸமுத்வாந்தம்' என்று ஸாதித்ததை நினைக்கவேண்டும். ஸாதுக்களான ஸதாசிரியருக்குப் பிறக்கும் போதே கடாக்ஷத்தால் ஸத்வமமைவதுபோல, கவிக்கும் சக்தியமைகிறது. இங்கே முதல் மூன்று விசேஷணங்களால் சக்தி, நிபுணதை, அப்யாஸம் என்னும் மூன்று ஹேதுக்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டன வென்று நரகேஸரீயவ்யாக்கியானம். நிர்தோஷம், ஸகுணம், நல்ல விஷயத்தைப்பற்றியிருப்பது இவையெல்லாம் முன்பாதியில் கூறப்படுகின்றன. ஸந்மனுஷ்யர் மனம்போல, சுத்ததீர்த்தம் ரமணீயமும், ப்ரஸந்நமுமாயிருப்பதை ஆதிகவி தம்முடைய ஆச்ரமநதிவிஷயமாக வர்ணித்தார். அதையும் இங்கே நினைக்கிறார். ஆதிகவி வர்ணித்தது அவர் புத்தி

யில் ஓடிக்கொண்டிருந்த ராமாயணகாவ்யநதியையும் பற்றியது. ஹம்ஸங்கள் விஹரிக்கும் மானஸஸரஸ்போன்ற தீர்த்தம். ஆசிரியர் நம் காதுகளில் அம்ருதவர்ஷம்போல், மந்த்ரமந்த்ரார்த்தங்களைப் பொழிவர். ச்ருதிக்கு ஜீவாதுவான ப்ரணவத்வநியையும் அதன் த்வநிப்பொருள் வெள்ளரஸத்தையும் வர்ஷிப்பர். 'அபங்கிலயிதம்' என்றோர் பாடம். அது அழகல்ல. (122)

𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌲𑌬𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 (𑌬𑌦𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾)
𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋𑌦𑌯𑌃 ।
𑌵𑌶𑍍𑌯𑌾𑌵𑌦𑌾𑌤𑌯𑌾 (𑌪𑌶𑍍𑌯 𑌅𑌵𑌦𑌾𑌤𑌯𑌾) 𑌵𑌾𑌚𑌾
𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑍇 𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨𑌃 ॥ ॥ ௧௨௩ ॥

மஹாபுருஷலப்தாத்மா (பத்தாத்மா) ஸர்காதிப்ரதிதோதய: l
வஶ்யாவதாதயா(பச்ய அவதாதயா)வாசா ஸேவ்யதே சதுராநந:ll

(பதவுரை) 𑌮𑌹𑌾𑌪𑍁𑌰𑍁𑌷𑌲𑌬𑍍𑌧𑌾𑌤𑍍𑌮𑌾 [மஹாபுருஷலப்தாத்மா] - (1) மஹாபுருஷனான நாராயணனிடமிருந்து உத்பந்நரும், (2) மஹாபுருஷனான நாராயணனால் ப்ரகாசப்படுத்தப்பட்ட ஸ்வரூபத்தையுடைய அவரிடமே தாத்பர்யத்தையுடைய, (3) பகவானால் அநுக்ரஹிக்கப்பட்ட சக்தியையுடைய மஹாபுருஷனான கதாநாயகனிடம் செலுத்திய மனதுடைய, 𑌸𑌰𑍍𑌗𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑍋𑌦𑌯𑌃 [ஸர்காதிப்ரதிதோதய:] - (1) ஸர்கத்தின், ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் உத்பந்நராக பிரஸித்தரும், (2) ருக், யஜுஸ், ஸாமம் முதலிய பாகங்களோடு விளங்கும், (3) ஸர்கம், ஆச்வாஸம் காண்டம் முதலிய பாகங்களோடு கூடிய காவ்யாதிகளால் விளங்கும், 𑌚𑌤𑍁𑌰𑌾𑌨𑌨𑌃 [சதுராநந:] - (1) சதுர்முகப்ரஹ்மா, (2) நான்கு முகங்களையுடைய, (3) சதுரமாகப் பாடும் முகத்தை உடைய, ப்ரஹ்மா, நான்மறை, மஹாகவி, இவர்கள் ஒவ்வொருவரும் 𑌵𑌶𑍍𑌯𑌾𑌵𑌦𑌾𑌤𑌯𑌾 [வச்யாவதாதயா] வச்யமும், சுத்தமும், (வெண்மை நிறமும்) ஆன ஸரஸ்வதியால், வாகிந்த்ரியத்தால், வாக்தேவியால், 𑌸𑍇𑌵𑍍𑌯𑌤𑍇 [ஸேவ்யதே] - ஸேவிக்கப்படுகிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— உத்தரராமசரிதநாடகத்தின் தொடக்கத்தில் 'எந்த ப்ரஹ்மாவை' (ப்ராஹ்மணனை) இந்த வாக்தேவியானவள் வச்யைபோல அநுவர்த்திக்கிறாளோ,

அந்தக் கவியால் செய்யப்பட்ட உத்தரராமசரிதம் இப்பொழுது நடனம் செய்யப்படும்" என்று பவபூதி தம்மை ஸரஸ்வதீவல்லபரான சதுர்முகப்ரஹ்மாவிற்கு ஒப்பிட்டார். அந்த ச்லோகத்தை ஸ்வாமி இங்கே நினைப்பது திண்ணம். 'மஹாபுருஷர்' என்பது பகவானையும், பகவான் முதலிய கதாநாயகபுருஷரையும் சொல்லும். ப்ரஹ்மா அவரிடமிருந்து முதலில் தோன்றியவர்; ஸர்க்காரம்பத்தில் தோன்றியவர். 'இந்த மஹாபூதத்தின் மூச்சுக்காற்றுபோன்றவை ருக்வேதம் முதலிய வேதங்கள்' என்று ச்ருதி பேசிய மஹாபூதத்தையும், மஹாபுருஷசப்தம் காட்டுகிறது. ருக்கு முதலியதோடு கூடியது. 'ஸ ருக் ஆதி' ருக்கோடு கூடியது, ஸர்க். 'ருக்' என்பது ருக்வேதத்தைச் சொல்லுகிறது. 'உச்சை: ருசா க்ரியதே' என்ற ச்ருதியில்போல. ஸர்க்காதி என்பது ஸ்ருஷ்டியாரம்பம். நான்கு முகங்களை நான்கு பிரிவுகளாக உடைய நான் மறையையும், 'சதுராநந:' என்னும் சப்தம் சொல்லுகிறது. ஸர்க்கம், அத்யாயம், காண்டம், உச்வாஸம், ஆச்வாஸம், பத்ததி முதலிய பிரிவுகளால் காவ்யங்கள் விளங்கும். மஹாபுருஷரான பகவானையாவது, அவரைப்போன்ற ச்ரேஷ்டரையாவது நாயகராகக் கொண்டிருக்கும். மஹாகவியின் முகம் வாக்வர்ஷம் செய்வதில் சதுரம் (நிபுணம்). நிபுணதையென்னும் குணத்தையுடைய முகத்தை (வாக்கை) யுடையவர் சுத்தமான வச்யமான வாக்கினால் வேதங்கள் அப்யஸிக்கப்படும். விடாமல் அத்யயனம் செய்யப்படும். வெண்மையான வர்ணமுடைய வாக்தேவி ப்ரஹ்மாவை வச்யையாகவே ஸேவிக்கிறாள். கவிவாக்கில் ரஸித்து. வச்யையாக ஸரஸ்வதிதேவி கவியை உபாஸிக்கிறாள். 'பத்தாத்மா' என்றும் பாடம் மஹாபுருஷரான பகவானிடத்தில் வேதங்களின் தாத்பர்யம் பத்தமாயிருக்கும். ப்ரஹ்மா அவருடைய நாபிகமலத்தில் ஸம்பத்தர். மஹாகாவ்யம் மஹாபுருஷனான நாயகனிடமே கருத்தைச் செலுத்தியிருக்கும். 'பச்ய' பார் என்றும் ஓர் பாடம். (123)

𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌲𑌲𑌿𑌤𑌾 (𑌲𑌲𑌿𑌤𑌾𑌕𑌾𑌰𑌾) 𑌗𑍁𑌣𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌶𑌾𑌲𑌿𑌨𑍀 ।
𑌸𑌰𑌸𑌾 𑌭𑌾𑌰𑌤𑍀 𑌯𑌸𑍍𑌯 𑌸 𑌸𑌤𑍍𑌯𑍇 𑌕𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ॥ ௧௨௪ ॥

விசுத்தவர்ணலளிதா (லளிதாகாரா) குணாலங்காரசாலினீ l
ஸரஸா பாரதீ யஸ்ய ஸ ஸத்யே க: ப்ரதிஷ்டித: ll (124)

(ப-ரை) 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌲𑌲𑌿𑌤𑌾 [விசுத்தவர்ணலலிதா] - (1) சுத்த வெண்மையோடு மனோஹரமாய் விளங்கும், (2) மிகவும் சுத்தமாக அக்ஷரங்களை அழகாக உச்சரிக்கும், நடனத்திற்கு சோபிக்கும்படி சுத்தவர்ணத்தையும் லளிதமான அங்கங்களையுமுடைய, (3) ஒன்றோடொன்று மிச்ரமில்லாமல் மிகவும் சுத்தமான *ரஸாநுகுணமான வர்ணங்களோடு (அக்ஷரங்களோடு) லளிதபதங்களால் அமைந்த, 𑌗𑍁𑌣𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌶𑌾𑌲𑌿𑌨𑍀 [குணாலங்காரசாலினீ] - (1) நாயகனான சதுர்முகரிடம் சுத்தமான பாதிவ்ரத்யாதிகுணங்களாலும், அலங்காரங்களாலும், (ஆபரணங்களாலும்) விளங்கும், (2) கவிசாதுர்யம் முதலிய குணங்களாலும், ஆபரணங்களாலும் சோபிக்கும், (3) காவ்யகுணங்களோடும், அணிகள் (சப்தாலங்காரம், அர்த்தாலங்காரம்) இவற்றோடும் சோபிக்கும், 𑌸𑌰𑌸𑌾 [ஸரஸா] - (1, 2) ரஸத்தோடு கூடிய, (3) ச்ருங்காராதிரஸங்களோடுகூடிய, 𑌭𑌾𑌰𑌤𑍀 [பாரதீ] - (1) ஸரஸ்வதீதேவி, (2) நடீ, (3) வாக்கு, 𑌯𑌸𑍍𑌯 [யஸ்ய] - யாருடையவளோ, 𑌸𑌃 [ஸ:] - அவர் (அந்த), 𑌕𑌃 [க:]-ப்ரஹ்மா, 𑌸𑌤𑍍𑌯𑍇 [ஸத்யே]-ஸத்யலோகத்தில், 𑌸𑌤𑌿 [ஸதி]-ஸத்தென்னும் நாட்யஸந்மார்க்கத்தில், 𑌸𑌃 𑌏𑌕𑌃 [ஸ: ஏக:] - அவனொருவன், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 [ப்ரதிஷ்டித:] - நல்ல ப்ரதிஷ்டையை (யசஸ்ஸை) அடைவான், (3) 𑌸𑌤𑌿 [ஸதி] - ஸத்தென்னும் ப்ரஹ்மத்தில், 𑌸 𑌏𑌕𑌃 [ஸ ஏக:] - அந்த ஒரு கவிதான், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 [ப்ரதிஷ்டித:] - ஸ்திரமான நிலையை அடைவான், 𑌯𑌸𑍍𑌯 [யஸ்ய] - யாருக்கு (யார் விஷயமாக), முன் சொன்ன வாக்ஸரஸ்வதீ பாடுகிறதோ, 𑌸𑌃 [ஸ:] - அந்த, 𑌕𑌃 [க:] - 'க' என்னும் பரமாத்மா, 𑌸𑌤𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 [ஸத்யே ப்ரதிஷ்டித:]- ஸத்யத்திலேயே நிலையை உடையவர். '𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌲𑌲𑌿𑌤𑌾𑌕𑌾𑌰𑌾' என்றும் பாடம்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— ஸரஸ்வதீதேவி, அவள் நாயகன் சதுர்முகன் ஒன்று, நடீ, நடன் இரண்டு, காவ்யஸரஸ்வதீ, கவி மூன்று, காவ்யஸரஸ்வதீ அதற்கு விஷயமான பரமாத்மா நான்கு, ஆகிய நான்கு ஜோடிகளுக்கும் இந்த ச்லோகம்

பொருந்துகிறது. சுத்தமான காவ்யங்கள் ஸுகமாக மோக்ஷமார்க்கத்தில் சேர்ப்பிக்கும். கவிக்கும் மோக்ஷாநுபவதுல்யமான ஸுகத்தை அளிக்கும். 'வானேறப்போமளவும் வாழ்வுக்கு' யாதவாப்யுதயம், பாதுகாஸஹஸ்ரம், ஹம்ஸஸந்தேசம், ஸுபாஷிதநீவீ முதலிய காவ்யங்களில் ஒரொன்றே அமையும். காவ்யங்களில் கதாநாயகனை ஸ்தோத்திரம் செய்வர். 'ஏகோ நைக: ஸவ: க: கிம்' என்று ஸஹஸ்ரநாமம். 'க:' என்று பகவானுடைய திருநாமம். காவ்யம் அவரைப்பற்றி அமைவது உசிதம். அவர் விஷயத்தில் என்ன ஸ்தோத்திரம் செய்தாலும், அது ஸத்யமாகவேயிருக்கும். எத்தனை ஸ்தோத்திரம் செய்தாலும், அதெல்லாம் உண்மையை விட்டு விலகாது; துளிகூடப் பொய்யாகாது. தம்முடைய வாக்குகளுக்கு ஸத்யப்ரதிஷ்டையை விரும்பும் கவிகள் பகவானைப்பற்றியே பாடவேணும். 'தம் நாவின் இன்கவியை வேறு ஒருவர்க்கும் கொடுக்கலாகாது'. கொடுத்தால் பொய்யராவார். ஸரஸ்வதீதேவி எப்படி விசுத்தமான வர்ணத்தோடும், லளிதமான அவயவங்களோடும், உயர்ந்த ஆத்மகுணங்களோடும், அலங்காரங்களோடும் விளங்குகிறாளோ, அப்படி காவ்யவாக்கும், ரஸத்துக்கு அநுகுணமான விசுத்தவர்ணங்களோடும், பதலாளித்யத்தோடும், அர்த்தகௌரவத்தோடும், ஓஜ:ப்ரஸாதம், மாதுர்யம் இந்தகுணங்களோடும், உபமாத்யலங்காரங்களோடும் ரஸங்களோடும் கூடியிருக்கவேணும். நடனுக்கும் நல்ல நடியின் ஸஹாயம் வேணும். ஓரோர் கவி ஓரோர் விஷயம் சொல்லுவர். தண்டியின் பதலாளித்யத்தையும், பாரவியின் அர்த்தகௌரவத்தையும், காளிதாஸரின் உபமாலங்காரநைபுண்யத்தையும் புகழ்வர். இவையெல்லாம் ஸ்வாமி கவிதையில் ஒரேகவியிடம் சேர்ந்திருப்பது மிக மேன்மை. 'பாரதீ' என்பது 'பாரதீவ்ருத்தி' என்னும் அழகிய நடையையும் சொல்லும். முதல் விசேஷணத்தால் காவ்யத்திற்கு ஆத்மாவான (உயிரும் உடலுமான) ரீதியையும், இரண்டாவது விசேஷணத்தால் காவ்ய குணங்களையும், அலங்காரங்களையும் கூறுகிறார். ஸதீயான பத்நிக்கு தேஹத்தின் அழகிலும் குணங்களின் அழகு ப்ரதானம். 'குணங்களாலும், ரூபகுணங்களாலும் ஸீதையினிடம் ராமனுக்கு ப்ரீதி மேலும் பெருகிற்று' என்றார் ருஷி. அலங்காரங்களிலும் குணங்களை உயர்த்தி. கவிகளின் ஸரஸ்வதீ ஸரஸ்வதீதேவியைப்போல், அத்யந்தசுத்தமாக இருக்கவேண்டும். (124)

𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌦𑌚𑌲𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑍀 𑌸𑌾𑌗𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌮𑍍 ।
𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑌨𑍁𑌰𑍍𑌭𑌾𑌤𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯(𑌕𑍃𑌤𑍍𑌯)𑌭𑍀𑌷𑍍𑌟𑌾 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 ॥

குதஶ்சிதசலஸ்தானாத் ப்ரயாந்தீ ஸாகராந்திகம் ।
த்ருச்யாத்ருச்யதநுர் பாதி ச்ருத்ய (க்ருத்ய) பீஷ்டா ஸரஸ்வதீ ॥

(ப-ரை) 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [குதஶ்சித்] - ஏதோ ஒரு (அபூர்வமான), 𑌅𑌚𑌲𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌤𑍍 [அசலஸ்தானாத்] - (1) மலைப்பிரதேசத்திலிருந்து, (2) தாம் பிறந்த, காவ்யம் பிறந்த, இடத்தை விட்டு அசையாமல் அங்கேயே வஸிக்கும் கவியிடமிருந்து, காவ்யமர்யாதையிலிருந்து நூலியேனும் விலகாத உயர்ந்த கவியிடமிருந்து, (3) பர்வதம் போன்ற ஔன்னத்யத்தை உடைய, 𑌸𑌾𑌗𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 [ஸாகராந்திகம்] - (1) நாயகனை ஸமுத்ரத்தின் அருகாமைக்கு, (2) ஸமுத்ரங்கள் பர்யந்தம் பூமண்டலமெங்கும் பரவுதற்காக, ஸமுத்ரசாயியான பகவானிடம், 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑍀 [ப்ரயாந்தீ] - ப்ரவஹித்து ஓடும், 𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑌨𑍁𑌃 [த்ருச்யாத்ருச்யதநு:] - (1) வெளியே காணப்பட்டும், காணப்படாமல் உள்ளே அந்தர்வாஹினியாயும், (2) வாச்யப்பொருளின் மேல் பொருளும், அதனிலும் அழகியதும், வெளிப்படையாய்த் தெரியாததுமான உட்பொருளும் கூடிய, 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌭𑍀𑌷𑍍𑌟𑌾 [ச்ருத்யபீஷ்டா] (1) 'இமம் மே கங்கே யமுநே ஸரஸ்வதி' என்று வேதம் புகழும் நதியான, (2) ச்ருதிபதங்களே நடுவே நடுவே (தெரிந்தும், தெரியாமலும்) அமைந்துள்ள, 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 [ஸரஸ்வதீ] - (1) ஸரஸ்வதீநதியானது, (2) கவிவாக்கான ஸரஸ்வதி, 𑌭𑌾𑌤𑌿 [பாதி] - விளங்குகிறது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— காவ்யங்கள் ஸமுத்ரசாயியான பகவானை நாயகனைக்கொண்டு ப்ரீதியோடு அவரிடமே செல்லவேணும். நதிகளுக்கு ஸாகரமே கதியாவதுபோல, வாக்குகளுக்கெல்லாம் பகவானிடம்தான் ப்ரதிஷ்டை. வேறொன்றைச் சொல்லுவதுபோலிருந்தாலும், உட்கருத்து பகவானிடம் ப்ரதிஷ்டிதமாக விருந்தால், காவ்யத்திற்கு ப்ரதிஷ்டை. இங்கே ஸ்வாமி மேககாவ்யத்தை நினைக்கிறார். மேகம் மால்யவானெனும்

பர்வதத்திலிருந்து கிளம்பி தேசம் தேசமாய் ரஸத்தை (ஜலத்தை) வர்ஷித்துக்கொண்டுபோவதுபோல, காவ்யமேகமும் ஸரஸநிசுளமான கவியின் ஸ்தானத்திலிருந்து (நகரத்திலிருந்து) கிளம்பி தேசமெங்கும் பரவி ரஸத்தை வர்ஷித்துக்கொண்டே வருகிறது. 'கவி' அசலமாயிருந்தாலும், காவ்யம் எங்கும் அதிவேகமாகப் பரவுகிறது. ஸமுத்ரபர்யந்தம் பூமண்டலம் முழுவதும் பரவுகிறது. லோகோத்தரமான கஸ்தூரீபரிமளமும் ஜலத்தில் விழுந்த தைலஸ்நேஹமும் தானே பரவும். பரிமளமும் ஸ்நேஹமுமுடைய வஸ்துபோல், நற்காவ்யமும் தானே அதிசீக்ரம் பரவும். ஸ்வாமியினுடைய க்ரந்தங்களின் யசஸ்ஸு அந்தக்காலத்திலேயே உடனே எங்கும் பரவிற்று. கீதை அவதரித்த காலத்திலேயே பரவிவிட்டது. ராமாயணமும் அப்படியே பரவிற்று. கஸ்தூரியின் பரிமளம்போல ஸத்காவ்யமும் வாஸிக்கும். சப்தம் பரவுதற்குத் தார்க்கிகர் 'கதம்பமுகுள' ந்யாயத்தைப் பேசுவர். நன்றாய்ப் புஷ்பித்த வ்ருக்ஷத்தின் வாஸனை தூரம் செல்லுவதுபோல, ஸத்காவ்ய வாஸனை புஷ்பிக்கையிலேயே தூரம் செல்லும். ஸரஸ்வதீநதி சில இடங்களில் அந்தர்வாஹினியாயிருக்கும். அடியிலே ரஸ (ஜல) ப்ரவாஹம் ஓடிக்கொண்டிருக்கும். மேலே வெளிப்படையாய்த் தெரியாது. காவ்ய ஸரஸ்வதியில் வ்யங்க்யமான ரஸப்பொருள்கள் அடியில் ஆழத்தில் கிடக்கும். மேலே வெளிப்படையாய்த் தெரியாது. காவ்யஸரஸ்வதியைப்போலவே ஸரஸ்வதீநதியும் அமைந்தது என்ற அழகு கவனிக்கத்தக்கது. வ்யாஸர் ஆச்ரமம் ஸரஸ்வதீநதிக்கரையில் அமைந்தது. ஸரஸ்வதீநதி ப்ரஹ்மநதியென்பர். தயாசதகத்தில் பகவானுடைய தயாநதி ஸரஸ்வதீநதிக்கு ஒப்பிட்டிருப்பதைக் கவனிக்கவேணும். 'க்ருத்யபீஷ்டா' என்றபாடத்தில் 'க்ருதிகளான, காவ்யக்ருதிகளின் கர்த்தாக்களான கவிகள் கொண்டாடத்தக்க' என்று பொருள் கொள்ளலாம். 'ச்ருத்யபீஷ்டா' என்னும் பாடத்தில் ச்ருதியால் கொண்டாடப்பட்ட நதி என்றும், ச்ருதிபதங்களும் சேர்ந்து அமைந்த வாக்கு என்றும் பொருள் கொள்ளவேணும். ஆழ்வான், பட்டர், தேசிகன் இக்கவிகள் வாக்குகள் இதற்கு நிதர்சனம். (125)

𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍋𑌦𑌿𑌤𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯
𑌹𑍃𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌃 ।

𑌸𑍁𑌦𑍃𑌶𑌾𑌂 𑌕𑌰𑍍𑌣𑌪𑍂𑌰𑌾𑌯
𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 (𑌤𑌾𑌦𑍃𑌶𑌃) 𑌫𑌲𑌭𑍇𑌦𑌤𑌃 ॥ ॥௧௨௬॥

ப்ரபூதோதிதமுக்தாபிர் பூயதே ஸூக்திசுக்திபி: ।
ஸுத்ருசாம் கர்ணபூராய தாத்ருக்த்வம் (தாத்ருச:) பலபேதத: ॥

(ப-ரை) 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑍋𑌦𑌿𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌃 [ப்ரபூதோதிதமுக்தாபி:] - (1) வீண் விஸ்தாரமில்லாத, சுருக்கமான, (2) பெரிதான முத்துக்களாகும், 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 [ஸூக்திசுக்திபி:] - (1) முத்துச் சிப்பிகள்போன்ற காவ்யஸூக்திகள், (2) ரத்னங்களான வ்ருத்தங்களையுட்கொண்ட காவ்யம்போன்ற முத்துச் சிப்பிகள், 𑌸𑍁𑌦𑍃𑌶𑌾𑌂 [ஸுத்ருசாம்] - (1) வித்வான்களுடைய, (2) அழகிய பெண்களுடைய, 𑌕𑌰𑍍𑌣𑌪𑍂𑌰𑌾𑌯 [கர்ணபூராய] - (1) செவிகளில் அம்ருதத்தை நிறைய வார்ப்பதற்கு யோக்யமாக, (2) கர்ணாலங்காரயோக்யமாக, 𑌪𑍂𑌯𑌤𑍇 [பூயதே] - ஆகுகை, 𑌫𑌲𑌭𑍇𑌦𑌤𑌃 [பலபேதத:] - பலவிசேஷத்தால், 𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 [தாத்ருக்த்வம்] - அந்தத் தன்மை. (ஏற்படுகிறது).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— "சேத: சுக்திகயா திபிய" என்று முராரி ஆதிகவிவாக்கை வர்ணித்த ச்லோகத்தை இங்கே நினைக்கிறார். ஸமுத்ரத்திற்கு ஸரஸ்வதி சேருவதை முன் ச்லோகத்தில் வர்ணித்தார். இங்கே ஸமுத்ரத்தில் முத்துச்சிப்பியில் ஸ்வாதிநக்ஷத்ரத்தில் மேகவர்ஷபிந்து விழுந்து சிறந்த பெரிய முத்துக்களாகி, யுவதிகளுக்குக் கர்ணாலங்காரமாவதைப் பேசுகிறார். முத்துச்சிப்பிகளுக்கும் கவிஸூக்திகளுக்கும் உபமானம். 'ஸுத்ருக்' என்பது வித்வான்களுக்கும் அழகிய பெண்களுக்கும் பெயர். ஸ்வாதியோகத்தில் சிப்பியில் விழும் வர்ஷரஸபிந்து முத்தாகி, பெண்கள் காதுக்கு அலங்காரமாகும் பாக்யத்தைப் பெறுகிறது. காவ்யரஸவர்ஷம் வித்வான்கள் செவிகளாரத் தேன் பொழியும்; அவர்கள் ச்ரோத்ரகுஹாத்திற்குள் அம்ருதத்தை வார்க்கும். 'தாத்ருச:' என்றும் பாடம். அது ஐந்தாம் வேற்றுமை. அடுத்த பதத்தோடு ஒன்றாக அந்வயிக்கும். அப்படிக்கொத்த பல விசேஷத்தால். அநேகர் முக்தராகும்படி பக்வம் செய்யும் வலிமையுடைய ஆசார்யஸ்ரீஸூக்திகளும் முத்துச்சிப்பிகளாகும்.

𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌮𑌵𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌪𑌿
𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 (𑌸𑍍𑌵𑌾𑌮𑌭𑌿𑌖𑍍𑌯𑌾𑌂) 𑌨 𑌮𑍁𑌞𑍍𑌚𑌤𑌿 (𑌞𑍍𑌚𑌤𑍀) ।
𑌕𑌾𑌲𑌿𑌕𑍇𑌵 𑌸𑌤𑌾𑌂 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃
𑌤𑌾𑌦𑍃𑌶𑌦𑍍𑌯𑍁𑌤𑌿 (𑌶𑍍𑌰𑍁𑌤𑌿) 𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍀 ॥ ॥௧௨௭)

ப்ரதீபமவம்ருஷ்டாபி
ஸ்வாபிமுக்யம் (ஸ்வாமபிக்யாம்) ந முஞ்சதி (தீ) ।
காலிகேவ ஸதாம் ஸூக்தி:
தாத்ருச த்யுதி (ச்ருதி) நந்தினீ ॥ (127)

(ப-ரை) 𑌕𑌾𑌲𑌿𑌕𑍇𑌵 [காலிகேவ] - (1) மேகமாலையைப்போல, (2) அக்ஷரங்களின் மாலைபோல, (3) காளிகாதேவிபோல, 𑌸𑌤𑌾𑌂 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃 [ஸதாம் ஸூக்தி:] - நல்ல கவிகளின் காவ்ய ஸூக்தி, 𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌂 [ப்ரதீபம்] - (1) நேரே எதிர்த்து, (2) வக்தாவின் எண்ணத்திற்கு விபரீதமாக, தூஷிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் தலைகீழாக, (3) வாமாகமங்களின் ஆசாரப்படி, 𑌅𑌵𑌮𑍃𑌷𑍍𑌟𑌾𑌪𑌿 [அவம்ருஷ்டாபி] - (1) குறுக்கே புகுந்து பிளக்கப்பட்டாலும், (2) சோதித்து விமர்சிக்கப்பட்டாலும், தலைகீழாகப் படிக்கப்பட்டாலும், (3) பரிசரிக்கப்பட்டாலும், 𑌸𑍍𑌵𑌾𑌮𑌭𑌿𑌖𑍍𑌯𑌾𑌂 [ஸ்வாமபிக்யாம்] - தன்னுடைய சோபையை, 𑌸𑍍𑌵𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 [ஸ்வாபிமுக்யம்] - (1) தன்னுடைய அனுகூலத்தன்மையை, (2) தன்னுடைய ஆனுகுண்யத்தை, 𑌨 𑌮𑍁𑌞𑍍𑌚𑌤𑌿 [ந முஞ்சதி] - விடுவதில்லை. (𑌨 𑌮𑍁𑌞𑍍𑌚𑌤𑍀 நமுஞ்சதீ - விடாமலேயிருந்துகொண்டு), 𑌤𑌾𑌦𑍃𑌶𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌨𑍍𑌦𑌿𑌨𑍀 [தாத்ருசச்ருதிநந்தினீ] அது 'அத்தனை அழகாயும், காதுக்கு இனிப்பாயும் இருக்கும். (சத்ருவின் மனதையும் ஆராதிக்கும்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— நற்கவிகளின் சிறந்த வாக்கைப் புகழ்கையில், நவவ்யாகரணபண்டிதரும், வாக்மிகளில் முதல்வருமான திருவடியை மறக்கமுடியுமோ? 'கழுத்தை வெட்ட வேண்டுமென்று கத்தியை ஓங்கினவனையும், அவருடைய வாக்கு ஆராதித்து, கத்தியைக் கீழே போடுவான்' என்று பெருமாள் புகழ்ந்த வாக்கு. தூஷிக்க எண்ணும் சத்ருவும், அந்த வாக்கைப் பராமர்சிக்கப் பராமர்சிக்க 'அதனழகில் அவன் மனம் ஈடுபட்டு'

அநுகூலரைக் காட்டிலும் அதிகமாகப் புகழ்வான். 'அறியாத அநுகூலருடைய புகழ்ச்சியைக் கோரமாட்டோம், ப்ரதிகூலரானாலும் வித்வானாயிருப்பவர் இதைக் கவனித்துத் தூஷித்தாலும், அவர்கள் விமர்சத்தையே கோறுவோம்' என்றார் முராரி கவி. 'ப்ரக்யாதவீர்யரான சத்ருவை விக்ரமங்களால் ரஞ்ஜிப்பிக்க' ஆசைப்படுவர் வீரர். 'காலிகை' என்பது மேகமாலையையும், அக்ஷரமாலையையும், (வர்ணபங்க்தியையும்), காளிகாதேவியையும் சொல்லும். நெருக்கமான (கனமான) மேகமாலையோடு மற்றொன்று உரசினாலும், அது தான் வர்ஷிப்பது முதலிய ஆபிமுக்யத்தை விடுகிறதில்லை. சில சித்ரமான அக்ஷரபந்தங்களில் தலைகீழாக அக்ஷரங்களைப் படித்தாலும், அப்படியே யிருக்கும்; அழகு குறையாது, அர்த்தம் குறையாது. யாதவாப்யுதயத்தில் 6-வது ஸர்க்கத்தில் கோவர்த்தனகிரியின் வர்ணனத்தில் 96, 98, 99, 100-வது ச்லோகங்களைக் கவனிக்கவேணும். 'நாகா நாகா நாகா' என்று 'நா'காரங்களாகவே 96-ம் ச்லோகம். ஒவ்வோர் பாதமும் எட்டு நாக்களால் ஒரே அக்ஷரத்தால் ஒரே ஸ்வரத்தால் அமைந்தது. அநேக சித்ரபந்தங்களையுடையது. அநுலோமமும், ப்ரதிலோமமும் ஒரே விதமாயிருக்கும் கதிசித்ரமுடையது. அதன் வ்ருத்தம் வித்யுந்மாலை என்று பெயர். கோவர்த்தனகிரியில் வர்ஷாகாலத்தில் மேகமாலை, மேகமாலைவண்ணன் கண்ணன், இதற்குத் தகுந்தபடி வித்யுந்மாலாவ்ருத்தத்தில் அநேக அத்புத சித்ரபந்தங்களோடு, அர்த்தபுஷ்டியால் ரஸத்தை வர்ஷிக்கும் ச்லோகம். இந்த ச்லோகங்களை ஸ்ரீதீக்ஷிதருடைய வ்யாக்யானத்துடன் ஸேவிக்கவேண்டும். ஸ்வாமியினுடைய வச்யவாக்த்வம் நன்றாகத் தெரியும். 'நயாநயா நயாநயா' என்றே நான்கு பாதங்களும் அமைந்தது 98-வது ச்லோகம். அதையே அப்படியே தலைகீழாகப் படித்து 'யாநயாநயாநயாந' என்றே நான்கு பாதங்கள் அமைந்தது 99-ம் ச்லோகம். இப்படி நிர்ப்பந்தத்துடன் செய்யும் அந்த ச்லோகங்களிலும் க்லேசலேசமில்லை. அர்த்தபுஷ்டி பரிபூர்ணம். எத்தனை கசக்கினாலும் கவிவாக்கின் அழகும், பொருள்ரஸமும் குறைவதே இல்லை. ப்ரதிகூலனான வித்வானுடைய செவியையும், மனத்தையும் கவரும்படி அத்தனை இனிப்பான காவ்யம். மேகத்தைக் கசக்கக் கசக்கப் பிழியப் பிழிய, நமக்கு அநுகூலமாகவே யிருக்கும். எத்தனை ப்ரதிகூலமான வித்வானும், நல்ல வாக்கைக்

காதில் வாங்கினால், அதனால் ஆராதிக்கப்படாமலிரான். அவச்யம் அவன் சித்தம் ஆவர்ஜிதமாகும். 'மேளகம் பிப்ரது மத்ஸரேண நமிதா:' என்னும் ஸூர்யோதயச்லோகத்தை இங்கே நினைக்கவேணும். காளிகாதேவிக்கு வாமாகமங்களின் வாமாசாரப்படிக்கு உபசாராதிகள் செய்வர். 'ப்ரதீபம்' என்பது வாமம். 'ஸம்ச்ரயே மதுரம் வாக்யம்' என்பதை தாக்ருசச்ருதிரந்தினீ என்பதால் நினைப்பூட்டுகிறார். (127)

𑌅𑌪𑌾𑌰𑍍𑌥𑍇𑌤𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂

𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌶𑌾𑌲𑌿𑌨𑌾𑌂 (𑌸𑌂𑌪𑌦𑌾𑌂) ।

𑌅𑌪𑌿 𑌗𑍋𑌪𑌾𑌲𑌗𑍀𑌤𑌾𑌨𑌾𑌂

𑌨𑌿𑌵𑍇𑌶𑍋 𑌨𑌿𑌗𑌮𑌾𑌦𑌿𑌷𑍁 ॥

அபார்த்தேதரயுக்தானாம் வ்யாஸஸங்க்ரஹசாலினாம் (ஸம்பதாம்) |
அபி கோபாலகீதானாம் நிவேசோ நிகமாதிஷு || (128)

(ப-ரை) 𑌅𑌪𑌾𑌰𑍍𑌥𑍇𑌤𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 [அபார்த்தேதரயுக்தானாம்] - (1) தப்புப் பொருளேயில்லாமல் நல்ல பொருள்களோடு கூடியதும், (2) நீங்காத அர்ஜுனஸம்பந்தத்தை உடையதும், 𑌵𑍍𑌯𑌾𑌸𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌶𑌾𑌲𑌿𑌨𑌾𑌂 [வ்யாஸஸங்க்ரஹசாலினாம்] - வ்யாஸம், (விஸ்தாரமான உரை, விரிவுரை,) ஸங்க்ரஹம், (சுருக்கம், சுருங்கிய உரை) இவற்றோடு அழகாக விளங்கும்), (2) வேதவ்யாஸரால் ஸங்க்ரஹிக்கப்பட்ட பெருமையுடைய, 𑌗𑍋𑌪𑌾𑌲𑌗𑍀𑌤𑌾𑌨𑌾𑌂 𑌅𑌪𑌿 [கோபாலகீதானாம் அபி] - (1) கோபாலர்கள் பாட்டுகளுக்கும், (2) கோபாலனுடைய கீதைகளுக்கும் கூட, 𑌨𑌿𑌗𑌮𑌾𑌦𑌿𑌷𑍁 [நிகமாதிஷு] - உபநிஷத்து, இதிஹாஸம், புராணம் முதலியவற்றின் நடுவில், 𑌨𑌿𑌵𑍇𑌶𑌃 [நிவேச:] - வைக்கப்படும், சேர்க்கப்படும், கௌரவம் ஏற்படும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கோபாலனுடைய கீதையிலும், உயர்ந்த காவ்யமுண்டோ? சப்தமாதுர்யத்திலும், பொருள் மாதுர்யத்திலும், காம்பீர்யத்திலும் கஹநமான தத்துவங்களின் உபதேசத் தெளிவிலும் கீதைக்கு நிகருண்டோ? பத்மநாபனுடைய முகபத்மத்திலிருந்து வெளிவந்த கீதங்கள்,

வ்யாஸரால் மஹாபாரதத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டவை. கீதோ பநிஷத்துக்கள் என்று உபநிஷத்துக்களின் மத்தியில் சேர்க்கப் பட்டவை. 'ஸ்ம்ருதி ஸ்ம்ருதி' என்று ப்ரஹ்மஸூத்ரங்களால் பல்கால் ப்ரமாணமாக ஆதரிக்கப்பட்டவை. ச்ருதியிலிருந்து ச்ரு தியின் அபார்த்தங்களைப் போக்குகிறது ராமாநுஜனுடைய கீதையும், ராமாநுஜனுடைய கீதாபாஷ்யமும். ஸம்க்ஷேபமெனும் சுருக்கவுரை, வ்யாஸமெனும் விரிவுரை ஆகிய இவ்விரண்டையும் கூட்டியிருக்கும் வித்வான்கள் ப்ரபந்தங்கள். ஆழ்வார்கள் ப்ரபந் தங்களை 'சபரகீதம்' 'வேடுவர் கீதம்' என்று பாதுகையில் வர் ணிக்கப்பட்டது. திருப்பாவை ஆயர்சேரிப்பாட்டாகும். கோபிகா கீதை பாகவதபுராணத்தில் புகுந்தது; ச்ருதிகீதையோடு தானும் ஓர் கீதையாக பாகவதத்தில் நிவேசம் பெற்றது. கோபாலன் உலகத்திலுள்ள கவிவாக்குகளையும், வேதவாக்குகளையும் பாலனம் செய்வான். ஸர்வகவிதைகளுக்கும் மூலம். ஸர்வகவிகளுக்கும் சக்தி யளிப்பவன். அவன் வாக்கினழகு கைமுத்தியத்தால் ஸித் தம். வேதம் கொண்டாடும் கவி. வேதவாக்கை அபார்த்தங்க ளுக்கு இடமில்லாமல் கோபாலகீதங்கள் காக்கின்றன. (128)

𑌜𑌲𑌾 (𑌜𑌡𑌾) 𑌶𑌯𑌸𑍍𑌯 𑌘𑍋𑌷𑍇𑌣 𑌜𑌾𑌤𑌦𑍌𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 𑌭𑍂𑌯𑌸𑌾 ।
𑌕𑌵𑌿𑌶𑌬𑍍𑌦𑌂 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌰𑍍𑌥𑍋 𑌨 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௨௯ ॥

ஜலா (ஜடா) சயஸ்ய கோஷேண ஜாதலௌல்யஸ்ய பூயஸா ।
கவிஶப்தம் திரோதாய கஶ்சிதர்த்தோ ந ஸாத்யதே ॥ (129)

(ப-ரை) 𑌜𑌾𑌤𑌦𑍌𑌲𑍍𑌯𑌸𑍍𑌯 [ஜாதலௌல்யஸ்ய] - (1) தானும் கவி யசஸ்ஸை அடையவேண்டும் என்ற சாபல்யமுடைய, (2) பெருங்காற்று முதலியதால் அதிகமாக அலைக்கும், 𑌜𑌲𑌾(𑌜𑌡𑌾) 𑌶𑌯𑌸𑍍𑌯 [ஜலா (ஜடா) சயஸ்ய] - (1) ஜடபுத்தியினுடைய, (2) ஜலாதாரத்தினுடைய, 𑌭𑍂𑌯𑌸𑌾 [பூயஸா] - மிகப்பெரிய, 𑌘𑍋𑌷𑍇𑌣 [கோஷேண] - இரைச்சலினால், 𑌕𑌵𑌿𑌶𑌬𑍍𑌦𑌂 [கவி சப்தம்] - (1) நல்ல கவியினுடைய காவ்யத்வநியை, (2) ஹம்ஸ த்வநியை, 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌯 [திரோதாய] - மறைத்து, (கேட்காமற் செய்வதால்), 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌰𑍍𑌥𑌃 [கஶ்சிதர்த்த:] - ஒரு ப்ரயோஜன மும், ஒரு பொருளும், 𑌨 𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍇 - ஸாதிக்கப்படுகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'ட' வுக்கும் 'ல' வுக் கும் அபேதமென்பர். ஜடமானபுத்தியுடையவர் ஜடாசயர். நல்ல கவியின் சப்தம் கேட்கப்படாமல், அசட்டுக் கவிகள் சப்தாடம் பரம் செய்வதால் அவர்களுக்கு ஒரு கவி யசஸ்ஸும் கிடைக்க மாட்டாது. நல்ல தடாகத்தில் ஜலம் அலைத்து அதிலிருக்கும் ஹம்ஸத்தின் த்வனியைக் கேட்க வொட்டாமல் செய்யும் அலை ஓசை இரைச்சல்போன்றதாகும் அக்ஷராடம்பரம் வீண் இரைச் சலேயாகும். அதில் ஓர் நல்ல பொருளுமிராது, அதனால் ஒரு பயனுமில்லை. (129)

𑌸𑌦𑌾𑌨𑌵𑍋𑌕𑍍𑌤𑌿𑌮𑌹𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑍁𑌨𑍍𑌧𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌕𑌾𑌨𑍍 ।
𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃 𑌕𑌾𑌵𑍍𑌯𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌪𑌿 𑌕𑌵𑌿𑌰𑍇𑌕𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶(𑌶𑍍𑌯)𑌤𑍇 ॥௧௩௦॥

ஸதானவோக்திமஹித: ப்ரதிருந்தந் ப்ரதீபகாந் ।
ப்ரதித: காவ்யநாம்னாபி கவிரேக: ப்ரகாச (ச்ய) தே ॥ (130)

(ப-ரை) 𑌸𑌦𑌾𑌨𑌵𑍋𑌕𑍍𑌤𑌿𑌮𑌹𑌿𑌤𑌃 [ஸதானவோக்திமஹித:]- (1) எப்பொழுதும் புதிது புதிதான ரஸங்களைப் பொழிவதால் பூஜிக்கப்பட்டு, தம்முடைய காவ்யம் எற்றைக்கும் புதிதாய் (நவமாய்)த் திகட்டாமலிருப்பதால் பூஜிக்கப்பட்டு, (2) தானவ ரெனும் அஸுரரால் மந்த்ராலோசனையில் கொண்டாடப்பட்டு பூஜிக்கப்பட்டு, 𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌕𑌾𑌨𑍍 [ப்ரதீபகாந்] - (1) விரோதம் செய்பவரை, (2) ப்ரதிகூலராகத் தூஷிப்பவரை, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑍁𑌨𑍍𑌧𑌨𑍍 [ப்ரதிருந்தந்] - தகைந்து அடக்கிக்கொண்டு, 𑌕𑌾𑌵𑍍𑌯𑌨𑌾𑌮𑍍𑌨𑌾𑌪𑌿 [காவ்யநாம்னா அபி] - (1) காவ்யர் என்னும் பெயராலும், (2) தாம் செய்யும் காவ்யத்தின் பெயராலே, 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃 [ப்ரதித:] - (1) ப்ரஸித்தரான, (2) கூப்பிடப்பட்டு ப்ரஸித்தரான, 𑌏𑌕𑌃 𑌕𑌵𑌿𑌃 [ஏக: கவி:] - ஏக: கவி:] - (1) ச்ரேஷ்டமான (அத்விதீயமான ஓர்) அஸுரகுருவான சுக்ராசார்யர், (2) ஓர் அத்விதீயச்ரேஷ்டகவி, 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 [ப்ரகாசதே] - ப்ரகாசி க்கிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'கவிகளுக்குள் நான் உசனஸென்னும் கவி' என்றார் கண்ணன். அங்கே கவி என்பது வரப்போகும் ஸூக்ஷ்மங்களையும் எதிர்பார்க்கக் கூடிய ஸூக்ஷ்ம

தர்சியைச் சொல்லுகிறது. காவ்யங்களைச் செய்யும் கவியையல்ல. கவியென்று அஸுரகுருவான சுக்ராசாரியருக்குப் பெயர். அவருக்குக் காவ்யரென்றும் பெயர். 'பார்க்கவர் ஒருவரைத் தவிர மற்ற மந்த்ரிகள் எல்லோரும் ராஜ்யதந்த்ர நீதியில் தவறிப்போவார். சுக்ரர் ஒருவர்தான் தவறவேமாட்டார்—என்ற வசனத்தைத் தாத்பர்ய சந்த்ரிகை காட்டிற்று. தேவகுரு ப்ருஹஸ்பதி தவறினாலும் தவறுவர்; அஸுரகுரு தவறவே மாட்டார், கவிக்கும் கவியெனும் சுக்ருக்கும் பொருந்தும்படி இந்த ச்லோகம் அமைக்கப்பட்டது. சுக்ரக்ரஹத்திற்கும் பொருந்தும். புதிது புதிதாகக் கல்பனைகள் அழகாகச் செய்யும் புத்தியை ப்ரதிபை என்பர். சர்விதசர்வணமில்லாமல் புதிதாகப் புதிதாக அழகிய காவ்யங்களை ரசனை செய்யும் கவிச்ரேஷ்டர் அறியாதன அறிவிப்பர். அவர்கள் காவ்யங்கள் ஸதா (என்றைக்கும்) நவமாகவே திகட்டாமல், (புதிதாகவே) இருக்குமென்றும் பொருள் கொள்ளவேண்டும். 'புராபி நவவ' என்று புராணசப்தத்தின் பொருள். ராமாயணம்போன்ற காவ்யம் மகிழமாலைபோல் வாடாமலர்கள். தூஷிக்கும் சத்ருவையும் ரஸங்களால் பரவசமாக்கும். காவ்யத்தின் பெயராலேயே ப்ரஸித்தராய் வழங்கப்படுவார். நைஷதகாரர் என்பர் 'ஸ்ரீஹர்ஷர்' என்றும் பெயர் தெரியாதவர். 'ஸ்தானே ராமாயணகவி: தேவீம் வாசம் அவீவ்ருணத்' என்றார் பவபூதி. 'ராமாயணகவி' என்றார் வால்மீகியை. சுக்ரக்ரஹத்திக்கு ப்ரதீபமாய் எதிராகப் பிரயாணம் செய்யக் கூடாது என்பர். ப்ரதிசுக்ரதோஷத்தைக் கவனியாமல் செல்லுபவரை சுக்ரர் பாதிப்பர். அசுபக்ரஹங்களின் கெடுதல்களை சுக்ரர் பரிஹரிப்பர். (130)

𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌪𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌾 ।
𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌵𑌿𑌹𑌰𑌨𑍍 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑌹𑌾𑌨𑌪𑌿 ॥

பூர்வகல்பப்ரகாரேண புருஷார்த்தப்ரவ்ருத்தயா ।
விசித்ரஸ்ருஷ்ட்யா விஹரந் வ்யாப்த: கஶ்சிந் மஹாநபி ॥

(ப-ரை) 𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌪𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 [பூர்வகல்பப்ரகாரேண] - (1) முன் காவ்யமார்க்கங்களை அநுஸரித்து, (2) முன் கல்பத்திலுள்ள நாமரூபங்களை அநுஸரித்து, 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌾 [புருஷார்த்தப்ரவ்ருத்தயா] - (1) கதாநாயகபுருஷர்கள், ப்ரதிபாதனப்ரகாரங்கள் இவற்றில் ப்ரவ்ருத்திக்கும்

ஜனங்களுக்குப் பிரயோஜனங்களை அளிக்கும், (2) உலகத்தில் புருஷார்த்தங்களை உண்டுபண்ணும், 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 [விசித்ரஸ்ருஷ்ட்யா] (1)விசித்ரமான காவ்யரசனையால், (2)விசித்ரமான ஜகத் ஸ்ருஷ்டியால், 𑌵𑌿𑌹𑌰𑌨𑍍 [விஹரந்] - விநோதமாகப் பொழுது போக்கிக்கொண்டு, 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌮𑌹𑌾𑌨𑍍 [கஶ்சித் மஹாந்] - (1) ஓர் அபூர்வ மஹாகவி, (2) ஓர் மஹாத்மா, பரமாத்மா, அல்லது மஹானென்னும் ஹிரண்யகர்ப்பருடைய புத்தி, 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌃 [வ்யாப்த:] - (1) கீர்த்தியால் விச்வவ்யாப்தமாவார். (2) உலகமெங்கும் வ்யாபிப்பர்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'கவிரேக: ப்ரஜாபதி:' என்பர். நியதி என்னும் விதி (ப்ரஹ்ம) ஸ்ருஷ்டியிலும், கவியின் ஸ்ருஷ்டி உயர்ந்தது என்று காவ்யப்ரகாசத்தின் முதல் ச்லோகம். விசித்ரார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கும் கவியை விச்வஸ்ரஷ்டாவிற்கு உவமையிடுகிறார். மஹாகவிகள் சொல்லும் ப்ராசீனமார்க்கத்தை அநுஸரிக்கவேணும். வரம்பை மீறக்கூடாது. ஈச்வரஸ்ருஷ்டிகள் கொடுக்கும் ஆனந்தத்தையும், அதற்கு மேற்பட்டும் கவிஸ்ருஷ்கள் கொடுக்கும். 'யதா பூர்வம் அகல்பயத்' என்று ஜகத்ஸ்ரஷ்டா விஷயத்தில் பூர்வகல்பப்ரகாரத்தை அநுஸரித்து ஸ்ருஷ்டியென்னும் ரசனையைச் செய்வதை சொல்லிற்று. 'மஹான் என்று ஜகத் ஸ்ருஷ்டிக்கு மூலமான ப்ரஹ்மாவின் புத்தியையும் சொல்லுவர்' என்று ஸ்ரீசங்கரபாஷ்யம். 'வ்யாப்த: கஶ்சிந் மஹாகவி:' என்றும் பாடம். 'வி' என்னும் பக்ஷிராஜனுக்கு ஆப்தமித்ரர் வ்யாப்தர். மஹத்தான 'கம்' என்னும் ஸுகத்தையுடைய 'வி' என்னும் 'பரமாத்மா' மஹாகவி சப்தத்தின் பொருள். (131)

𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌥𑌜𑌵𑍇𑌨 𑌲𑌬𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌾
𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾 𑌵𑌿𑌬𑍁𑌧𑍈𑌰𑌨𑌨𑍍𑌯𑌭𑌕𑍍𑌤𑍈𑌃 ।
𑌸𑍁𑌕𑌵𑍇𑌰𑌨𑌘𑌾𑌶𑌯𑌸𑍍𑌯 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃
𑌸𑍍𑌵𑌦𑌤𑍇 𑌦𑍁𑌗𑍍𑌧𑌪𑌯𑍋𑌨𑌿𑌧𑍇𑌸𑍍𑌸𑍁𑌧𑍇𑌵 ॥ ॥ ௧௨௨ ॥

மதிமந்தஜவேன லப்தவர்ணா
ப்ரதிபந்நா விபுதைரநந்யபக்தை: ।
ஸுகவேரநகாசயஸ்ய ஸூக்தி:
ஸ்வததே துக்தபயோநிதேஸ்ஸுதேவ ॥ (122)

(ப-ரை) 𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌥𑌜𑌵𑍇𑌨 [மதிமந்தஜவேன] - புத்தியென்னும் மத்துச் சுழலும் வேகத்தால், 𑌲𑌬𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌾 [லப்தவர்ணா]- (1) வெண்மையான வர்ணத்தையுடைய, (2) சுத்தமான மதுரமான, வர்ணங்கள் (அக்ஷரங்கள்), பதங்களோடு கூடியதும், 𑌅𑌨𑌨𑍍𑌯𑌭𑌕𑍍𑌷𑍈𑌃 [அனந்யபக்ஷை:] - (1) அம்ருதம் தவிர மற்றோராஹாரமில்லாத, (2) நல்ல காவ்யம் தவிர வேறொன்றையும் உணவாக ஆதரியாத, 𑌵𑌿𑌬𑍁𑌧𑍈𑌃 [விபுதை:] - தேவர்களால், (2) வித்வான்களால், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌾 [ப்ரதிபந்நா] - (1) பெறப்படும், (2) அங்கீகரிக்கப்படும், 𑌅𑌨𑌘𑌾𑌶𑌯𑌸𑍍𑌯 [அனகாசயஸ்ய] - ஈஷத்தேனும் தோஷம், கல்மஷம் இல்லாத மனத்தையுடைய, 𑌸𑍁𑌕𑌵𑍇𑌃 [ஸுகவே:] - நல்ல கவியின், 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃 [ஸூக்தி:]-காவ்யம், 𑌦𑍁𑌗𑍍𑌧𑌪𑌯𑍋𑌨𑌿𑌧𑍇𑌃 [துக்தபயோநிதே:] - பாற்கடலின், 𑌸𑍁𑌧𑌾 𑌇𑌵 [ஸுதா இவ] - அம்ருதம்போல, 𑌸𑍍𑌵𑌦𑌤𑍇 [ஸ்வததே] - தித்திக்கிறது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கவிபுத்தி உலகத்தில் ஸாரங்களையெல்லாம் கடைந்தெடுத்துப் பொறுக்கிப் பொறுக்கி, மதுரவர்ண பதங்களையும், இனிய பொருள்களையும் சேர்த்தமைக்கும் ஸத்காவ்யத்தை வித்வான்கள்ச்ரவணம் செய்து இன்புறுவர். இந்தக் காவ்யங்கள்தான் வித்வான்களுக்கு உணவு. செவிக்கு உணவு இருக்கும்போது, வயிற்றிற்கு உணவைத் தேடார். பட்டினியாக நிர்ஜலவ்ரதத்தோடு பாகவதாம்ருதரஸத்தைச் சுகமுகத் தாமரையிலிருந்து பருகிக்கொண்டிருந்த பரீக்ஷித்தைப் பசி பாதிக்கவில்லை. நற்காவ்யத்தைத் தவிர மற்ற க்ரந்தங்களை ரஸிகரான வித்வான்கள் கண்ணெடுத்துப் பாரார். கவியின் புத்தியெனும் மத்து, பாஷை ரஸம் ஆகிய பாற்கடலைக் கடையும். மந்தரமெனும் மத்தைப்போல வேகமாய்ப் பூமண்டலமெங்கும் சுற்றிச் சுழலும். பார் முழுவதையும் கடைந்து ஸாரமான அம்ருதத்தை எடுத்து வித்வல்லோகத்திற்குத் தரும். கவியின் புத்தியெனும் மத்திற்கு ஓர் ஏற்றமுண்டு. கவிபுத்தியில் விஷமெனும் தோஷலேசமே யிருப்பதில்லை. 'வர்ணம்' என்பது விஸ்தாரத்தையும் சொல்லும். 'மதிமந்தானம் ஆஸாத்ய' என்ற மஹாபாரதச்லோகத்தை இங்கே நினைக்கிறார். 'பாராசார்யவச: ஸுதாம்' என்கிற

ஸூக்த்யாம்ருதவிஷயமான ஸ்ரீ பாஷ்ய மங்களச்லோகத்தையும் நினைக்கிறார். அங்கே 'பௌமா: ஸுமனஸ:' என்பதுபோல் இங்கே தேவரையும் வித்வானையும் சொல்லுவதற்காக 'விபுதை:' என்று ப்ரயோகிக்கிறார். 'பக்தம்' என்று அன்னத்திற்குப் பெயர். மனுஷ்யருடைய அன்னத்தைத் தேவர்கள் உண்பதில்லை. அம்ருதமொன்றுதான் அவர்களுக்கு அன்னம். நைஷதகதையான நைஷதகாவ்யத்தைத் தேவர்கள் பானம்செய்து, அமுதினைக்கூட ஆதரிப்பதில்லை என்று நைஷதாரம்பம். தம் காவ்யம் அத்தனை இனியதென்று வ்யஞ்ஜனம். 'மதிமந்த' என்று மஹாபாரதச்லோகம்போலத்தொடங்குவதாலும், வ்யாஸரென்னும் உத்தமகவியையும், 'மஹாபாரதசந்த்ரமா:' என்னும் உத்தமகாவ்யத்தையும் நினைக்கிறார். அடுத்த ச்லோகத்தில் வ்யாஸரையும், வால்மீகியையும் ஸ்பஷ்டமாகப் பேசப்போகிறார். அதற்கு இங்கே அழகான ஸூசனம். (133)

𑌮𑌨𑍁𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌪𑌰𑌿𑌷𑌦𑌰𑍍𑌹𑌾 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌿𑌯𑌂
𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌕𑍍𑌤𑌾 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌦𑌯𑌮𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 𑌜𑌨𑍇 ।
𑌨𑌿𑌰𑍁𑌨𑍍𑌧𑍍𑌯𑍁𑌃 𑌕𑍇 𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌚𑌲𑌵𑌿𑌕𑌟𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌟𑌜𑌟𑌾
𑌪𑌰𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 𑌭𑌙𑍍𑌗𑍇𑌰𑍁𑌪𑌰𑌿 𑌯𑌦𑌿 𑌗𑌙𑍍𑌗𑌾 𑌨𑌿𑌪𑌤𑌤𑌿 ॥

மனுவ்யாஸப்ராசேதஸ்பரிஷதர்ஹா க்வசிதியம்
ஸுதாஸிக்தா ஸூக்தி: ஸ்வயமுதயமந்விச்சதி ஜநே ।
நிருந்த்யு: கே விந்த்யாசலவிகடஸந்த்யாநடஜடா
பரிப்ராந்தா பங்கோருபரி யதி கங்கா நிபததி ॥ (133)

(ப-ரை) 𑌮𑌨𑍁𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌾𑌚𑍇𑌤𑌸𑌪𑌰𑌿𑌷𑌦𑌰𑍍𑌹𑌾 [மனுவ்யாஸப்ராசேதஸ்பரிஷதர்ஹா] - மனு, வ்யாஸர், வால்மீகி இவர்களுக்கு யோக்யமான, இவர்கள் ஸபை கூட்டி ச்ரோதாக்களாகக் கேட்க யோக்யமான, 𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌕𑍍𑌤𑌾 [ஸுதாஸிக்தா] - அம்ருதம் நனைந்த, 𑌇𑌯𑌂 [இயம்] - இந்த அழகான, 𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃 [ஸூக்தி:] - காவ்யஸூக்தி (வாக்கு), 𑌕𑍍𑌵𑌚𑌿𑌜𑍍𑌜𑌨𑍇 [க்வசித் ஜனே] - யாரோ ஒரு ஸாமாந்யஜனத்தினிடம், 𑌉𑌦𑌯𑌂 [உதயம்] - உத்பத்தியையும் பெருக்கையும், 𑌸𑍍𑌵𑌯𑌂 [ஸ்வயம்] - தானாகவே ஸ்வயமாக, 𑌅𑌨𑍍𑌵𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 [அந்விச்சதி] - தேடுகிறது. 𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌚𑌲𑌵𑌿𑌕𑌟𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌟𑌜𑌟𑌾𑌪𑌰𑌿𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾 [விந்த்யாசல

விகடஸந்த்யாநடஜடாபரிப்ராந்தா] - விந்த்ய பர்வதத்தைப் போல விசாலமான, ஸந்த்யையில் நர்த்தனம் செய்யும் நடராஜர் ஜடையில் சுற்றிச் சுற்றி ஓடும் கங்கா [கங்கா] - நதீப்ரவாஹம், வஜ்ஜோஃ [ஸங்கோ:] - ஓர் மூடவன், உவரி [உபரி] - பேரில், யதி நிவததி [யதி நிபததி] - விழுந்தோடினால், கெ நிரஸ்யுஃ [கே நிருந்த்யு:] - யார் தடுக்கக்கூடும். தடுப்பாரார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கவிதையும், வசிதையும் ஸ்வயமாக வந்ததல்லாவிடில் விரஸமென்பர். "ஸமாஸம், ஸந்தி, எல்லாம் என் மூளையினருகே உபகதம், தானே நெருங்கி வந்தது, ஸமமதுரமான அர்த்தங்கள் வாக்யங்கள் எல்லாம் உபநதமாகித் தானாக நெருங்கி இந்த ராமாயணகாவ்யமமைந்தது" என்றார் ருஷி. அப்படி ஸ்வயமாகத் தானாக வரும் வாக்குத்தான் மனு வ்யாஸர் வால்மீகி முதலிய ருஷிகவிகளுக்கு யோக்யமானது. மனுவின் ஸ்ம்ருதியின் காவ்யாஸங்களையும், வைசித்ரியத்தையும் ஒரு நூற்றாண்டிக்கு முன் இங்கிலீஷில் மொழிபெயர்த்த ஆங்கிலேயவித்வான் மிக விஸ்தாரமாய்ப் புகழ்ந்தார். வாலிக்கு உபதேசிக்கையில் மனு இப்படிப் பாடினார் என்று ராமன் உதாஹரித்தார். 'மனுநெறி இப்படிகூறிற்றே' என்று கேட்டதற்கு மனுவின் பாட்டுகளையே உதாஹரித்துத் தர்மத்தை ப்ரகாசித்தார். "வால்மீகியும் வ்யாஸரும் நெஞ்சிலிருக்கையில் வேறு கவிகளும் முன்பு வெட்கப்படாமல் காவ்யரசனை செய்தார்கள்" என்று யாதவாப்யுதயாரம்பத்தில் ஸாதித்தார். 'பரிஷத்' என்பது ஸபையைச் சொல்லும். இம் மூன்று கவிகளும் கூடிய, ஸபை தமக்கு ஸ்வயமாக வரும் கவிதையை அநுபவித்து சிரக்கம்பம் செய்வரென்று வ்யஞ்ஜனம். ராமாயணத்தை முதலில் ஆச்ரமத்து ருஷிகள் கேட்டு மகிழ்ந்தார்கள். பிறகு ராஜபரிஷத்திற்கு வந்தது. ராஜஸபையைக் கண்டு ஸ்வாமி நடுங்குவர். ஆதிகவிகளான ருஷிகள் திருச்செவி சாற்றி சிரக்கம்பம் செய்யவேண்டும். காளிதாஸர் வாமனனெனும் குள்ளனைப் பேசினார்; அவன் மூடவனல்ல. கொஞ்சம் கொஞ்சம் நடக்கக்கூடியவன். 'நான் நடக்கவே முடியாத மூடவன்' என்கிறார். நானெங்கே? கங்கையெங்கே? வானின்று கவிதைக் கங்காப்ரவாஹம்போலத் தானாக என் மூளையில் விழுந்து, அங்கிருந்து சுத்

தமாய், வேகமாய், குளிர்ச்சியாய், இனிப்பாய், ப்ரவஹிக்கவேணும். மஹர்ஷிகளான ச்ரேஷ்டர்கள் கம்பீரமாக சிரக்கம்பம் செய்வார்கள். அது மட்டும் போதாது. ஸர்வஜ்ஞரும் ரஸிகதமரும், நடனுதிகலைகளில் நிபுணருமான ஸ்ரீநடராஜன் இந்த வாக்கங்காப்ரவாஹத்தைக் கேட்டு, ஆனந்தபரவசராகி அவர்சிரஸ்ஸு சுழன்று ஆடவேணும். "ச்லாகாகூர்ணிதசந்த்ரசேகரஜடாஜங்காலகங்காபய:" என்ற பாதுகாச்லோகத்தில் இந்தக் கருத்தை வ்யஞ்ஜனம் செய்தார். அதை இங்கும் நினைக்கவேணும். ஈச்வரன் குணத்தை ச்லாகித்து கூத்தாடுவர். "குணங்கள், தோஷங்கள் இரண்டையும் சோதகரான வித்வான்கள் க்ரஹிக்கவேணும். தோஷங்களை அறிந்து க்ரஹிக்காவிடில், அவர்கள் வித்வான்களாகமாட்டார், தோஷஜ்ஞரல்லாதவர் வித்வானல்லர். ஆனால் தோஷத்தைத் தொண்டைக்குள் அடக்கிக்கொள்வர், வெளியிடமாட்டார். குணங்களைச் சிரஸால் ச்லாகிப்பர். இதற்கு த்ருஷ்டாந்தம் ஈச்வரன் பாற்கடலிலிருந்த விஷத்தைத் தொண்டைக்குள் அடக்கினர். சந்த்ரனைத் தலையில் வைத்துக் கூத்தாடுகிறார்" என்பர். இந்த ஸுகவிபத்ததி முடிவிலும் இப்படிக்கொத்த மஹாகுணமுடைய ஸர்வஜ்ஞரான ஈச்வரனைப் பேசுகிறார்; அடுத்த பத்ததி முடிவிலும், அதாவது இந்த ஸுபாஷிதக்ரந்த முடிவிலும், பிறையினாலலங்க்ருதமான முடியையுடைய கிரீசரைப் பேசுகிறார். "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்பதை இங்கே நினைக்க. (133)

பதினோராவது ஸுகவி பத்ததி முற்றிற்று.

பன்னிரண்டாவது பரீக்ஷித பத்ததி.

காகாநாம் கோகிலாநாம் ச
ஸீமாபேத: கதம் பவேத் ।
யதி விச்வஸ்ருஜா ஸாக்ஷம் (ஸாக்ஷாத்)
ந க்ருதா கர்ணசஷ்குலீ ॥

காகானும் கோகிலானும் ச ஸீமாபேத: கதம் பவேத் ।
யதி விச்வஸ்ருஜா ஸாக்ஷம் (ஸாக்ஷாத்) நக்ருதா கர்ணசஷ்குலீ ॥

189914

(ப-ரை) विश्वसृजा [விச்வஸ்ருஜா] - ஸர்வஜகத்தையும் ஸ்ருஷ்டித்தவராலே, साक्षं [ஸாக்ஷம்] - கண்ணோடுகூட, कर्णशष्कुली [கர்ணசஷ்குலீ] - காது எனும் இந்த்ரியம், கர்ணபாசம், यदि न कृता [யதி ந க்ருதா] - செய்யப்படாமல் இருந்தால், काकानां [காகாநாம்] - காகங்களுக்கும், कोकिलानां च [கோகிலாநாம் ச] - குயில்களுக்கும், सीमाभेदः [ஸீமாபேத:] - பிரிவு, வேறு வேறு தன்மை, வேற்றுமை அடையாளம், कथं भवेत् [கதம் பவேத்] - எப்படி ஏற்படும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— காவ்யங்களில் ஸத்தையும் அஸத்தையும் ஸத்துக்கள் (பரீக்ஷகர்கள்) கேட்டு சோதிக்க வேண்டும் என்றது ரகுவம்சம். 'ஸாதுவையும், அவத்யத்தையும் (அஸாதுவையும்) ஸத்துக்கள் பரீக்ஷித்து நல்லதைக் கொண்டாடுவர்' என்றது மாளவிகாக்நிமித்திரம். ஸத்காவ்யத்தையும், அஸத்காவ்யத்தையும் பரீக்ஷகரான ஸஹ்ருதயர் பகுத்தறிவர். ஸத்காவ்யத்தில் சிறந்தது ஆதிகவியான வால்மீகி கோகிலத்தின் ராமாயண காவ்யம். பகவத்விஷயமல்லாத அஸத்காவ்யத்தை 'காகவாசிதம்' (காக்கைக் கத்தல்) என்றார் சுகர். முன் ச்லோகத்தில் கூறிய ப்ராசேதஸரை இங்கே கோகிலமாக நினைக்கிறார். கவிகள் என்ற பெயரால் மட்டும் ஸாத்ருச்யம் கிடைக்காது. மதுரப்பொருளும், மதுராக்ஷரமும், அபூர்வரஸமும் வாய்க்கவேண்டும். ஸர்வச்ருதி மனோஹரமாகவும்,ஸமுத்ரம்போல் ரத்னாட்யமாயும் படித்தாலும் பாடினாலும் மதுரமாயும், புண்யமாயும், வேதங்களோடு துல்யமாயும் இருக்கவேண்டும். மாங்கிளையில் உட்கார்ந்து குயில்கூவுவது போல், கவிதாசாகையிலும், நிகமகல்பதருவின் சாகையிலும் உட்கார்ந்து மதுரமாயும், மதுராக்ஷரமாயும் கூவவேணும். காட்சியெனும் ப்ரத்யக்ஷம் ஸூக்ஷ்மஸூக்ஷ்மமான ப்ரஹ்மத்தை அறிய வல்லதல்ல. நம்முடைய காதால் ச்ருதியைக் கேட்டுத்தான் அறிய வேண்டும். காதில்லாவிடில் ப்ரஹ்மத்தை அறியமுடியாது. ஆழ்வார்களான குயில்களின் மதுரகவிகளைக் கேட்டு ப்ரஹ்மத்தை அறியவேண்டும். ப்ரஹ்மத்தின் இனிப்பை யறியக் கண் போதாது. ச்ருதிப்ரமாணம் அவச்யம் வேணுமென்பதை அழகாக விளக்குகிறார். காக்கைக்கும் குயிலுக்கும் உருவத்தில் பேதமில்லை. கண்ணெனும் ப்ரமாணத்தால் அவ்விரண்டின் வேற்றுமையை அறிய

முடியாது. காதைக்கொண்டு மிக எளிதாய் இனிப்பை அறியலாம். அனேக ப்ரமாணங்களைக்கொண்டு சோதித்து ஸூக்ஷ்மங்களை அறியவேணும். 'ஸாக்ஷாத்' என்ற பாடத்தில் 'விச்வத்தைப் படைத்த ப்ரஹ்மம்தானே நேராக (ஸாக்ஷாத்தாக) காதெனும் இந்த்ரியத்தைப் படைக்காமலிருந்தால்' என்பது பொருள். இந்திரியஸ்ருஷ்டி ஸமஷ்டியில் சேர்ந்ததென்றும், அதனால் சதுர்முக ஸ்ருஷ்டிக்குமுன்பே ப்ரஹ்மத்தாலேயே ஸாக்ஷாத்தாக ஸ்ருஷ்டிக்கப்படுகிறதென்றும் சொல்லுவர். (134)

छन्दःप्रत्ययशुद्धात्मा पश्यन् यतिगणस्थितीः (थीं) ।
वर्णादिनियतं वृत्तं नियुङ्क्ते गौरवादिवित् ॥௧௩௫॥

சந்த:ப்ரத்யயசுத்தாத்மா பச்யந் யதிகணஸ்திதீ: (தீம்) ।
வர்ணாதிநியதம் வ்ருத்தம் நியுங்க்தே கௌரவாதிவித் ॥

(ப-ரை) छन्दःप्रत्ययशुद्धात्मा [சந்த:ப்ரத்யயசுத்தாத்மா] - (1) சந்தஸெனும் வேதத்தின் பொருளை அறிந்த சுத்தமான மனதையுடைய, (2) சந்த:சாஸ்த்ரம் என்கிற வ்ருத்தசாஸ்த்ரத்தை நன்றாய் அறிந்து தெளிவான புத்தியை உடைய, यतिगणस्थितीः (थीं) [யதிகணஸ்திதீ:] (தீம்) - (1) இந்த்ரியங்களை ஜயித்தவரான யதிகளுடைய ஆசாரம் மர்யாதை முதலியதை, (2) ச்லோகங்களில் நிறுத்தவேண்டிய இடங்களெனும் யதிகளின் ஸ்தானங்களை, पश्यन् [பச்யந்] - பார்த்துக்கொண்டு, கவனித்துக்கொண்டு, गौरवादिवित् [கௌரவாதிவித்] - (1) குரு இருக்கவேண்டிய முறைகளையும், சிஷ்யனிருக்கவேண்டிய முறைகளையும் அறிந்தவரான, (2) குருவான எழுத்து லகுவான எழுத்து முதலிய பேதங்களைத் தெரிந்தவரான, (1) ஆசிரியர், (2) கவி, वर्णादिनियतं [வர்ணாதிநியதம்] - (1) அந்தந்த வர்ணங்களுக்கே தனித்து ஏற்பட்ட, (2) வர்ணம் மாத்திரை முதலிய நியமங்களோடு கூடிய, वृत्तं [வ்ருத்தம்]- (1) ஆசாரத்தை, (2) விருத்தத்தை, नियुङ्क्ते [நியுங்க்தே] - (1) கட்டளையிடுகிறார், உபதேசிக்கிறார். (2) ப்ரயோகிக்கிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— குருக்களுக்கும் கவிகளுக்கும் பொருந்தும்படி இந்த ச்லோகம் அமைந்தது. கவிகளும்

ஜகதாசார்யரைப்போல வேதம் வல்லவராயும், உயர்ந்த சீலம் உடையவராகவும், நல்லொழுக்கத்தையே போதிப்பவராயுமிருக்க வேண்டும். 'காந்தாஸம்மிதோபதேசம்' காவ்யோபதேசம் மனதுக்கு இனியதாயின் தலையணை மந்த்ரம்). காவ்யங்கள் ஜனங்கள் மனதை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டும், வால்மீகியே கவிகளில் சிறந்தவர், உத்தமாசிரியர். வ்யாஸர் உத்தமகவி, ஜகத்குரு. 'பூர்வஸூரிகள்' என்று காளிதாஸரும், 'குருப்ய; பூர்வேப்ய:' என்று பவபூதியும் ஆதிகவியைப் பேசினார்கள். ஸம்ஸ்க்ருதபாஷையும் 'சந்தஸ்' என்று வேதத்திற்கும், ச்லோகவ்ருத்தத்திற்கும் ஒரே பெயரிட்டது. காவ்யமெல்லாம் வேததுல்யமாய் வேதத்தோடு ஒத்ததாயிருக்கவேணும். வேதவிருத்தமாய் இருக்கக்கூடாது. புண்யமும் வேததுல்யமுமாயுமிருக்கவேணும். விருத்தத்தில் நிற்குமிடம் 'யதி'. அதைப் பங்கம் பண்ணுவது தோஷம். யதிகள் நியமத்தைப் பங்கம் செய்யக்கூடாது. அவர்கள் உகக்கும்படி நடக்கவேண்டும். ச்லோகவ்ருத்தத்தில் வர்ணநியமம் எப்படி மீறக்கூடாதோ, அப்படியே லோகவ்ருத்தத்தில் வர்ண நியமாதிக்ரமம் கூடாது. ஆசாரஸம்சயம் வந்தால், ஜகத்குருக்கள் தாமும் வேதார்த்தங்களைத் தெளியவோதி, அலூக்ஷராய், தர்மைககாமராய் இருக்கும் ஜிதேந்த்ரியரான நடப்பை (வ்ருத்தத்தை)ப் பார்த்து, அதை அனுஸரித்துத் தர்மநிர்ணயம்செய்து உபதேசிக்கவேண்டும். (135)

𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑍇𑌽𑌪𑌿 𑌦𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ।
𑌵𑍍𑌯𑌨𑌕𑍍𑌤𑌿 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌸𑌹𑌸𑌾 𑌶𑍁𑌚𑌿𑌰𑍇𑌕𑌃 𑌸𑍍𑌵𑌤𑍈𑌕𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑌤𑌃 ॥

ஸுவர்ணமபி துர்வர்ணம் யுக்த்யா தர்சயதி க்வசித் |
வ்யநக்தி சுத்திம் ஸஹஸா சுசிரேக: ஸ்வதைக்ஷண்யத: ||

(ப-ரை) 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 [க்வசித்] - (1) குலகோத்ரம் தெரியாத ஒருவனிடம், (2) ஓர் லோஹத்தில், (3) காவ்யத்தில், 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑍇𑌽𑌪𑌿 [ஸுவர்ணேऽபி] - நல்ல ஜாதியைக்கூட, (2) தங்கமாயிருக்கையிலேயே, (3) நல்ல வர்ணாதிகளோடு ஸத்காவ்யமாயிருப்பதையும், 𑌦𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 [துர்வர்ணம்] - (1) தாழ்ந்த ஜாதியாக, (2) வெள்ளியாக, இளப்பமான லோஹமாக, (3) அஸத்காவ்யமாக, 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 [யுக்த்யா] - யுக்தியினால், 𑌦𑌰𑍍𑌶𑌯𑌤𑌿 [தர்சயதி] - ஒருவன் (அஸூயையால்) காட்டுவான், 𑌶𑍁𑌚𑌿𑌃

[சுசி:] - (1) பரிசுத்தமான யோகியான, (2) நெருப்பு, (3) அஸூயையில்லாத குணபக்ஷபாதியான, 𑌏𑌕𑌃 [ஏக:] - (1) ஓர் அபூர்வப் பெரியோர், (2) ஒன்றே, (3) ஓர் அபூர்வவித்வான், 𑌸𑍍𑌵𑌤𑍈𑌕𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑌤𑌃 [ஸ்வதைக்ஷ்ண்யத:] - (1) தன்னுடைய தீவ்ரதபஸால், தேஜஸ்ஸினாலே, (2) தன்னுடைய தீக்ஷ்ணமான உஷ்ணத்தினால், (3) தன் தீக்ஷ்ணமான ருஜுவான தூஷகர்களுக்கும் உட்படாத புத்தியினாலே, 𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 [சுத்திம்] - சுத்தத்தன்மையை, 𑌵𑍍𑌯𑌨𑌕𑍍𑌤𑌿 [வ்யனக்தி] - விளக்குகிறார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— காவ்யங்களிலும் உத்தமஜாதி, இளப்பஜாதி இவையுண்டு. தங்கம், வெள்ளி, பித்தளை முதலிய பேதமுண்டு. ஜாதிஸம்சயம் வந்தால், தபஸ்விகள், யோகிகள் தங்கள் தேஜஸ்ஸால் உண்மையைக் கண்டு பிடிக்கவல்லவர். தங்கம் சுத்தமா, அசுத்தமா, வேறு இளப்பமான லோஹமா என்பதை அக்னி பரீக்ஷித்துக் காட்டிவிடும். அக்னியில் வைத்தால் அதன் தைக்ஷண்யத்தால் விசுத்தியும் கலப்பும் தெரிந்துவிடும். ரகுவம்சச்லோகங்களே திருவுள்ளத்தில் ஓடுகின்றன. "ஹேம்ன: ஸம்லக்ஷ்யதே ஹ்யக்னௌ விசுத்தி: ச்யாமிகாபி வா" என்கிற பின்பாதி இங்கே சேர்ந்துளது. அஸூயையில்லாத பரீக்ஷகர்கள் ஸத்தையும் அஸத்தையும் பிரித்தறிய வல்லவர். அக்னியின் ஸாக்ஷ்யத்தைத் திவ்யஸாக்ஷி என்பர். கெட்ட ஸ்வபாவமா, நல்ல ஸ்வபாவமா, குற்றவாளியா, சுத்தவாளியா என்பதை அக்னிபரீக்ஷை விளக்கிவிடும் என்பர். ஸத்வித்யையும் இதை ஓர் த்ருஷ்டாந்தமாக எடுத்தது. பிறரின் தங்கத்தைப் பித்தளை என்று சிலர் தூஷித்துப் பேசுவர்; தங்கள்பித்தளையை (ஹாடகம்) என்பர். அக்னியில் பரீக்ஷை செய்தால் உடனே பித்தளாடகத்தின் உண்மை வெளிப்படும். துர்வர்ணம் என்னும் வெள்ளியையும், தாம்பிரம் முதலிய தாழ்ந்த லோஹங்களையும் தீக்ஷ்ணமான அக்னி தாதுவாதமஹிமையால், சுத்தமான ஸ்வர்ணமாக மாற்றும் என்பர். பாதுகாஸஹஸ்ரத்தில் 'ப்ரஹ்மா தலையில் எழுதிய துர்வர்ணத்தை (வெள்ளியை, கெட்ட எழுத்தை) நீ ஸுவர்ணமாக (நல்ல எழுத்தாக) உன் மஹிமையால் உன்னைத் தரிப்பவர்விஷயத்தில் மாற்றிவிடுகிறாய், நீ எங்கே இந்த ரஸாயனதாதுவாதத்தைக் கற்றுக்கொண்டாய்' என்று கேட்கும் ச்லோகத்தையும் இங்கே நினைக்கிறார். (136)

𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌸𑍍𑌵𑌾𑌦𑍁𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌾𑌂 𑌕𑌲𑌶𑍋𑌦𑌧𑍇𑌃 ।
𑌦𑍋𑌷𑌂 𑌕𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌦𑍁𑌷𑍍𑌟𑌜𑌿𑌹𑍍𑌮𑍇𑌨 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ॥

ஸ்வச்சஸ்வாதுவிசுத்தாநாம் ஸ்ரோதஸாம் கலசோததே: l
தோஷம் கேZபி ந ம்ருஷ்யந்தி துஷ்டஜிஹ்மேன கல்பிதம் ll

(ப-ரை) 𑌕𑌲𑌶𑍋𑌦𑌧𑍇𑌃 [கலசோததே:] - (1) பாற்கடலினுடைய, (2) பாற்கடல்போன்ற கவியினுடைய, காவ்யத்தினுடைய, 𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌸𑍍𑌵𑌾𑌦𑍁𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 [ஸ்வச்சஸ்வாதுவிசுத்தாநாம்] - (1) தெளிவாயும் ருசியாயும் தோஷமற்றதாயுமுள்ள, (2) தெளிவான பொருளுடையதும், மதுரமானதும், நிர்தோஷமுமான, 𑌸𑍍𑌰𑍋𑌤𑌸𑌾𑌂 [ஸ்ரோதஸாம்] - (1) பால் நீர்களில், (2) காவ்யச்லோகங்களில், 𑌦𑍁𑌷𑍍𑌟𑌜𑌿𑌹𑍍𑌮𑍇𑌨 [துஷ்டஜிம்ஹேன] - (1) பொல்லாத விஷப்பாம்பினால், வாஸுகியால், (2) ஆர்ஜவம் இல்லாத பொல்லாதவரால், 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 [கல்பிதம்] - கல்பிக்கப்பட்ட, ஏற்பட்ட, 𑌦𑍋𑌷𑌂 [தோஷம்] - (1) விஷத்தை, (2) குற்றத்தை, 𑌕𑍇𑌽𑌪𑌿 [கேZபி] - ஒருவரும், 𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 [ந ம்ருஷ்யந்தி] - ஸஹிக்கமாட்டார்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தோஷமற்றது ஸத்காவ்யம், குணங்களால் பரிபூர்ணமானது. குணங்களில் தோஷத்தை ஆரோபித்துக் காட்டுவது அஸூயையென்னும் துஷ்டஸ்வபாவம். தங்கள் தோஷசித்தத்தால் அஸூயாளுக்கள் பாற்கடல்போன்ற ஸ்வச்சஸ்வாதுவிசுத்தமான ஸத்காவ்யத்தில் தோஷாரோபணம் செய்வதை ஸத்துக்களான வித்வான்களொருவரும் ஸஹிக்கமாட்டார். வாஸுகி பாற்கடலில் விஷத்தைக் கக்கினதுபோல, அஸூயாவிஷத்தைக் கக்குகிறார்கள். விஷப்பாம்புபோன்ற அவர்கள் தங்களுள்ளத்திலுள்ள தோஷவிஷத்தைக் கக்கிப் பாற்கடல்போன்ற நற்காவ்யத்தில் தோஷம் கல்பிக்கிறார்கள். பாற்கடலிலே தோன்றிய விஷம் எப்படி வாஸுகியின் விஷமேயல்லாது பாற்கடலின் தோஷமல்லவோ, அப்படியே ஸத்காவ்யத்தில் அஸூயாளுக்கள் கல்பிக்கும் தோஷங்களும் பொய்யாக ஆரோபிதமே. (137)

𑌇(𑌸)𑌹𑍈𑌵 𑌭𑍁𑌵𑌨𑍇 𑌜𑌾𑌤𑌂 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇(𑌨) 𑌕𑍍𑌷𑌮𑌮𑍍 ।
𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑍈𑌰𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌮𑌪𑌿 𑌜𑌿𑌹𑍍𑌮𑌗𑍈𑌃 ॥ ௧௩௮ ॥

இ (ஸ) ஹைவ புவநே ஜாதம் ஸத்வஸம்ஸ்த்தாபநே (ந) க்ஷமம் l
க்ருஹ்யதே கிமபி ஸ்வஸ்த்தை: அந்யத் கிமபி ஜிஹ்மகை: ll

(ப-ர) 𑌇𑌹𑍈𑌵 𑌭𑍁𑌵𑌨𑍇 [இஹைவ புவனே] - (1) இந்தப் பூமண்டலத்தில், (2) ஸமுத்ரத்தில், 𑌜𑌾𑌤𑌂 [ஜாதம்] பிறந்ததும், 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑍇 [ஸத்துவஸம்ஸ்த்தாபனே] - (1) ஸத்துவகுணத்தை நிலை நிறுத்துவதில், உயிரைக் காப்பாற்றிப் போஷிப்பதில், (2) உயிரை மாய்த்துவிடுவதில், 𑌕𑍍𑌷𑌮𑌂 [க்ஷமம்]- யோக்யமான, ஸமர்த்தமான, 𑌕𑌿𑌮𑌪𑌿 [கிமபி] - ஓர், அபூர்வமான, அழகிய பொருள், அம்ருதம், அம்ருதம்போன்ற இனிய பொருள், 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑍈𑌃 [ஸ்வஸ்த்தைஃ] - (1) ருஜுவான புத்தி உடைய வித்வான்களால், (2) ஸ்வர்க்கத்திலுள்ள ஸ்வர்க்கிகளால், 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 [க்ருஹ்யதே] - க்ரஹிக்கப்படுகிறது. 𑌜𑌿𑌹𑍍𑌮𑌗𑍈𑌃 [ஜிஹ்மகைஃ] - (1) வக்ரபுத்தியுடைய அஸூயாளுக்களால், (2) வக்ரகதியுடைய விஷப்பாம்புகளால், 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌕𑌿𑌮𑌪𑌿 [அந்யத் கிமபி] - (1) இல்லாத தோஷம், (2) காலகூடவிஷம், 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑍇 [க்ருஹ்யதே] - க்ரஹிக்கப்படுகிறது. (𑌸𑌹𑍈𑌵 𑌜𑌾𑌤𑌂 [ஸஹைவ ஜாதம்] - காவ்யத்தைக் கேட்கையிலேயே ஏற்படும் அதற்கு ஸ்வாபாவிகமான பொருள்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— அம்ருதம்போன்ற இனிமையான காவ்யமும் அஸூயை உள்ளவர்களால் விஷமெனவே க்ரஹிக்கப்படும். "ஓரே வஸ்து ஒருவனுக்கு ப்ரியமாயும், மற்றொருவனுக்கு அப்ரியமாயும் இருக்கும். அப்படி வேறு வேறாயிருப்பது க்ரஹிக்கிறவனுடைய பிறவிக் கர்மபலம்" என்பர். ஸத்துவகுணமும் அஸூயையும் பிறக்கையிலேயே கூடப் பிறப்பது. காவ்யத்தைக் கேட்கையிலேயே, உடனே அப்பொழுதே, கூடவே அமுதப்பொருளே ஒருவருக்குப் படுகிறது. விஷப்பொருளே, தோஷப்பொருளே மற்றொருவருக்குப் படுகிறது. ரஸமான நற்பொருள் ஸத்துவகுணத்தை வைதுஷ்யத்தை வளர்க்கும் தோஷப்பொருள் ஸத்துவகுணத்தை ஹிம்ஸிக்கும். பாற்கடலும், அம்ருதமும் ஸ்வாமி நெஞ்சிலோடிக்கொண்டிருக்கிறது. அமுதம் விஷம் இரண்டும் கூடவே பிறந்தது. அம்ருதத்தை ஸ்வர்க்கிகளான தேவர்கள் க்ரஹித்தார்கள்; விஷத்தைப் பாம்புகள் க்ர

ஹித்தன. அஸூயாளுக்கள் ஸர்ப்பங்களைப்போல விஷத்தை க்ரஹித்துக் கக்குவர். 'ஸத்' என்பவர் 'வித்வான்'. 'ஸத்துவம்' வித்வானுடைய தன்மை. 138)

𑌕𑌲𑌕𑌣𑍍𑌠𑌕𑍁𑌲𑌾 (𑌕𑌲𑌾, 𑌕𑌣𑌾) 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑍇
𑌕𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌨𑌿𑌜𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑍇 ।
𑌨𑌿𑌮𑍍𑌬𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌰𑍁𑌦𑍍𑌗𑍀𑌰𑍍𑌣𑍇
𑌨 𑌚𑍂𑌤𑌃 𑌪𑌰𑌿𑌤𑌪𑍍𑌯𑌤𑍇 ॥ ॥ ௧௩௯ ॥

கலகண்டகுலா (கலா, கணு) ஸ்வாத்யே
காமஸ்யாஸ்த்ரே நிஜாங்குரே ।
நிம்பவ்ருத்திபிருத்கீர்ணே
ந சூத: பரிதப்யதே ॥

(ப-ரை) 𑌕𑌲𑌕𑌣𑍍𑌠𑌕𑍁𑌲𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑍇 [கலகண்டகுலாஸ்வாத்யே] - (1)குயிலினங்களால் ரஸிக்கத்தக்க, (2)கோகிலம்போன்ற மதுரகவிகளுக்குச் சுவைக்கும், 𑌕𑌾𑌮𑌸𑍍𑌯 𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 [காமஸ்ய அஸ்திரே]-மன்மதனுடைய அஸ்த்ரமான (ஸாதனமான), ஆசைப்படும் மோக்ஷத்தைஸாதித்துக்கொடுக்க சரணாகதிஎன்பதும், மோக்ஷஸாதனமான அஸ்த்ரத்வேன ஆத்மப்ரக்ஷேபமெனும் ந்யாஸோபாயத்தை விளக்கும், 𑌨𑌿𑌜𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑍇 [நிஜாங்குரே]தன்னுடைய-துளிர், நிஜஸ்வரூபாவிர்பாவம் அங்குரிக்கும்படி செய்யும், மோக்ஷதசாங்குரக்ரந்தம், 𑌨𑌿𑌮𑍍𑌬𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 [நிம்பவ்ருத்திபி:] - வேம்பைத் தின்று ஜீவிக்கும் ஒட்டகங்களால், வேப்பம்பழம் தின்னும் காகங்களால், 𑌉𑌦𑍍𑌗𑍀𑌰𑍍𑌣𑍇 [உத்கீர்ணே] - சீச்சீ என்று எறிந்துவிடுவதால், 𑌚𑍂𑌤𑌃 [சூத:] - மாமரம், 𑌨 𑌪𑌰𑌿𑌤𑌪𑍍𑌯𑌤𑍇 [ந பரிதப்யதே] - தாபப்படாது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— தங்கள் காவ்யங்களை அரஸிகர், முழுக்கோணலான வக்ரர், ரஸிக்காமல், உள்ளே பருகிக் களிக்காமலிருப்பதை யிட்டு உயர்ந்த கவிகள் தாபப்படமாட்டார். மாந்தளிர் மனோஹரமானது; மன்மதனுடைய ஓர் அஸ்த்திரம். தலைவனுக்கும் தலைவிக்கும் காமத்தை உண்டுபண்ணி வ்ருத்தி செய்யும் ஸாதனம். மாந்துளிரைக் குயில்கள் கூட்டம் கூட்டமாய் கூடி ருசியோடு தின்னும். "சூதாங்குராஸ்வாதகஷாயகண்ட:"

என்ற குமாரஸம்பவச்லோகத்தை இங்கே நினைக்கிறார். உயர்ந்த காவ்யங்களை நற்கவிகள் ஆஸ்வாதம் செய்து, குயில்போல மதுர ச்லோகங்களை ரசனைசெய்து பாடுவர். 'நிம்பவ்ருத்தி' என்பது வேம்பைத் தின்று ஜீவிப்பதைச் சொல்லும். ஒட்டகத்தையும், காக்கையும் சொல்லலாம், முன் சொன்ன பாம்புகளின் கதி வக்ரம். ஒட்டகைக்கு உடம்பெல்லாம் கோணல், வக்ரம். "வண்டு மலர்ச் சேர்க்கை விரும்பும் செழும்பொழில்வாய், வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி" என்பர். பிறவியில் ஏற்படும் ருசிபே தம் காரணம். ராஸிக்யமென்பது பிறவியாலமையவேணும். ஸார சாஸ்திரத்தின் முடிவிலும் இந்த ச்லோகம் உளது. பெருமாளை னும் பதியையும் ஜீவரையும் இருதலையிலும் காமத்தை யுண்டு பண்ணிக் கூட்டிவைக்கும் நூல் ரஹஸ்யத்ரயஸாரம். அங்கே 'கண' என்றே பாடம். சரணாகதிரஸத்தை வர்ஷிக்கும் இந்த ஸாரசாஸ்த்ரரஸத்தை வால்மீகி கோகிலம் முதலிய கோகிலங்கள் ரஸிக்கவேண்டுமென்று தாத்பர்யம். 'மனுவ்யாஸப்ராசேதஸ பரிஷதர்ஹா', 'வைசம்பாயன சௌனகப்ரப்ருதய: ச்ரேஷ்டா: சிர: கம்பின:' என்றதுபோல. 'ப்ரக்ருதிம் யாந்தி பூதானி' அவனவன் வாஸனைப்படி அவனவனுக்கு ருசி. (139)

𑌰𑌤𑍍𑌨𑌾(𑌕𑌰𑌾)𑌭𑌰𑌣𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑌙𑍍𑌕𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌕𑌾𑌚𑍋𑌽𑌪𑌿 𑌲𑌲𑌿𑌤𑌾𑌯𑌤𑍇 ॥ ॥ ௧௪௦ ॥

ரத்ஞு (கரா) பரணயோக்யாணும் ராஜாந்த:புரயோஷிதாம் ।
க்ரீடாகங்கணநிர்மாணகாசோऽபி லளிதாயதே ॥ (140)

(ப-ரை) 𑌰𑌤𑍍𑌨𑌾𑌭𑌰𑌣𑌯𑍋𑌗𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 [ரத்ஞாபரணயோக்யாஞும்] - ரத்னவளைகளைத் தரிக்க யோக்யமான, 𑌰𑌾𑌜𑌾𑌨𑍍𑌤𑌃𑌪𑍁𑌰𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌂 [ராஜாந்த:புரயோஷிதாம்] - ராஜாவின் அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகளுக்கு, 𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑌙𑍍𑌕𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌕𑌾𑌚𑍋𑌽𑌪𑌿 [க்ரீடாகங்கணநிர்மாணகாசோऽபி]- விளையாட்டுக்காகக் கையில் போட்டுக்கொள்ளும் வளையல்களைச்செய்யும் த்ரவ்யமான(மண்) கண்ணாடியும், 𑌲𑌲𑌿𑌤𑌾𑌯𑌤𑍇 [லளிதாயதே] - அழகேயாகும்.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— 'மதுரமான ஆக்ருதிகளுக்கு எதுதான் அழகாகாது' என்றார் காளிதாஸர். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமென்பர். நல்ல கவிதைகள் வித்வான்க

ளான அரசர்களாலும், அவர்களுடைய விதுஷிகளான அந்தப்புர ஸ்த்ரீகளாலும் ரஸித்து அநுபவிக்கப்படும். அந்தக் கவிதாரஸத்தால் கவிக்கு ரத்னாபரணங்களைப் பரிசு கொடுப்பர். இப்படிக் கொத்த உயர்ந்த கவிகள் விளையாட்டாகவோ, பரிஹாஸமாகவோ ஓர் சின்ன விஷயத்தைப்பற்றிக் கவிபாடினாலும் கவியின் உயர்த்தியால் அதுவும் அழகாகும். இந்தக் காவ்யம் அதற்கு ஓர் நிதர்சனமாகும். ராஜாவும், ராஜஸ்த்ரீகளும் உயர்ந்த காவ்யங்களை ரஸித்து அநுபவிப்பார்கள்; அல்பமான காவ்யங்களைப் பரிஹாஸத்துக்காக எடுத்துப் பார்ப்பார்கள். அந்தப்புரஸ்த்ரீகளைப் போல பகவானிடம் பாதிவ்ரத்யத்தை வஹிக்கும் பரமைகாந்திகள் பகவானுடைய திருமார்பைக் கௌஸ்துபரத்னமாக அலங்கரிக்க யோக்யர்கள். அவர்கள் உபதேசங்கள் ஹ்ருதயத்தில் ரத்நத்தைப்போலத் தரிக்க யோக்யமானவை. அப்பெரியோர் விளையாட்டுக்காகச் சொல்லுவது ச்ருதிபோன்ற உபதேசமாகும். 'க்ரீடார்த்தமபி யத் ப்ரூயு:' என்னும் வசனத்தை 'க்ரீடா' என்னும் பதத்தால் ஸூசிக்கிறார். (I41)

மந்யே கிந்நரமுக்யாநாம் மௌநம் ஜகதி ஸாம்ப்ரதம் ।
மசகக்வணிதம் யத்ர வீணாஸ்வநவிகல்பிதம் ॥ கசக ॥

மங்யே கிங்ஙரமுக்யாளும் மௌனம் ஜகதி ஸாம்ப்ரதம்]
மசகக்வணிதம் யத்ர வீணாஸ்வநவிகல்பிதம்]] (142)

(ப-ரை) யத்ர ஜகதி [யத்ர ஜகதி]- எந்த உலகத்தில், மசகக்வணிதம் [மசகக்வணிதம்] - கொசுக்களின் முணுமுணுப்புப் பாட்டு, வீணாஸ்வநவிகல்பிதம் [வீணாஸ்வநவிகல்பிதம்] - வீணா சப்தத்திற்கு ஸமமாய் நினைத்துக் கௌரவிக்கப்படுகிறதோ, (அங்கே) கிந்நரமுக்யாநாம் [கிந்நரமுக்யாளும்] - பேர்போன பாடகரான கின்னரர்களில் ச்ரேஷ்டர்களுக்கு, மௌநம் [மௌனம்] - வாயைத் திறவாமல் மௌனமாயிருப்பதே, ஸாம்ப்ரதம் [ஸாம்ப்ரதம்] - யுக்தமென்று, மந்யே [மந்யே] - நினைக்கிறேன். (நிச்சயிக்கிறேன்).

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கிந்நரர் கானமழகு. கந்தர்வகானம் உச்சஸ்தாயியாயிருக்கும். கிந்நரர் கானஸ்வரம் மந்தம்; முணு முணுவென்றிருக்கும். 'கிஞ்சித் க்வணத் கிந்நரம்'

என்று குமாரஸம்பவம். வாத்யங்களுள் ச்ரேஷ்டம் வீணை. கொசுக்களின் முணுமுணுப் பாட்டும் வீணையின் நாதமும் ஒன்றாக மதிக்கப்படும் அரஸிகர் தேசத்தில் கிந்நரச்ரேஷ்டர்கள் மௌனமாயிருப்பதே அழகு. நல்ல கவிதைக்கும் அசட்டுக் கவிதைக்கும் பேதமறியாத தேசத்தில் உயர்ந்த கவிகள் கவி பாடாமல் மௌனமாயிருப்பது உசிதம். 'மற்ற எந்தக் கஷ்டங்களையும் தாபங்களையும் எனக்கு நீர் வேண்டியபடி விதிக்கலாம்; அரஸிகர்களிடம் ரஸத்தை நிவேதனம் பண்ணும் துர்தசையை மட்டும் என் தலையில் எழுதாதே, எழுதாதே, எழுதாதே' என்றார் ஓர் கவி.

கடூநாமிஹ ஸார்த்தத்வாத் காமம் பவதி ஸங்க்ரஹ: ।
ததாபி வ்ருத்திர் ந ததா ரஸஜ்ஞாநுமதிக்ஷமா ॥ கசஉ ॥

கடூனமிஹ ஸார்த்தத்வாத் காமம் பவதி ஸங்க்ரஹ:]
ததாபி வ்ருத்திர் ந ததா ரஸஜ்ஞாநுமதிக்ஷமா]] (142)

(ப-ரை) இஹ [இஹ]- இங்கே, (காவ்யத்தில், உலகத்தில்), கடூநாம் [கடூனம்] - உக்ரமான சுக்கு மிளகு திப்பிலி என்னும் த்ரிகடுகத்தில், கடுமையான அக்ஷரங்களுடைய சொற்கள், கோபம் முதலிய உக்ரரஸங்கள் இவற்றின், ஸங்க்ரஹ: [ஸங்க்ரஹ:]-சேர்க்கை, காமம் பவதி [காமம் பவதி] - வேண்டிய மட்டும் நேருகிறது. ததாபி [ததாபி] - ஆயினும், வ்ருத்தி: [வ்ருத்தி:] - அவற்றைக் கடித்துத் தின்னுவது, காவ்யத்தின் நடையினிப்பு, ததா [ததா] - அவ்வளவு, அப்படி, ரஸஜ்ஞாநுமதிக்ஷமா [ரஸஜ்ஞாநுமதிக்ஷமா] - நாக்கு ஒப்புவதற்கு (பொறுப்பதற்கு) யோக்யமாக, ரஸிகர்கள் மனம் ஸந்தோஷிக்க யோக்யமாக, ந [ந] - ஆகிறதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— கவிநாக்கில் வரும் சொற்கள் இனிமையாயிருக்கவேணும். இன்சொற்கள் ரஸிகர்மனதிற்கு இனிப்பைத் தரும். த்ரிகடுகம் கடுவான ரஸம், ஆரோக்கியத்திற்கு அவச்யமே. அவையும் கலக்கவேண்டியது அவச்யமே. ஆயினும், நாக்கில் வைக்கும்போது காரம், கடுப்பு இல்லாமல் போகாது. நாக்கு அதை அத்தனையாகப் பொறுப்பது கஷ்டமே. வீரரஸம், ரௌத்ரரஸம் இவற்றில் கடுமையான அக்ஷரங்களும் சொற்களும் அவச்யமே. ஆரபடீவ்ருத்திக்கு அவை அவச்யமே.

ஆரபடீவ்ருத்திதான் அந்த ரஸத்திற்கு அனுகுணம். ஆயினும் ரஸிகர் நாக்கு அவற்றை உச்சரிக்கையில் கஷ்டப்படும். ம்ருது வான அக்ஷரங்களின் இனிப்பு வராது. 'வ்ருத்தி' என்பது தின் பதையும் சொல்லும்; காவ்யநடையையும் சொல்லும். 'ரஸஜ்ஞா' என்று நாக்குக்குப் பெயர். ஹடயோகத்தால் ஐகாக்ரியத்தையும், ஸமாதியையும் ஸாதிக்கக் கூடும். ஆயினும், அது ரஸிகருக்குப் பிடிக்காது. (142)

𑌨𑌾𑌦𑌮𑌙𑍍𑌗𑌣 (𑌂, 𑌮𑌙𑍍𑌗𑌳) 𑌤𑌾𑌳𑌾𑌨𑌾𑌂
𑌨𑌾𑌗𑌰𑍀𑌨𑌟𑌨𑍋𑌚𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿 (𑌕𑍃𑌷𑌿) 𑌕𑍍𑌷𑌮𑍇𑌷𑍁 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌷𑍁
𑌨 𑌮𑍂𑌰𑍍𑌛𑌯𑌤𑌿 𑌗𑍀𑌤𑌿𑌵𑌿𑌤𑍍 ॥ ॥ ௧௪௨ ॥

நாதமங்கண (ம், மங்கள) தாளாளும் நாகரீநடனோசிதம் ।
ஶ்ருதி (க்ருஷி) க்ஷமேஷு க்ராமேஷு ந மூர்ச்சயதி கீதிவித் ॥

(ப-ரை) 𑌨𑌾𑌗𑌰𑍀𑌨𑌟𑌨𑍋𑌚𑌿𑌤𑌂 [நாகரீநடனோசிதம்] - பட்டணத்துப் பெண்களின் நாட்டியநர்த்தனங்களுக்கு யோக்ய மான, 𑌅𑌙𑍍𑌗𑌣𑌤𑌾𑌳𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌦𑌂 [அங்கணதாளானும் நாதம்] - தாளக்கட்டான கட்டடங்களிலுள்ள நாதத்தை, (𑌮𑌙𑍍𑌗𑌳𑌤𑌾𑌳𑌾𑌨𑌾𑌂 𑌨𑌾𑌦𑌂 [மங்களதாளானும் நாதம்] - மங்களவாத்யங்களின் நாதத்தை), 𑌕𑍃𑌷𑌿𑌕𑍍𑌷𑌮𑍇𑌷𑍁 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌷𑍁 [க்ருஷிக்ஷமேஷு க்ராமேஷு] - உழுது பயிரிட்டு ஜீவிக்கும் க்ராமங்களில் அவர்கள் முன்பு, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌕𑍍𑌷𑌮𑍇𑌷𑍁 𑌗𑍍𑌰𑌾𑌮𑍇𑌷𑍁 [ச்ருதிக்ஷமேஷு க்ராமேஷு] - ச்ருதிக்கு அநுகுணமான, 𑌗𑍀𑌤𑌿𑌵𑌿𑌤𑍍 [கீதிவித்] - வித்வானாயிருப்பவன், 𑌨 𑌮𑍂𑌰𑍍𑌛𑌯𑌤𑌿 [ந மூர்ச்சயதி] - விருத்தி செய்வதில்லை, ராகமூர்ச்சையைக் காட்டுவதில்லை.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— நகர நர்த்தகிகள் நர்த்தனத்திற்கு யோக்யமான மங்களவாதநாதத்தை உழவர்கள் வஸிக்கும் க்ராமங்களில் ஸங்கீதவித்வான்கள் ப்ரகடனம் செய்ய மாட்டார். ராகமூர்ச்சைகளை நாகரிகலேசமில்லாத க்ராமஜனங்கள் அறிவரோ? க்ராம்யங்களான பாட்டுகளில் ரஸிக்கும் க்ராமீணர் போன்ற அரஸிகர் முன்னிலையில் நாகரிகர்கள் ரஸிக்கும் உத்தம காவ்யங்களைக் கவிகள் பரப்புவரோ? உண்பதும், உடுப்பதும், உறங்குவதுமாயிருப்பவர் க்ராமீணர். ப்ரஹ்மரஸம் அறியாதவர் முன்னிலையில் அத்யாத்மவிஷயங்களைப் பரப்பலாகாது. (143)

𑌵𑌿𑌧𑌿𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌵𑌿𑌹𑌗𑍇𑌨 𑌕𑍁𑌤𑌃
𑌪𑌯𑌸𑍋𑌰𑌶𑌿𑌕𑍍𑌷𑍍𑌯𑌤 𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌧𑌿𑌃 ।
𑌕𑌤𑌿 𑌵𑌾 𑌦𑌿𑌨𑌾𑌨𑌿 𑌵𑌦 𑌪𑌰𑍍𑌯𑌚𑌿𑌨𑍋𑌤𑍍
𑌕𑌲𑌶𑍀𑌸𑍁𑌤𑌃 𑌕𑌬𑌲𑌯𑌨𑍍 𑌜𑌲𑌧𑌿𑌮𑍍 ॥ ॥ ௧௪௪ ॥

விதிமந்தரேண விஹகேந குத:
பயஸோரசிக்ஷ்யத விவேகவிதி: ।
கதி வா திநாநி வத பர்யசினோத்
கலசீஸுத: கபளயந் ஜலதிம் ॥ (144)

(ப-ரை) 𑌵𑌿𑌹𑌗𑍇𑌨 [விஹகேந] - (ஹம்ஸ) பக்ஷியால், 𑌵𑌿𑌧𑌿𑌂 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 [விதிம் அந்தரேண] - ஈச்வரன் செயலைத் தவிர, 𑌪𑌯𑌸𑍋𑌃 [பயஸோ:] - பாலையும் ஜலத்தையும், 𑌵𑌿𑌵𑍇𑌕𑌵𑌿𑌧𑌿𑌃 [விவேகவிதி:]-பிரிக்கும் ஸாமர்த்தியம், 𑌕𑍁𑌤𑌃 [குத:]- எங்கேயிருந்து, 𑌅𑌶𑌿𑌕𑍍𑌷𑍍𑌯𑌤 [அசிக்ஷ்யத] - கற்றுக்கொள்ளப்பட்டது, அப்யாஸம் செய்யப்பட்டது, 𑌜𑌲𑌧𑌿𑌂 [ஜலதிம்] - ஸமுத்ரத்தை, 𑌕𑌬𑌲𑌯𑌨𑍍 [கபளயந்] - ஓர் உறிஞ்சாய் உறிஞ்சிய, 𑌕𑌲𑌶𑍀𑌸𑍁𑌤𑌃 [கலசீஸுத:] - அகஸ்த்யர், 𑌕𑌤𑌿 𑌵𑌾 𑌦𑌿𑌨𑌾𑌨𑌿 [கதி வா திநாநி] - எத்தனை நாள், 𑌪𑌰𑍍𑌯𑌚𑌿𑌨𑍋𑌤𑍍 [பர்யசிநோத்] - அப்யாஸம் செய்தார், 𑌵𑌦 [வத] - சொல்லு.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— காவ்யங்களில் உத்தமாதமங்களை, ஸதஸத்துக்களை ரஸிகரான வித்வான்கள் பகுத்தறியவல்லவர். கவிகளுக்குக் கவிதை சக்தி அமைவது இயற்கையாலேயே பாக்யத்தால் (விதியினால்) அமையவேண்டும் என்று முதல் ச்லோகத்திலேயே கூறப்பட்டது. நல்லதையும் பொல்லாததையும் பிரித்து அறியும் சக்தியும் விதியினால்தான் அமையவேணுமென்கிறார். ஹம்ஸத்திற்குப் பாலையும் ஜலத்தையும் பிரிக்கும் சக்தி எப்படி பிறவியாலேயே ஈச்வராநுக்ரஹத்தால் அமைகிறதோ, அப்படியே காவ்யங்களில் நல்லது பொல்லாததைப் பிரித்து அறியும் சக்தியும் ஈச்வரன் கொடுத்துத்தான் அமைய வேண்டும். 'சக்தி' என்பதே ஈச்வரப்ரஸாதத்தால்தான் கிடைக்க வேணும். உயர்ந்த சக்தியெல்லாம் ஈச்வரதேஜோம்சத்தால் ஸம்பவிக்கவேணும். ஸமுத்ரத்தை ஓர் ஆசமனத்தினால் உறிஞ்சின அகஸ்த்யர்சக்தி அப்யாஸத்தால் வந்ததா? பெற்ற கும்பத்தினி

டமிருந்து வந்தது ? எத்தனை நாள் அந்தக் கலையைப் பழகினர்? ஸமுத்ரத்தை உறிஞ்சினதுபோல் ரஸக்கடலையும் ஜ்ஞானக் கடலையும் காவ்யங்கள் உறிஞ்சி உட்கொண்டிருக்கவேணும். (144)

𑌏𑌕𑌯𑌾𑌪𑌿 𑌕𑌲𑌯𑌾 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑌾
𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌭𑌜𑌤𑍇 𑌗𑌿𑌰𑍀𑌶𑌤𑌾𑌮𑍍 ।
𑌭𑍂𑌯𑌸𑍀𑌰𑌪𑌿 𑌕𑌲𑌾𑌃 𑌕𑌲𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌃
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑌪𑌚𑍀𑌯𑌤𑍇 𑌶𑌨𑍈𑌃 ॥ ॥ ௧௪௫ ॥

ஏகயாபி கலயா விசுத்தயா
யோऽபி கோऽபி பஜதே கிரீசதாம் ।
பூயஸீரபி கலா: களங்கிதா:
ப்ராப்ய கஶ்சிதபசீயதே சனை: ॥ (145)

(ப-ரை) 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌯𑌾 [விசுத்தயா] - மிகவும் சுத்தமான, 𑌏𑌕𑌯𑌾 𑌕𑌲𑌯𑌾𑌪𑌿 [ஏகயா கலயாபி] - கற்கப்பட்ட ஓர் கலையாலேயே, 𑌯𑍋𑌽𑌪𑌿 𑌕𑍋𑌽𑌪𑌿 [யோऽபி கோऽபி] - ஏதோ ஒருவரும், 𑌗𑌿𑌰𑍀𑌶𑌤𑌾𑌂 [கிரீசதாம்] - சிவபதத்தை, 𑌗𑌿𑌰𑍀𑌶𑌤𑌾𑌂 [கிரி ஈசதாம்] - வாக்கில் ஈசத்தன்மையை, 𑌭𑌜𑌤𑍇 [பஜதே] - அடைகிறார். 𑌕𑌲𑌙𑍍𑌕𑌿𑌤𑌾𑌃 [கலங்கிதா:] - அசுத்தமாக, ஸம்சயம் முதலியது நீங்காமல், அரைகுறையாக, 𑌭𑍂𑌯𑌸𑍀𑌃 𑌕𑌲𑌾𑌃 [பூயஸீ: கலா:] - அனேககலைகளை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌪𑌿 [ப்ராப்யாபி] - அடைந்தும், 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 [கஶ்சித்] - ஒருவர், 𑌶𑌨𑍈𑌃 [சனை:] - மெள்ள மெள்ள, கொஞ்சம் கொஞ்சமாய், 𑌅𑌪𑌚𑍀𑌯𑌤𑍇 [அபசீயதே] - குறைகிறார். (தாழ்கிறார்.)

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— காவ்யங்களில் குணதோஷங்களை நன்றாய் அறியக்கூடியவர் ஸர்வஜ்ஞராயிருக்கவேண்டும். அவர்களுடைய பஹுமானத்தைத்தான் நல்ல கவிகள் விரும்புவார். முன் ச்லோகத்தில் குணதோஷவிவேகமுடையவர் ஹம்ஸத்திற்கு ஒப்பிடப்பட்டார். இங்கே அவர்கள் ஸர்வஜ்ஞர் என்று வழங்கப்படும் ஈச்வரனுக்கு ஒப்பிடப்படுகிறார். ஸர்வஜ்ஞராயிருப்பவர் குணங்களைத் தலையால் கொண்டாடுவர். தோஷங்களைத் தெரிந்துகொண்டு, அதைப் பஹிரங்கமாய்ப்ரகாசப்படுத்தமாட்டார். தொண்டைக்குள்ளேயிருக்கும், வெளியே விடமாட்டார். கவிகளாயிருப்பவர் ஈச்வரனைப்போல, ஸர்வஜ்ஞராயிருக்கவேண்டும். ஓர் கலையை ஸம்சயம் முதலியதில்லாமல், அத்யந்த சுத்தமாக, ஸம்பூர்ணமாகக் கற்றிருக்கவேணும். பல கலைகளை அரைகுறையாக மயர்வோடு கூடக் கற்பதைக் காட்டிலும், ஒரு கலையைக்கசடறக் கற்று அதை மூளையில் தரிப்பது உயர்த்தி. ஈச்வரன் கிரீசர், வாக்கில் ஈசர். அவர் 'ஸர்வஜ்ஞர்' என்ற திருநாமத்தால் ப்ரஸித்தர். அவர் சிரஸ்ஸில் ஓர் கலையை(பிறையை)த் தரிக்கிறார், அதில் களங்கமே கிடையாது. களங்கமற்ற ஓர் கலையைச் சிரஸில் தரிப்பவரும், ஸர்வஜ்ஞரும், கிரீசரும் (வாகீசரும்) ஆகிறார். களங்கத்தோடு கூடிய பல கலையையும் (பதினாறு வித்யாஸ்தானங்களையும்) உடைய பூர்ணசந்த்ரன் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்கிறார். ஓரோர் கலையாய்க் குறைந்து முழு இருட்டை (அப்ரகாசத்தை) அடைகிறார். சந்த்ரமௌளீச்வரர் இக்காவ்யத்தில் ரஸித்து அவர் ச்லாகிப்பர் என்று காவ்யத்தின் முடிவில் காட்டுகிறார். வித்யாஸ்தானங்கள் பதினாறு. ஓர் கலைக்கு மேற்பட்ட பதினாறு கலைகள். அசுத்தமான பதினாறு கலைகளாலும் பயனில்லை. சுத்தமான ஓர் கலையே சிறந்தது.

𑌸𑍈𑌷𑌾 𑌸𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌲𑌾
𑌮𑌹𑌨𑍀𑌯𑌵𑌰𑍍𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌗𑍁𑌣𑌾 ।
𑌭𑌾𑌵𑍁𑌕𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌰𑍂𑌢𑌾
𑌪𑍍𑌰𑌿𑌯𑌪𑌦𑍍𑌧𑌤𑌿 𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 𑌜𑌯𑌤𑌿 । ॥ ௧௪௬ ॥

ஸைஷா ஸுபாஷிதானும் மாலா
மஹநீயவர்ணவ்ருத்தகுணா ।
பாவுகஸங்க்யாரூடா
ப்ரியபத்ததி பூஷிதா ஜயதி ॥

𑌇𑌤𑌿 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁
𑌸𑍁𑌭𑌾𑌷𑌿𑌤𑌨𑍀𑌵𑍀 𑌸𑌮𑍍𑌪𑍂𑌰𑍍𑌣𑌾 ॥

(ப-ரை) 𑌮𑌹𑌨𑍀𑌯𑌵𑌰𑍍𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌗𑍁𑌣𑌾 [மஹநீயவர்ணவ்ருத்தகுணா] - (1) கௌரவிக்கத்தக்க வர்ணம், வர்த்துளமான ஆகாரம், குணங்கள் இவற்றையுடைய, கௌரவிக்கத்தக்க அக்ஷ

ரச்சேர்த்திகள், விருத்தங்கள், காவ்யகுணங்கள் இவற்றோடு கூடிய, (3) ச்லாகிக்கத்தக்க நிறமும் சீலமும் குணங்களுமுடைய, பாவுகஸங்க்யாரூடா [பாவுகஸங்க்யாரூடா] - (1) ரத்னபரீக்ஷகரால் மெச்சப்படும் 144-மணிகளடங்கிய, (2) 144-ச்லோகங்களடங்கிய, பாவுகரான ரஸிகர் ஹ்ருதயத்தில் தரிக்கப்படும், (3) ஸுசிக்ஷிதமான நர்த்தனாதி கலைகளால் ரஸிகர் கௌரவத்தைப் பெற்ற ப்ரியபத்ததிபூஷிதா [ப்ரியபத்ததிபூஷிதா] - (1) மனதைக் கவரும்படியான ரீதியில் தொடுக்கப்பட்ட, (2) அழகான பன்னிரண்டு பத்ததிகளாய்ப் பிரிக்கப்பட்ட, (3) தன் நாயகன் மட்டும் ஸஞ்சரிக்கும் அந்தப்புரத்தில் வஸிப்பவளுமான, ஶைஷா [ஶைஷா] - இந்த, ஸுபாஷிதாநாம் மாலா [ஸுபாஷிதானும் மாலா] - (1) புகழ் பெற்ற ரத்னங்களின் மாலை, (2) செஞ்சொற்களான பாமாலை, (3) பெரியோர்களால் சிரஸால் ச்லாகிக்கப்படும் (1) இந்த மாலை, (2) இந்தப் பாமாலை, (3) இந்த உத்தமஸ்த்ரீ, ஜயதி [ஜயதி] - மேன்மை பெறுகிறது.

அவதாரிகைகளுடன் தாத்பர்யங்கள்— இப்பாமாலை ஓர் அழகிய ரத்னமாலையுமாகும். பரீக்ஷகரால் பாவுகரால் பரீக்ஷித்துப் புகழப்பட்ட 144-ரத்னங்கள் அடங்கியமாலை. பாவுகரான ரஸிகரால் கொஞ்சாரப் புகழப்பட்டு, ஹ்ருதயத்தில் தரிக்கப்படும் பாமாலை. "ஸுபாஷிதபாண்டாகாரம்" என்று ஸுபாஷித பண்டசாலையைப் பேசுவர். ஸுபாஷிதங்கள் நெஞ்சில் அகலாமலிருக்கவேண்டும். ஹ்ருதயகுஹையில் நிதிபோல் நிஹிதமாயிருக்கவேண்டும். ஹ்ருதயத்தில் ஸர்வகாலமும் தரிக்கப்பட்டுப் புரண்டு சுழன்றுகொண்டே யிருக்கவேணும். திரும்பவும் திரும்பவும் ஆவ்ருத்தி செய்து ஜபிக்கும்படியான ஜபமாலையுமாக வேணும். "பூமியிலுள்ள ரஸிகரான பாவுகர்களே மனம் லயிக்குமளவும், மோக்ஷலயம் ஸித்திக்குமளவும், (ஆலயம்) இந்த பாகவத ரஸப் பழத்தை, பழரஸத்தைப் பானம் செய்யுங்கள்" என்றார் சுகர் ஸ்ரீபாகவதாரம்பத்தில். அதை நினைவூட்ட இங்கே முடிவில் 'பாவுக' என்கிறார். 'ஸங்க்யை' என்பதற்கு ஜ்ஞானம், எண்ணிக்கை, பஹுமானம் என்று பொருள்கள். 'பாவுக' என்பது

144-ஐச் சொல்லுமென்றும், 'ப்ரிய' என்பது 12-ஐச் சொல்லும் என்றும் முன்பே காட்டப்பட்டது. விஷ்ணு உள்பட ஆதித்தியர்கள் பன்னிரண்டு, ஆதித்தியரை ஆதித்தியரால் குணனம் செய்யவேணும், (பெருக்கவேணும்). பெருக்கப்படுவதும் ஆதித்யர், பெருகுவதும் ஆதித்தியர். 'க்ருத்ஸனலோகத்தையும் ஓர் ஆதித்தியர் ப்ரகாசப்படுத்துவதுபோல' என்றார் பகவான் ஜ்ஞானத்தின் வ்யாப்தியைக் காட்ட. இந்த ச்லோகங்கள் ஜ்ஞானஸூர்யர்களாய் உலகநடவடிக்கைகளையும், அத்யாத்மவித்யைகளையும் ப்ரகாசப்படுத்துகின்றன. (146)

பன்னிரண்டாவது பரீக்ஷிதபத்ததி முற்றிற்று.

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ॥

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ॥

ஸுபாஷித நீவீ முற்றிற்று.

நரகேஸரீய வ்யாக்யானத்திலிருந்தும் சேர்த்துக்கொள்ளும் பாடாந்தரங்களும், அர்த்தங்களும்.

ச்லோகம். 11. 'ஸுவராடிவாடிஸாவெகக்ஷீ' என்றும் பாடம். 'புடம்' என்பது தொன்னைபோன்ற இலை.

சு. 12. 'வாமவலிஸூாரணஉாஷிதாயொகாஃ' மஹான்களைத் தூஷிக்கவெண்ணி நாக்கு என்ற கத்தி (அசங்கும்போதே, மின்னும்போதே) புத்தியெல்லாம் இருண்டுபோகும், பார்க்கும் கண் பறிக்கப்பட்டுப்போகும். நாக்கு அசங்கத்தொடங்குவதே போதும். தூஷணங்களைப் பேசும் வரையில்கூடத் தாமதிக்காது.

சு. 15. 'ஜஹிக்திவிஷிதாஸம்வெழு' 'பித்தி' என்பது பேதம், விசேஷம். 'அபித்தி' என்பது நிர்விசேஷம். யாதொரு பாகமுமில்லாத, ரூபகுணாதிவிசேஷமில்லாத பொருள். அப்படி நிர்விசேஷமான பொருளை ஒரு ப்ரமாணமும் உல்லேகம் பண்ணமுடியாது. அது சுவரில்லாத சித்ரம்போல்தானாகும்.

சு. 19. 'ஸதுவெ' என்றும் பாடம். ஆகாசத்தில், ஸந்மார்க்கத்தில்.

சு. 20. தார்க்கிகர்கள் யுக்திவாதங்களில் தூரந்தரரே, தூர்யரே. ஆயினும், அவர்கள் ஆகமபலத்தைப் பற்றாமல் கேவல யுக்திவாதம் செய்வதால், அஸத்கார்யவாதத்தைப் பற்றுகிறார்கள். ஓர் த்ரவ்யம் உத்பத்தியாகும்போது க்ஷணகாலம் நிர்குணமாயிருக்கும் என்று சொல்லி, அந்தக் காலத்தில் குணசாலித்வத்தை நிஷேதிக்கிறார்கள். கார்யம் முன்பு இருக்கவில்லை என்று அஸத்கார்யவாதம் செய்கிறார்கள். இப்படி அபநீதி பேசுவதற்குக் காரணம் ஆகமம் என்னும் வேதசாஸ்த்ரத்தை அறியாமையும், அந்தப் பிரமாணத்தை ஆதரியாமையுமே. 'ஸதேவ ஸோம்யேதம் அக்ரே ஆஸீத்' முதலிய ச்ருதிகளைக் காட்டி அவர்களுடைய அபந்யாயங்களை விலக்குவது யுக்தம்.

சு. 21. 'நாமஜெவிஹெஷிநா' அகமல்லங்கள் ச்ரேஷ்ட வ்ருக்ஷங்கள், ச்ரேஷ்டபர்வதங்கள். அகம்— வ்ருக்ஷம், பர்வதம். இவற்றையெல்லாம் பிளந்து ஏழு ஸாலங்களின் பேரிலெய்த ராம

பாணம். 'அகமல்லவிபேதினு' என்பதற்கு 'ராமனேடு' என்று பொருள் கிடைக்கிறது. 'நா' என்பது தனிப்பதம். 'நரன்' என்று பொருள்.

சு. 23. 'ஜஹிடீகெத' என்றோர் பாடம். 'ஜஹியாஜீத' என்று பாடமிருக்கலாம்.

சு, 25. 'வாஜிவெதெகஸிரதாஃ' என்றும், 'வாஜிவெத்கஸிரதாஃ' என்றும் பாடங்கள்.

சு. 26. 'யாஜுவித்தாநாழு' என்றும் பாடம்,

சு. 29. 'உதுயாதாஹதாஃ' என்றும் பாடம்.

சு. 32. தன் ஸ்வபாவத்தால். தன் ஜாதிதர்மமர்யாதையைத் தூஷித்துக்கொண்டு, பிறர் தர்மத்தைத் தன் தர்மமாக ஆரோபித்துக்கொண்டிருப்பவரை ஜாதிப் பெரிய தனக்காரர் உடனே தடுத்துத் திருத்தவேணும். அப்படித் திருத்தாவிடில் அப்பெரிய தனக்காரரை ஜாதியார் ஸபை கூட்டிக் கண்டிப்பார்.

சு. 38. "ஸநாமபூாவாஜவாநவி" என்றோர் பாடம். ப்ராம்மணச்ரேஷ்டர் ஸமீபத்திலிருந்தாலும், நல்ல ஆசாரம் நல்ல வேஷமிருந்தாலும், நல்ல ஜாதிப்பிறப்பில்லாதவனாயிருந்தால் ஆசிரியனாக ஆதரிக்கத்தக்கவரல்லர்; வித்யாஸம்பந்தத்திற்கு ஒப்பக்கூடியவரல்லர்; யாகத்தில் ருத்விக்காக வரிக்கும் தர்மஸம்பந்தத்திற்கு யோக்யரல்லர். விவாஹஸம்பந்தத்திற்கும் யோக்யரல்லர். வேதபாரங்கதரான ப்ராம்மணரைத் தூரத்திலிருந்தே பரீக்ஷிக்க வேண்டும் என்பர். "அபிஜனவித்யாஸமுதேதம்" என்று ஆபஸ்தம்பஸூத்ரம் அபிஜனத்தை முதலாக எடுத்தது. 'வி' என்று பரமாத்மாவுக்குப் பெயர். 'பரமாத்மவிஷயமான பக்திஜ்ஞானத்தால் க்ஷேத்ரஜ்ஞனுக்குப் பரமமான விசுத்தி ஏற்படும்' என்று யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி. 'விசுத்திரஹித:', பரமாத்மாவிடம் பக்தியால் விசுத்திபடையாதவரை ஆசிரியனாகக் கொள்ளக்கூடாது.

சு. 42. 'வகவூாஷாஜஉஹூகி' என்றோர் பாடம். இப்படிக் கபடமாயிருப்பவரை பகர் என்று சொல்லுவது உசிதம். 'பகர்' என்று அழைக்க யோக்யர்.

சு. 43. இங்கே காக்கை என்கிற பறக்கும் பக்ஷியையும் கொள்ள வேணும். காக்கைக்கு வெள்ளைப் பொட்டுகளோ வெள்ளைநிறமோ

வந்தால் அந்த வெண் காக்கைகள் துச்சகுனம் என்பர். 'விபரீத நிமித்தம்;' என்பது துச்சகுனம். கருங்காகம் வலமாவது நல்ல சகுனம். வெண்மை நிறம் வந்தால் அதுவே விபரீதசகுனமாகும். "நாஹம்ஸ:" என்ற பாடம் உண்டு. அது அழகு. 'அஹம்ஸ:' என்பதற்கு 'ஹம்ஸமல்லாத' என்று பொருள். 'நாஹம்ஸ:' என்று ஒரே பதமாகக்கொண்டால் அஹம்ஸமல்லாத ஹம்ஸமல்லாததல்லாத என்று பொருள் கிடைக்கும். அதாவது ஹம்ஸமே என்று பொருள் தேரும். ஹம்ஸம்தான் என்று ஸாஜாத்யம் நிரஸிக்கப்படுகிறது என்று பொருள் கிடைக்கிறது. ஸந்யாஸிகள் விஷயத்திலும் வித்வான்களான கவிகள் விஷயத்திலும் இப்படியே பொருள். 'ஸோஹம் ஸோஹம்' என்று ஹம்ஸரான ஸந்யாஸிகள் ஜபித்துக்கொண்டேயிருப்பர். அப்படி உருப்போடுவதில் 'ஹம்ஸோ ஹம்ஸோ' என்று த்வனி வந்துகொண்டேயிருக்கும். அதையிட்டும் அவர்களுக்கு ஹம்ஸப்பெயர் என்பர், ஸோஹம் என்பதற்குப் பர்யவஸானத்தில் 'நாஹம்ஸ:' என்று பொருள்தான் தேருமென்று ஸாராவளீ நிரூபித்தது. 'அவனல்லால் நானென்பதே இருக்கமுடியாது' என்று அத்யந்தம் அவனதீனமாகவே யிருப்பதும் அவனன்றியில் ஸத்தை யென்பதற்கே யோக்யமல்லாதிருப்பதும் அதன் பொருள். 'ஸோஹம்' என்னும் ஆத்மாநுஸந்தானத்திலும் 'நின்னலாலிலேன் காண் என்னை நீ தந்தாக்கினையே' என்பதுதான் தாத்பர்யம். ஹம்ஸர் அநுஸந்திக்கும் 'ஸோஹம்' என்பதிலும் 'நாஹம்ஸ:' என்றுதான் நிஷ்க்ருஷ்டப்பொருள் என்பதையும் இங்கே அழகாக ஸூசிக்கிறார். ப்ரஹ்மாதீனத்வம் த்ருடப்படுமே யொழிய அபேதம் ஸித்திக்காது.

ஸூ. 46. 'ஊர்ஜஸ்வலோத்பயம் தண்ட்யம்' கொடியவரையும் ப்ரமாணபலத்தால் தோஷத்தை முதலித்துத்தான் தண்டிக்க வேண்டும்.

ஸூ. 47. நாய்விஷயத்திலும் இப்பதங்கள் ஒட்டும். அதை விவரிப்பது அநுசிதம்.

ஸூ. 48. 'ஆலோகாவதி' லோகங்களுள்ளவரையிலும், மஹாப்ரளயம் வரையிலும். 'பூதாதி' ஈச்வரனுடைய பூதகணங்கள், எந்த ஈச்வரனுடைய கடாக்ஷத்தால் (த்ருஷ்டியால்) நற்கதியையனுபவிக்கிறார்களோ. அப்படிக்கொத்த பெரியோர் கடாக்ஷத்தால் நம் வம்சத்தில் விடரான (புஜங்கரான) தீயார் ஸஞ்சரிக்காத, பிறக்காத வழியேற்படும்; பெரியோர்கள் கடாக்ஷமிருந்தால், நம் வம்சத்தில் விடர் பிறக்கமாட்டார், 'ப்ரஹ்மவித்தல்லாதவர் இவர் குலத்தில் தோன்றமாட்டார்' என்று உபநிஷத்துப்பேசுவதுபோல. 'வம்சே அபுஜங்கப்ரமம்'. 'ப்ரமம்' என்பது (ஸஞ்சரித்தல்), புஜங்கரென்னும் விடர் பிறவாமை. புஜங்கப்ரமத்தின் அபாவம் (இல்லாமை). துர்வ்ருத்தர் பிறவார். எந்தக் கண்ணைக் கொண்டு வெளிச்சமுள்ளவரையில் உள்ளது உள்ளபடி பார்க்கிறார்களோ, அந்தக் கண்ணை தவளைப் பசையால் மூங்கிலில் பாம்பென்று ப்ரமிக்கிறது போகிகளென்னும் பாம்புகளில் சில (கண்கொத்திகள்) சடக்கென்று நம் கண்ணைக் கொத்துவதில் நிபுணமாயிருக்கும். ஓர் க்ஷணத்தில் அந்தப் பாம்பின் கண்ணை இடியும் மின்னலும் நாசம் செய்துவிடும். 'விஷமிதா த்ருஷ்டி:' என்றும் பாடம். அந்தப் பாடத்தில் இப்பொருள் கிடைக்கும். மஹாபுருஷர் கடாக்ஷத்தால் நற்கதி கிடைப்பதுபோல, அவர்களிடம் அபசாரப்பட்டால் அவர்களுடைய அந்தக் கண்ணே கொளுத்திவிடும். பிறர் ஹிம்ஸை செய்து துர்வ்ருத்தராயிருப்பவருக்கு ஆபத்துக்கள் கட்டாயம் நேரும்.

ஸூ. 49. 'கல்யாணகோத்ராவலீ' என்றோர் பாடம். கோத்ரம் என்று மலைக்கும் வம்சத்திற்கும் பெயர். 'தங்க மலையாயினும், நல்ல வம்சமாயினும்' என்று பொருள்கள்.

ஸூ. 50. 'ஜீவநாயிஷ்டி:' என்றும் பாடம்.

ஸூ. 52. 'ஹரிசந்தனத்ருமா:' சந்தனத்ரு என்பது சந்தன வ்ருக்ஷத்தின் பெயர். சந்தனத்ருவைப்போல மா மேன்மையையுடைய புருஷர் சந்தனத்ருமர். 'மா' என்பதற்கு "லக்ஷ்மீ" 'மேன்மை' என்று பொருள்.

ஸூ. 56. 'நஸூஹ்ருத்தாந' என்று ஒரே பதம். அஸூஹ்ருத்தாக, சத்ருவாகவென்று பொருள். சத்ருவாக நினைக்க வேண்டும். 'ஸுஸூஹ்ருத்தாந' என்றும் பாடம்.

ஸூ. 57 நாய்கள் ஒன்றுக்கொன்று சண்டைபோட்டாலும், பன்றிகளுடைய உபத்ரவம் வருகையில் நாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து பன்றியை தீர்க்கும். ஸூகரங்கள் பன்றிகள்; ஸூகரத்

தின் தன்மை, ஸௌகர்யம்; பன்றித்தன்மையுடையது, பன்றி. பாப மண்டலிமண்டலா: என்றும் பாடம். ஒன்றுக்கொன்று சண்டை போட்டுக்கொள்ளும் துஷ்டநாய்க்கூட்டங்கள் என்று பொருள்.

சு. 59. 'ஸுஜநதா' என்பதற்கு ஸௌஜந்யம் என்றும் பொருள் கொள்ளலாம்.

சு. 61. 'வம்' என்று இந்த்ரியத்திற்கும் பெயர். இந்த்ரியங்களுக்குப் புஷ்பம்போல் இன்பமாயிருப்பது வபுஷ்பத்வம் எந்த வித்வான்கள் கம் கண் காது மனம் இவற்றிற்கு ஸ்வயம் இனிப்பாகவே யிருப்பரோ, அவர்களுக்கு வேறு வித்வான்களிருக்கையிலும் மதிப்புக் குறையாது.

சு. 62. 'ஸாயுஶப்தவிஶ:' என்ற பாடமுண்டு. ஸாது சப்தங்களை அறிந்த சாப்திகர்.

சு. 65. "ஸூக்திமௌக்திகஸூக்திகாம்" என்றோர் பாடம்.

சு. 66. 'ஸுதீவபுஷ:' என்றும் பாடம். 'ஸ்திராஶ்ரய:' என்றும் பாடம். ஸ்திரா—என்று பூமிக்குப் பெயர். பூமிக்கு ஆச்ரயமாயிருக்கும் அனந்தன்.

சு. 67. 'ஸஹோஜித:' என்றும் பாடம்-

சு. 71. உபாத்யாய: என்று திருத்தவேண்டும்,

சு. 72. "ஸ்ப்ருஹாஸுஹ்ருவ்ருதிவ்யாக்ருத ஶரஸம்ப்ருதிநோதிதா நாம்" என்றும் பாடம். உதந்யை என்று தாஹத்திற்குப் பெயர். சாந்திரஸருசியால் த்ரவ்யதாஹமேயில்லாதவர். ஆசையை அடியோடு துறந்தவர்களுடைய.

சு. 80. 'ஜநமோதாஸ்ய' என்றும் பாடம்.

சு. 81. 'கேநவிச' என்பதற்குப் பதிலாக 'கேநசித்' என்றோர் பாடம். 'திதிக்ஷாகவசேந கச:' என்றும் ஓர் பாடம்.

சு. 84 'விஹாசேஷு' என்ற பாடத்தில் மீனாய், வனமாய், மனுஷ்யராய்ப் பிறக்கும் விபவாவதாரங்களிலும் என்று பொருள். அந்தந்த ஜாதியின் தேஹதோஷம் முதலியது ஒன்றும் அணுகுவதில்லை.

சு. 87. 'ப்ரூமியதே' என்ற பாடத்தில் அஹங்காரம் என்னும் தோஷம் இல்லாமல் போம் என்று பொருள். அஹங்காரம்

என்னும் மூன்றாவது தத்வத்திற்குக் காரணம் மஹத். மஹத்தென்றும் காரணத்தில் சேர்ந்து அஹங்காரதத்வம் அதில் லயம் அடைகிறது.

சு. 95. 'ரத்யாபதோயம்' என்றும் ஓர் பாடம். தெருஜலமும் கங்கையோடு சேர்ந்து பரிசுத்தமாகிறது.

சு, 96. 'யதுத:' என்பதற்குப் பதிலாக 'த்ருத:' என்றும் பாடம். அது அழகே.

ஸதாச்ரிதபத்ததி 94-வது சுலோகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

(1) இங்கே குருவென்பது அஸுரகுருவான சுக்ரர், ஸுர குருவான ப்ருஹஸ்பதி இவர்களைச் சொல்லலாம். சுக்ரருக்கு த்ருஷ்டி ஒன்றே; ப்ருஹஸ்பதிக்கு இரண்டு. "கவிகளுக்குள் (ஸூக்ஷ்மதர்சிகளுக்குள்) நான் உசனா, சுக்ரர் என்னும் கவி" என்றார் கீதையில். 'வருவதை அறியும் ஸூக்ஷ்மதர்சனத்தில் ப்ருஹஸ்பதி தவறலாம். பார்க்கவர் ஒருகாலும் தவரமாட்டார்' என்பர். முக்கியமாக ஓர் கண் என்பது அவருக்குத்தான் ஒட்டும். அவர் ராஜ்யதந்த்ரஸூக்ஷ்மங்களைப் பார்ப்பதில் உயர்ந்த குரு. அடுத்தபடி இரண்டு கண்களையுடைய குரு. குருவென்று ப்ருஹஸ்பதிக்குத் திருநாமம். அஸுரகுரு இன்னம் உயர்ந்தவர். இவ்விருவர்களைக் குருவாக ஆச்ரயித்த அரசருக்குக் கிடைக்கும் ராஜ்யநீதி ஸூக்ஷ்மம் முக்கண்ணராலும், எண்கண்ணராலும், ஆயிரக்கண்ணரான இந்த்ரனாலும் பார்த்து உபதேசிக்க முடியாது. ராஜாவுக்கு எழுதி யனுப்பிய இக்காவ்யத்தில் இவ்வர்த்தம் ஓர் பொருளாகலாம். இதில் ஸங்க்யை எல்லோர்க்கும் முக்யம்.

(2) 'க்வாபி' (எக்காலத்திலும்) என்றும் பாடம். 'ஶூந்யே' என்று பாடமுள்ளதாக ஸூர்யோதயத்தில் இந்த ச்லோகவ்யாக்யாதா உரைத்தார். பின் பாதியில் சொல்லப்பட்ட மூவராலும் முன்பாதியில் கிடைக்கும் பேறு அடையமுடியாது. இப்பொருளை முன்பே பதவுரையில் முடிவில் காட்டினோம். குருவின் கடாக்ஷத்தாலும், ஆதிகுருவான பகவானுடைய கடாக்ஷத்தாலும் கிடைக்கும் பேறு அம் மூவராலும் கிடையாது, அம்மூவருக்கும் கிடைக்காது என்று கருத்து.

(3) 'க்ருபாத்ருஷ்டியால்' என்று ஸூர்யோதயவ்யாக்யாதா உரைத்த பொருள். 'தயாரூபதேசிகத்ருஷ்டித்ருடதம்ஸிதஸ்ய' (தயாரூபமான ஆசார்யகடாக்ஷத்தால் த்ருடமாகக் கவசிதனை) என்று ஸூர்யோதயத்தில் இந்த ச்லோகத்திற்குச் சற்று முன்பு கூறப்பட்டது. தயாசதகத்தில் 'த்வயா ஜுஷ்டஸ்துஷ்டிம்' என்ற ச்லோகத்தில் ப்ரஹ்மாவும் பார்வதீவல்லபரும், இந்த்ரனும் தங்கள் தங்கள் பதங்களை பகவத்தயையால் ஆண்டு ஸுகிக்கிறார்கள் என்று ஸாதிக்கப்பட்டது. ஸூர்யோதயம் 10-வது அங்கத்தில் பகவத்ஸங்கல்பத்தை நோக்கி, 'த்வத்த்ருஷ்ட்யா ஸக்ருதீக்ஷிதா: திவிஷத: ஸ்வம் ஸ்வம் பதம் புஞ்ஜதே' என்னும் ச்லோகத்தில் (உன் த்ருஷ்டியால் ஒருதரம் கடாக்ஷிக்கப்படுவதால் தேவர்கள் அவரவர் ஸ்தானத்தை அநுபவிக்கிறார்கள். அரசர்களுக்கு நீ ஆசைக்கு மேல் போகங்களைப் பெருக்குகிறாய். ஆசையை அறுத்து வைராக்யஸம்பத்தையும் மோக்ஷபர்வங்களையும் அளிக்கிறாய்) என்று ஸாதிக்கப்பட்டது. ஸ்ரீஸ்துதியில் 'உன் கடாக்ஷலேசத்தால் ஸரஸ்வதி, பார்வதீ, இந்த்ராணியாகிய மூவரும் பெருமையும் ஸௌபாக்யமும் பெறுகிறார்கள்' என்று ஸாதிக்கப்பட்டது. 'அமீ த்வித்ரா யத்ர' என்றுமிடத்தில் ஸ்ரீபட்டரும் ஸாதித்தார். ஆதிகுரு விஷ்ணுவின் ஓர் கடாக்ஷம் ஆசார்யனிடம் சேர்ப்பித்து அவர் கடாக்ஷத்தால் பகவத்கடாக்ஷம் பெற்று அதனால் மோக்ஷம். முன்பும் பின்பும் பகவத்கடாக்ஷங்கள்; மொத்தம் இரண்டு. நடுவில் ஆசார்யகடாக்ஷம் ஒன்று. முன் பகவத் கடாக்ஷத்தால் ஆசார்யகடாக்ஷம் ஸாத்யம். ஆசார்யகடாக்ஷத்தால் மோக்ஷபலத்தை யளிக்கும் முதல் குருவின் இரண்டாவது கடாக்ஷம் ப்ரயோஜ்யம். மோக்ஷத்தை நேராக அளிப்பது ஆதிகுரு பகவத்கடாக்ஷம். ஆசார்யகடாக்ஷம் ஒன்று. முதலாசிரியபகவத் கடாக்ஷங்கள் இருதரம். கடாக்ஷவிஷயங்களில் இது ப்ரமாணரீதி. பகவானே குருவாகிறார், குருபூமிகையைத் தரிக்கிறார், குருவின் ஹ்ருத்பத்மத்திலும் நாக்கு நுனியிலும் ஸிம்மாஸனமாகவீற்றிருந்து உபதேசாதிகளைச் செய்கிறார். ஆசார்யதேவனை உபாஸித்தால், அதிகப்ரீதியடைந்த பகவான் சரீரியாக உள்ளிருந்து பலமளிக்கிறார். பலம் அவர்தான் ஸாக்ஷாத்தாகக் கொடுக்கவேணும். 'பலமத:' என்பதற்கு அபவாதம் கிடையாது. ஆசார்யன் கடாக்ஷத்தைத் தனக்கு ஆதேசமாகக்கொண்டு அவர் முக்தியை அளிக்

கிறார். 'தேசிகாதேசகாங்க்ஷீ'. பகவானுடைய தயாகடாக்ஷம் ஆசார்யகடாக்ஷத்தை அநுஸரிக்கலாம். 'தேசிகை:நியமாத்' என்றபடி மோக்ஷப்பேற்றை முகுந்தன்தான் நேரில் கொடுக்கவேண்டும். 'தேவனைப்போல ஆசார்யனை உபாஸிக்கவேணும்' என்ற ச்ருதியை அனுஸரித்து 'அஜ்ஞானத்வாந்தரோதாத்' என்ற ச்லோகத்தில் இருவர் செய்யும் ஸமமான பேறுகள் காட்டப்பட்டன. திவ்யத்ருஷ்டிப்ரதானம் முதலியது ஸமம். 'தேசிகப்ரேக்ஷிதனை உம்மை (வரதனை) சரணமடைந்து உம் திருவடியில் என்பாரத்தை ஸமர்ப்பித்து அபயமடைந்தேன்'. இங்கே கடாக்ஷத்தால் பலம் பெறுவதைப் பற்றி ப்ரஸ்தாவம். கடைசியில் கொடுப்பது வரதன். மற்ற ப்ரபாவத்தைப்பற்றி யன்று. என்ன ப்ரபாவமிருந்தாலும் அது பகவததீனம். கடாக்ஷத்தால் பேற்றைப் பேசுவதில் பிரமன், சிவன், இந்த்ரன் இம்மூவரையும் பேசுவது ஸ்வாமிரீதி. "எருத்துக்கொடியுடையானும் பிரமனும் இந்திரனும் மற்றுமொருத்தரும் இப் பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாருமில்லை" என்றபடியே இந்த ச்லோகம். "ந கஸ்யசித், ந கர்ஹிசித், ந லப்யதே" என்ற நிஷேதம் இம்மூவரையும் பற்றியதென்பது ஸ்பஷ்டம். மருந்தறிவார் இருவர்; ஆசிரியரும் பிரமகுருவான பகவானும். அவ்விருவரையும் முதலடியில் பேசி, அவ்விருவரால் பேறு கிடைப்பதைப் பேசினார். 'வானவர் தம்மையாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும்' என்றவிடத்தில் இம்மூவரும் அவன் திருவடியைச் சிந்தித்தேத்தித் திரிவது காட்டப்பட்டது. அவர்கள்பேறே அவன் கடாக்ஷாதீனமாகையால் அவர்களுக்கு எத்தனை கண்களிருந்தாலும், அத்தனை கண்களின் கடாக்ஷங்களாலாவதென்? விஷ்ணுமூர்த்திக்குக் கண்கள் இரண்டு. 'ஏவம் அக்ஷிணீ' என்ற இரண்டு எண்ணிக்கையைக்கொண்டு அதிகக் கண்ணருக்கு விலக்குதல். இரண்டை விட்டால் காயத்ரியே அந்யபரமாகும் அபாயம் வரக்கூடும். புத்திவிகாஸப்ரார்த்தனையை இரு கண்ணரான தாமரைக்கண்ணனை ஸாவித்ரபுருஷனிடம் செய்கிறோம். புருஷஸூக்தபுருஷனுக்கு ஆயிரம் கண்கள் என்பது ஆயிரம் என்ற எண்ணிக்கையோடு நிற்பதன்று. எண்ணற்றது என்பதற்கு உபலக்ஷணம். 'முடிகளாயிரத்தாய்........கண்களாயிரத்தாய்' என்றவிடத்திலும் அப்படியே. முடிகளும் அனந்தம். கண்களும் அனந்தம். 'அநந்தபாஹூதரவக்த்ரநேத்ரம்'. முடி

கள் ஆயிரம் என்றால், கண்கள் இரண்டாயிரம் இருக்கும். இரண்டும் ஆயிரக்கணக்காயிராது. 'முடிகளாயிரத்தாய்... என்றபடி சதசாகமாகப் பணைத்து' என்று ஸ்ரீ மாமுனி ஸ்ரீஸூக்தியைக் கவனிக்க. ஆயிரம் நூறாகச் சுருங்கவில்லை. ஆயிரமும் அநந்தம்; நூறும் அனந்தம். எங்கும் கண், கால் முதலியன இருந்தால் செய்யும் கார்யத்தைஎல்லாம் செய்ய ஸமர்த்தரான மஹாபுருஷர் என்றார் ஸ்ரீ ஸுதர்சன ஸூரி ஸுபாலபாஷ்யத்தில். அநந்தங்களுக்குள் ஏற்றத் தாழ்ச்சியுண்டு. ஆயிரம் என்பது ஏறாது, சுருங்காது. 'ஸஹஸ்ரசீர்ஷம் தேவம் விச்வாக்ஷம்'. பின்பாதியில் மூன்று எட்டு என்பவிரண்டும் முக்கியம். மூன்று மூன்றே, எட்டு எட்டே. ஸஹஸ்ரம் என்பது இந்த்ரன் விஷயத்தில் முக்கியம். ஆயிரம் ஆயிரமே. ஆயிரம் என்னுமிடத்தில் முக்கியத்தை விட்டு உபலக்ஷணத்தைக் கொள்ளுவது தோஷமாகும். . இது காவ்யம். நிர்தேசிக்கப்படும் மூன்று எண்களிலும் ஒரே ரீதியாக முக்கியத்தைக் கொள்ளவேண்டும். அக்ர்யப்ராயந்யாயத்தையும் கவனிக்க. காவ்யதோஷம் இல்லாமல் பொருள் கூறவேண்டும். முன்பாதியில் இரண்டு கண்களையுடைய தாமரைக்கண்ணனை எடுத்தாய்விட்டது. 'பேறு' விஷயத்தில் அவரால் பேறில்லை என்பது ஒவ்வாது. ஆசார்யரால் பேறு கிடைப்பதும் ஆசார்யன் ப்ரபாவமும் அவரதீனம். உபஜீவ்யத்தைத் தள்ளுவரோ? தள்ளினால் சாஸ்த்ரமெல்லாம் குலையும். தம் பக்தரிலும் தம்மடியார் பக்தரிடம் ப்ரீதியதிகம். அவருடைய அதிகப்ரீதியாலே ஒருகால் பலமதிகமாகக் கிடைத்தாலும், அவரால்தான் கிடைக்கும். எந்தப் பலமும் அவர்தான் கொடுக்கவேண்டும். 'இதம் வரதம்'. எவருடைய எவ்வுத்கர்ஷமும் அவர் அதீனம். ஆசார்யமஹிமையும் அவர்தேஜோம்சஸம்பவம்தான். அவர் திருவுள்ளத்தால்தான் ஸித்திக்கும். ப்ரஹ்மசிவர்களோடு இந்த்ரனையும் எடுப்பது ஆதிகவி, ஆழ்வார்கள், இந்தக் காவ்யத்தின் கவியாகிய ஸ்ரீதேசிகன் முதலியவர்களுடைய ரீதி. "இந்த்ரோ மஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா" என்ற ராமாயணச்லோகத்தைக் கவனிக்க. அங்கும் இங்குபோல் இந்த்ரனுடைய முடிவு. 'எருத்துக்கொடியுடையானும்' என்றவிடத்தில் இந்த ச்லோகத்திலுள்ள க்ரமமேயுளது. காவ்யத்தின் க்ரமத்திற்குக் கண்களின் அதிக எண்ணிக்கை மூலம்; அது ஒன்றே போதும். ஸூர்யோதய வ்யாக்யாதாக்களும், டீகாவ்யாக்யாதாக்களும், இந்த்ர

னையே எடுத்தார்கள். 'ஸலிலேன ஸஹஸ்ராக்ஷம் வஸவோ வாஸவம் யதா' என்று பட்டாபிஷேகத்திலும், 'அதிதிர் வஜ்ரபாணிநா' என்று அவதாரகாலத்தில் கௌஸல்யை பெற்ற வாக்யவர்ணனத்திலும், ஸஹஸ்ராக்ஷனை இந்த்ரன் ராமனுக்கு உவமையாகப் பணிக்கப்பட்டான். ஸாத்விகஸம்பத்து, தைவஸம்பத்து இருவர் கடாக்ஷத்தால் கிடைப்பது. மற்றவர் கடாக்ஷத்தால் வேறுஸம்பத்து கிடைக்குமென்று ப்ரமாணம். 'ஸஹஸ்ரேண' என்பதால், இந்த்ரனைக் கொள்ளக்கூடாதென்று ஓர் ஸ்வாமி தீபிகையில் எழுதியதால் இங்கே கொஞ்சம் விஸ்தரிக்கிறோம். அதிகவிஸ்தாரத்திற்கு அவகாசமில்லை. வேண்டியதுமில்லை. ஆசார்யன் திவ்யத்ருஷ்டியளிப்பதையும், அவர் கடாக்ஷத்தின் ப்ரபாவத்தையும் முன்பே தாத்பர்யத்தில் வற்புறுத்திப் பேசியுள்ளோம்.

(4) 'ஓர் கண்' என்பது 'ஆசார்யர்கள் கொடுக்கும் ஜ்ஞானக்கண், திவ்யத்ருஷ்டி;' இரண்டால் என்பது 'பகவானுடைய இரண்டு கண்களால்' என்று நரகேஸரீயம். பரமகுருவான அவரையும் குரு சப்தம் பேசும். 8-ம் ச்லோகத்தில் தம் கடாக்ஷத்தால் ஸத்த்வப்ரவர்த்தகரான 'மஹாபுருஷன்' பேசப்பட்டான். இங்கே அது புத்திஸ்தமாயிருக்கிறது. பகவானையும், பகவதாச்ரிதரையும் அபேதமாகத் துல்யமாகக் க்ரஹிப்பது முன் ச்லோகத்தில் ஸூசிக்கப்பட்டது. குருவுக்கும் பகவானுக்கும் பேதத்தில் எங்கள் பாஷ்யகாரருக்கு ருசியில்லை என்றார் ஜயதீர்த்தஸ்வாமி. இங்கே குருவென்று இருவரையும் க்ரஹிக்கலாம். 'ஏகேந த்வாப்யாம் த்ரிபிரஷ்டபிர் வா' ச்வேதாச்வதரச்ருதியில் 'ஜாயமாநதசாப்ரப்ருதிபகவத்கடாக்ஷேண, யஸ்ய தேவே பராபக்தி: இத்யுக்தரீத்யா தேவகுருபக்திப்யாம்' என்று உபநிஷத் பாஷ்யப்பொருள். 'ஆசார்யன் திருவுள்ளத்தால் அல்லது ஆசார்யன் கர்மசக்ஷுஸ்ஸின் கடாக்ஷத்தால் என்று சொல்லும் விகல்பம் ஸ்வரஸமாகாது. கண்கள் பார்ப்பதற்கு மனஸ்ஸின் ஸஹகாரம் நியதம். பின் சொன்னதில் இரண்டும் அடங்கிவிடும். இரண்டு சொல்லுவதில் ஒன்றையாவது பகவத்கடாக்ஷபரமாகச் சொல்லக்கூடாது என்பரோ? ஆசார்யகடாக்ஷாநுயாயியான பகவத்கடாக்ஷம் பேற்றை அளிக்கும்.

அநிபுணபத்ததி 8-வது சுலோகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீபட்டட்பாஸ்வாமி ஸாதித்த பொருள்கள்— (1) ஸமயம் என்பது தன் ஸ்வந்த ஸித்தாந்தம். மற்ற சாஸ்த்ரங்களில் நிபுணராயும் ஸ்வந்தஸித்தாந்தத்தில் ச்ரத்தையும் ஜ்ஞானமுமில்லாமல் அதற்கு விரோதமாக உரைத்தால் பரிஹஸிக்கப்படுவான். (2) செல்வச்செருக்கினால் மதம் தலைகொண்டு தலைநிமிரப் பார்ப்பவனுக்கு ஓர் ஆபத்து வந்தால் உலகம் சிரிக்கும். ஒருகால் செல்வம் தொலைந்துவிடும் என்று பயந்து எல்லோருக்கும் ப்ரியமும் ஹிதமுமான ந்யாயமார்க்கத்தில் தனிகர் நடக்கவேணும். (3) சந்திரன் பகவானுக்கு இடது கண்ணாயிருப்பவன் (வாமத்ருஷ்டி). ஆகாயத்தின் உச்சியில் ப்ரகாசித்தாலும் அஸ்தமனத்தை அடைந்தபோது பரிஹஸிக்கப்படுவான்; ப்ரதிபத்தில் (ப்ரதமையில்) நவா (புதிதான) ஆமம் (அமா என்றும் அமாவாஸ்யை பர்யந்தம் த்ருஷ்டியை (தர்சனத்தை) உடைய சந்த்ரன் க்ருஷ்ணபக்ஷஸமயத்தில் நடு திசைக்கு மேல் கீழே விழுதலை அடைவான். (4) க:—நான்முகரான ப்ரஹ்மா நிக்ஸமுந்தராயினும், ஜகத்ஸ்ருஷ்டி முதலியது செய்யும்படியான ஜ்ஞானஉயர்த்தியைப் பெற்றிருந்தாலும், அஹங்காரம் அடையும்போது வேதாபஹார ஆபத்தை அடைந்து சிரிக்கப்படுவார். (4) கச்சித் ஓர் காகம். ஸீதையின் ஸ்தனத்தில் (ஸ்தனேன இவ என்றும் பதம் பிரிக்கலாம்). வாமமான (க்ரூரமான) கண்ணைப்போட்டு ஸர்வஜகத்தும் திரிந்து பூமியில் நிபதிதனாகையில் சிரிக்கப்படுவான். (6) கச்சித் ஓர் பரமாத்மா (கண்ணன்). வாமத்ருஷ்டிகளான கோபஸ்த்ரீகளின் தனதடத்தை யடைந்து, அதனால் மேன்மை பெற்றாலும், பாரதயுத்தத்தில் ஆயுதம் தொடுவதில்லை என்று உறுதி செய்தஸமயத்தில் (ப்ரதிஜ்ஞையில்) பதனத்தை (நழுவுதலை) அடைந்து துர்யோதனாதிகளால் அவமதிக்கப்படுகிறான். "கோபாங்கஸ்தனகிரிதட ஸம்ப்தம்." அதனால் மேன்மை. ஸௌசீல்யத்தால் மேன்மை. பீஷ்மயுத்தத்தில் ஸமயத்தை (சபதத்தை) விட்டதும் பக்தபராதீனத்வமென்பதை அறியாமல் 'அவஜானந்தி மாம் மூடா:' என்றபடி துர்யோதனாதிகள் பரிஹஸிப்பது. இப்படி ரத்னங்களான பொருள்கள் [illegible]றன. இப்படிக் காட்டுவார் யார்?

189814

ஸ்ரீ:

உ த் தி ர வா த மா ன

வைரங்கள் முதலிய ரத்தினங்களால் செய்த பொன், வெள்ளி நகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், பெங்களூர், சேலம், மதுரை, காசி முதலிய பல ஊர் பட்டு, ஜவுளி தினுசுகளும் இங்கு கிடைக்கும்

தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

V. ராமய்யங்கார்,
கவர்னிங் டைரக்டர்.

ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்,
109, சைனுபஜார் ரோட்,
பைராகிமடம் கோவில் சமீபம்,
மதராஸ்

நேமம் ப்ரம்மஸாயுஜ்ய புஸ்தகாலய ப்ரசுரங்கள்.

1.	மோக்ஷ வழி. (கீதை உபநிஷத் பிரமாணம்)	... 1 0 0
2.	ஸம்ஸ்க்ருத தமிழ் அகராதி (கிரந்த எழுத்தில்)	... 4 0 0
3.	அமர ஸங்க்ரஹம் சுலோக வ்யுத்பத்தி அர்த்தத்துடன்	... 1 5 0
4.	தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி	... 1 4 0
5.	ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி	... 2 8 0

6 ரூபாய்க்குக் குறையாத ஆர்டருக்கு 25% கமிஷன் தனிப்ரதிக்கும் சந்தாதாரர்களுக்கும் 20% கமிஷன் கொடுக்கப்படும்,

விலாஸம்:— நெ. ஈ. துரைசாமி அய்யங்கார்,
ஸம்ஸ்கிருத புஸ்தக வியாபாரம்,
24, ஸ்டேஷன் ரோட், வில்லுவாக்கம்,
மதராஸ்

Registered No. M. 3343

எல். ஜி.

L. G.

இந்த அடையாளமுள்ள

பெருங்காயம்

பார்த்து வாங்குங்கள்.

தங்கப் பதக்கங்கள் பெற்றது.

பவுன் ரூ. 1-14.

மணம், குணம், எல்லாம் உயர்ந்தது

சௌக்யத்திற்குச் சிறந்தது.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

லால்ஜி கோது அன் கம்பெனி,

சௌகார்பேட்டை, சென்னை.

தலைமை ஆபீஸ் : பம்பாய் (3) — கிளை : கும்பகோணம்.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

"ABALA-KALPAM"

The Best Uterine and Haematinic Tonic and An Excellent Alterative in Long standing Cases of

MENORRHAGIA AND LEUCORRHŒA IN WOMEN.

Preparation:- An Ideal Extract in syrup form with a sweet taste and containing the essence, besides other drugs, barks and roots, of Asoka bark originally used very successfully by the great physician of yore, CHAKRADATTA, in all cases of uterine affections and specially in Menorrhagia.

Action and Uses:- Particularly indicated in Menorrhagia of young women establishing the menstrual functions and improving the tone of nervous system. **Highly effficatious in all case of menstrual disorders, profuse and painful menstruations spasmodic pain in uterus, ovarine organs, abdomen and loins, uterine hæmorhage, giddiness of head, excssive thirst during, Menstual periods, constant abortion or miscarriage, etc.** Readily alleviates Leucorrhœa and removes debility, anaemia, resulting from profuse Menstruation, weakness after confinement, etc.

Dose:- Half to one teaspoonful twice a day before meals diluted with or followed by 1 to 2 oz. of warm cow's milk. No Diet Restriction. **Price:-** One bottle of 12 oz. - 2-8-0

289 ESPLANADE. MADRAS. P. O. BOX 151

Printer. M.K. Parthasarathi Iyengar, Sri Komalamba Press, Kumbakonam
Edited and Published at Srirangam by A V Gopalachariar.
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.